# விவேகி

VIVEKI — திங்கள் இதழ்



டிசம்பர் 1963 விலை சதம் 40.

விவேகி

இன, மத, கட்சிச் சார்பற்ற
திங்கள் இதழ்

காரியாலயம் :
32, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(இலங்கை)

274

விவேகியிற் பிரசுரமாகும் எழுத்தோவியங்கள் அத்தனையும் கற்பனையே. இறந்தோர், இருப்போர் எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவற்றை எழுதியவர்களே அவற்றுக்குப் பொறுப்பாளராவர்.

## இந்த இதழில்.........

நமது செய்தித்தாள் ... 5
யாழ். மாநகர பிதாக்கள் 8
M. A. யும் B. A. யும் ... 9
துணிவும் பயமும் ... 11
இரவில் வந்தவள் ... 14
அகந்தையின் அழிவு ... 16
டக்டக் பதில் ... 17
தற்கால உலகமும் இலங்கையும் ... 21
பேசும் திரை ... 29
அழகு கண்டேன் ... 32
நோத் முதல் கோபல்லாவை வரை 34
ஆசை ... ... 37
தமாஷ் ... ... 38
மதிப்புரை ... ... 40
புத்தகம் ... ... 41
சுகவாழ்வு ... ... 44
கல்வி வளர்ப்போம் ... 46
'அகத்தியன் அனுமான்' இசைப்போட்டி 47
கடவுளும் மனிதனும்... 49
சாரதா, என்னை மன்னித்து விடு ! 54
இயற்கைப் பெண்ணுள்... 60
கீரிமலையின் கீர்த்தி ... 61
பெண்ணே !... ... 65
நாளை முதல்... ... 66
தேன்மொழி... ... 70
இதுதான் நாகரிகமா ? ... 72
வல்லவனுக்கு வல்வன் ... 74
மோகனக் கைநீட்டு ... 79
குறுக்கெழுத்துப் போட்டி 81

# கடவுள் வணக்கம்

சேயனே னேதுபிழை செய்திடினு முன்னரிய
செம்பதம் போற்ற மறவேன்
சிறுவனின் குதலைமொழி பரிவுடன் கேளாத
செவியுள்ள தாயு முண்டோ !

தாயருள் சுரந்தெனைத் தாங்கா திருந்திடிற்
தனயனென் னுயிர்கலங்கும்
தந்தைதன் பொல்லாத மைந்தன் கலங்கிடத்
தயவின்றி வாழுவானோ !

தீயனே னுயினும் நேயமே கொண்டுனது
திருவருட் பார்வை தந்து
செஞ்சொலா னுன்னைத் தினந்துதித் தேத்திடும்
சீவியந் தந்தாளுவாய்.

தூயனே யுன்னரிய "தொண்டரது தொண்டரின்
தொண்டர்கள் தொழும்பனுக்கி"
சுகவாழ்வு தந்தென்னை மறவாம லாள்பரஞ்
சோதியே சுகவாரியே !

விவேகி
VIVEKI — திங்கள் இதழ்

"வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

விவேகம் 4 | சோபகிருது ஞூ மார்கழி (டிசம்பர் 63) | அறிவு 12

# பேராசை

பேராசை - மனித குலத்தின் தீராத வியாதி. அடக்கியாள முடியாத மயக்கம் வீழ்ச்சிக்கு வித்து. தோல்விக்குத் துணை தரித்திரத்துக்குத்தாய் உண்பது நாழியும் உடுப்பது நான்கு முழமுமாக உள்ளவன் எண்பதுகோடி எண்ணி ஏங்குவது பேராசையின் விளைவன்றி வேறில்லை.

தினை விதைத்தால் தினை விளையும், வினை விதைத்தால் வினை விளையும் என்பதுபோலப் பேராசையின் விளைவு தீராத சஞ்சலந் தான். பேராசையின் பேரழிவுகளுக்கு அழிந்துபோன சாம்ராச்சியங்களும் சரிந்துபோன மணிமுடிகளும் சான்றுகளாய் விளங்குகின்றன.

"இறல் ஈனும் எண்ணாது வெஃகின்" என்று வள்ளுவர் இயம்பினர். பேராசை மரணத்தையும் பரிசாகத் தரும் என்பது அவர் கருத்து "பேராசை பெரு நட்டம்" என்னும் பழமொழியும் காண்க.

பேராசையானது "ஆரா இயற்கை அவா" என்கிறார் வள்ளுவர். இந்த அவாவானது வாழ்க்கையின் பல கோணங்களிலும் மனிதனை ஆட்டி அலைக்கிறது. குதிரைப் பந்தயங்களும், பகுத்தறிவுப் போட்டிகளும் அதிட்டப் பரிசுகளும் பல பூத ரூபங்களுடன் தோன்றி மனத்தை மயக்கிப் பேராசைத் தீயை மூண்டெரியச் செய்கின்றன. ஒன்று எய்தி நூறு இழக்கச் செய்கின்றன.

எவ்வளவு அவா உண்டோ அவ்வளவுக்குத் துன்பமும் உண்டு என்பது உண்மை. "ஆசையே துன்பத்துக்குக் காரணம்" என்பது புத்தர் பிரான் வாக்கு

"அவா இல்லார்க்கு இல்லாகும் துன்பம்
அஃதுண்டேல் தவா அது மேன்மேல் வரும்"

என்பதும் பொய்யாமொழி எனவே "ஆசைக்கோர் அளவில்லை" என்பதை எண்ணி ஆசை வேகத்துக்கு அணை கட்டித் தடுத்துத் துன்பத்திற்கு ஒரு முடிவு கட்ட முயலவேண்டும்.

பேராசையானது துன்பத்தை மாத்திரம் தரவல்லது என்று எண்ணுதல் பிழை அது குற்றமும் கொடுக்கும்.."குடிபொன்றிக் குற்றமும் தரும்" என்பது வள்ளுவர் மொழி. தனக்கு உரிமையற்றனவற்றைத் தான் பெறக் கருதும் பேராசைக்கு அடிபணியும் போது குற்றமும் நம்மை வந்து சூழ்கின்றது என்பதை உணர்தல் வேண்டும். பிறர் உடைமை கவர எண்ணுதல் பிழையன்றோ ? பேராசைப் பேய் உள்ளத்தில் நின்றும் விலகுமாயின் தூய்மை சுடர்விடும்; இன்பம் நிழலிடும், அமைதி தாண்டவமாடும். செல்வம் செழிக்கும் ஆசைதனை அடிமை கொண்டவன் அகிலத்தையே அடிமை கொண்டவனாய் மதிக்கப்படுவான் என்பது ஆன்றோர் கூற்று.

புலனடக்கிப் புனிதரான உத்தமரின் வாழ்க்கை ஆசை யடக்கத்தின் வெற்றிக்குப் போதிய ஆதாரங்களாய் மிளிர்கின்றன. இதற்கு மாறாய் பேராசையால்—பேராசை வயப்பட்டு வெந்து கருகி நீறாகும் மனித குலத்தையும் காண்கிறோம்.

வாழவேண்டும் என்று எல்லோரும் விரும்புவது இயற்கை. ஆனால் தான் மட்டுமன்றி எல்லோரும் வாழவேண்டும் என எண்ணுவதே தர்மம். எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று விரும்பும் நல்லோர்களிடம் "அவா இன்மை" காணல் இயல்பு. ஆகவே

அறியாமையால் நிலையற்ற இன்பங்களை விரும்பி "ஆசைக்கு அடிமைப்படும்" பரிதாப நிலை மாறி—அறிவு ஒளி பெற்று நாம் மனித சமுதாயத்தில் அன்புத் துணையுடன் வாழப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

பேராசை ஒழிக! பேரின்பம் வளர்க.

# நமது செய்தித்தாள்

**ஆயிரம் ஆயிரம் இதயங்கள் ஏங்கித் தவிக்கின்றன !**

"உங்களுக்காக உங்கள் நாடு என்ன செய்யும் என்று கேட்காதீர்கள் ; உங்கள் நாட்டுக்காக நீங்கள் என்ன செய்யலாம் என்று கேளுங்கள்."

அமெரிக்க நாட்டு மக்களைப் பார்த்து இப்படிக் கூறி அவர்களைக் கடமை வீரர்களாக்கிய அமெரிக்க ஜனாதிபதி கென்னடி,

காதகன் ஒருவனின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி உலக மக்களையெல்லாம் கண்ணீர் வெள்ளத்திலாழ்த்தி விட்டு...

எங்கோ கண்காணாத இடத்துக்குச் சென்று விட்டார் ! இல்லை, மனித இனம் அணுக முடியாத இடத்துக்குப் போய் விட்டார் !

46 வயது நிரம்பிய கென்னடி அவர்கள் 1961-ம் ஆண்டு ஜனவரி 20-ம் திகதி அமெரிக்க ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்டார். 1963-ம் ஆண்டு நவம்பர் 22-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தச்சொற்ப காலத்தில்...

அவர் நாட்டு மக்களுக்காக—உலக மக்களுக்காகச் செய்த சேவை சொல்லியடங்காது !

கென்னடியின் தலைசிறந்த சாதனையாக இன்றைக்கும் திகழ்வது அணு ஆயுதப் பரிசோதனைகளைத் தடைசெய்யும் இயக்கம் ஒன்றை ஏற்படுத்தியதுதான் நூற்றுக்குமேற்பட்ட நாடுகள் அதை ஒப்புக்கொண்டன !

எப்படி 15 ஆண்டுகளுக்கு முன்னர் காந்திமகான் சுட்டுக் கொல்லப்பட்டபோது இந்தியா கண்ணீர் சிந்தியதோ அதே போன்றும் அமெரிக்கா முழுவதும் அவனியெங்கும் கண்ணீர் வெள்ளம் கரை புரண்டோடுகிறது !

**அண்ணாவும் தோழர்களும் சிறையில் !**

இந்தி திணிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் போவதாக தி. மு. க. தலைவர் அறிஞர் அண்ணா பகிரங்கமாக அறிவித்த போது—இந்திய அரசாங்கம் கலங்கி நிலை தடுமாறியது; மக்களெல்லாம் கொதித் தெழுந்து, மகுடத்தைப் பறித்துவிடப் போகிறார்களே என்று பயந்தது!

அதன் விளைவு ?—

அறிஞர் அண்ணாவும் தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள்! தலையைப் பிடித்துவிட்டோம், வால்கள் இனி என்ன செய்யும் என்ற எண்ணத்துடன்!

ஆனால் —

மிஞ்சியிருந்த கழகத் தோழர்கள் சும்மா இருந்துவிடவில்லை! கொதித்தெழுந்தார்கள்!

கைது செய்யப்பட்டார்கள்!

இப்படி எவ்வளவு நாட்களுக்கு ?—

இப்போது அரசாங்கம் என்ன செய்வது என்று தெரியாமல் விழிக்கிறது; முழிக்கிறது!

நிச்சயம் கழகம் வெற்றி பெறும்! அடக்கு முறையைப் பாவிக்கும் அரசாங்கத்திற்கு கிடைக்கப் போகும் பரிசு—

தோல்வி!

## யார் மேயர்?

யாழ். மாநகரசபைத் தேர்தல் ஒரு விதமாகப் பலத்த மோதலினிடையே முடிவடைந்துவிட்டது! அடேயப்பா, ஒரு சனியன் தொலைந்தது என்று எண்ண முன்னரே மற்றுமோர் 'தலையிடி தரும் பிரச்சனை' கிளப்பப்பட்டிருக்கிறது!

அதுதான் —

யார் மேயர் ?

என்ற கேள்வி! பலர் மேயராவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். மாஜி மேயர் ரி. எஸ். துரைராஜா தான் மேயராவதற்காக காங்கிரஸ் —தமிழரசு கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதே சமயத்தில், தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திரு. எஸ். சி. மகாதேவாவும்தான் மேயராவதற்கு முயற்சி செய்வதாகப் பலரிடையே பேச்சு அடிபடுகிறது! முன்னர் ஒரு முறை மேயராக இருந்த யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. அல்பிரட் துரையப்பாவும் தான் மேயராவதற்கு முயற்சிசெய்துகொண்டிருக்கிறார்.

ஐயா, மேயர் பதவியே! நீ யார் தலையில் போய்க் குந்திக் கொள்ளப் போகிறாயோ ?

## காப்பாற்றுவது யார் ?

குருநாகல் பகுதியில் உண்மையாகவே நடந்த சுவையான சம்பவம்!

பதினைந்து வயதுப் பையனுக்கும், அதே வயதுடைய சிறுமிக்கும் தொடர்பு ஏற்பட்டுக் கொண்டதன் விளைவாக, அச் சிறுமி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

இச் சம்பவம் கோட்டடி வரை சென்றது!

அங்கே—

பெண்ணின் தகப்பனார் இப்படியாகச் சாட்சி கூறினார் :

"நானும் எனது மனைவியும் காட்டுக்கு விறகுவெட்டப் போவது வழக்கம். அந்நேரத்தில் எனது மகளைத் தனித்து விட்டுப் போவதற்குப் பயந்தபடியால், இச்சிறுவனை (பதினைந்து வயதுடைய) துணைக்கு விட்டுச் செல்வோம் அப்போதுதான் எனது மகளுக்கும் இவனுக்கும் தொடர்பு ஏற்பட்டுக் குழந்தை பிறந்திருக்கலாம் என நினைக்கிறேன்!" என்றார்.

நீதிபதி பையனை விசாரித்தார்; பையன் தன் கண்களை உருட்டிப்பிரட்டியபடியே தன் குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

இப்போது நீதிபதிக்குப் புதியதோர் பிரச்சனை கிழம்பியது.

பதினைந்து வயதுப் பையன் எப்படி இச்குழந்தையையும் சிறுமியையும் காப்பாற்றுவான்? அப்படியானல்—

யார் காப்பாற்றுவது? இது தான் பிரச்சனை.

வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது!

## பாகிஸ்தான் ஜனதிபதியின் இலங்கை வருகை!

பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்ஹான் இம்மாதம் இலங்கை வந்தார். அவரை இலங்கை அரசாங்கம் வேண்டிய மரியாதைகளுடன், இருகை நீட்டி வரவேற்றது! அவரது வருகை இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயுள்ள தொடர்பைநட்பை கூட்டியிருக்குமென்று எண்ணுகிறோம்!

## திருவண்ணுமலைக்கருகே ரயில்களின் பயங்கரமோதல்!

சென்னை, திருவண்ணுமலைக் கருகே பிரயாணிகளை ஏற்றிச் சென்ற ரயிலும், 'கூட்ஸ்' ரயிலும் மோதுண்டன! என்ஜின்கள் இரண்டும் தூள் தூளாயின. என்ஜின் டிரைவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினர்! பலர் காயங்களிடையே தப்பிப் பிழைத்தார்கள்!

# "ஒன்று கொடுத்தார்"

பகுதி

அடுத்த விவேகியில்

இடம்பெறும்.

## யாழ்ப்பாணப் புகையிரத நிலையம்

யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்ட புதிய புகையிரத நிலையம் கடந்த 17–12–63 செவ்வாய்க்கிழமை எவ்வித ஆடம்பரமுமின்றி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. பல வசதிகளுமுடையதாய், அழகாக அமைக்கப்பட்டிருக்கும் இப் புகையிரத நிலையத்தால் மக்களுக்கு அதிக வசதிகள் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

# யாழ். மாநகர பிதாக்கள்-1964

1. கோட்டை வட்டாரம்
திரு. A. G. இராசசூரியர்

2. குருநகர் வட்டாரம்
திரு. M. S. பேரின்பநாயகம்

3. கதீட்றல் வட்டாரம்
திரு. P. F. சேவியர்

4. கொய்யாத்தோட்ட வட்.
திரு A. T. துரையப்பா, M.P.

5. கொழும்புத்துறை வட்டா.
திரு. த. கந்தையா

6. அரியாலை வட்டாரம்
திரு. S. C மகாதேவா

7. நாயன்மார்கட்டுவட்டாரம்
திரு. A. நடராசா

8. நல்லூர் வட்டாரம்
திரு. A. துரைராசசிங்கம்

9. கந்தர்மடம் வட்டாரம்
திரு. S நாகராசா

10. வண்ணார்பண்ணை வட்டா.
திரு. T. S. துரைராசா

11. பழைய பள்ளி வாசல் வட்.
ஹாஜி V. M. M. அபுசாலி

12. புதிய பள்ளி வாசல் வட்.
குவாஸி M. M. சுல்தான்

13. பஜார் வட்டாரம்
திரு. K. V. தெய்வேந்திரன்

14. ஸ்ரேசன் வட்டாரம்
திரு. N. T. செல்லத்துரை

15. சுண்டிக்குளி வட்டாரம்
திரு. P. S. சோமசுந்தரம்

16. பாஷையூர் வட்டாரம்
திரு. J. S. அழகையா

17. நாவாந்துறை வட்டாரம்
திரு. அன்ரனி நீக்கிலாப்பிள்.

(தைமாத முதல்வாரத்தில் இவர்களில் ஒருவர் மேயராகத் தெரிவு செய்யப்படுவார்.)

## அன்பான வேண்டுகோள்

இவ்வருடத்துக்குரிய "விவேகி" சந்தாப்பணத்தை செலுத்தாத அன்பர்கள் இம்மாத முடிவுக்குள் தங்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தி ஆதரவு நல்குவார்களென எதிர்பார்க்கிறோம்.

# B. A. யும் M. A. யும்

பே. பங்கிராஸ் ஜெயரெட்ணம்

அமெரிக்கன் உறுப்பில் அழகாகக் கட்டி எழுப்பிய எடுப்பான கட்டடம். அதன் முன்னால் பொருத்தப் பட்டிருக்கும் அறிவிப்புப் பலகை. அது பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர் தண்டாயுதத்தின் வீடு என்பதைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

ஹோல் நடுவில் அமர்ந்திருந்த ஆசிரியர் தண்டாயுதம் அன்றைய தினசரிப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். படாச்! படாச்!! என்ற சத்தத்தைக் கேட்டுக் கிணற்றடிக்குச் சென்றவர், சில விஞடிகள் அசந்து போய் செய்வதறியாது நின்ருர். காரணம் அவர் மனைவி இரத்த வெள்ளத்தில் குப்புறக் கிடந்தாள். நாடியைப் பரிசோதித்தவர் ஓ!!! வென்று அலறியே விட்டார். பாவம்! மணந்து ஆறு மாதங்கள் கூட ஆகியிருக்காது. பொன்னுன மங்கை போக வேண்டிய இடத்தை அடைந்து விட்டாள்.

அவர், மனைவி வசந்தாவை மணம் புரிய முன்னரே பீடித்திருந்த இருதய நோயைப்பற்றி ஆசிரியர் அறிவாரா? புகழுடன் இருக்கவேண்டிய இளம் குடும்பம் இப்படிப் பூமிக்கு இரையாகுவதா? என்று அக் கிராமத்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

ஈமச் சடங்கிற்குப் பெரும் கூட்டம் கூடியிருந்தது. இப்படியான மக்கள் கூட்டத்தை அக் கிராமம் எந்த விதமான நிகழ்ச்சிகளிலும் பார்த்ததில்லை. ஒரு வாரம் சென்றிருக்கும், கிராமவாசிகளின் உள்ளங்களில் போராட்டம் தொடங்கியது, காரணம் ஆசிரியர் தண்டாயுதத்தின் போட் பலகையில் ஏற்பட்ட மாறுதலே. அதில் H. தண்டாயுதம் B. A. என்று இருந்தது. மக்கள் மனதை ஆட்டி வைத்தது B. A. என்ற இருசொற்களே.

இவர் பயிற்சி பெற்ற ஆங்கில ஆசிரியர்ஆச்சே! எப்படி B. A. பட்டத்தைப் பெற்ருர்? என்பது மக்களுக்கு கலவரத்தைக் கொடுத்தது. இதற்குரிய உண்மையான விடையை நேரடியாகக் கேட்டு அறியும் துணிவு ஒருவருக்கும் வரவில்லை. ஆகையால் ஆசிரியர் தண்டாயுதத்திற்கு அநுதாபம் தெரிவிக்கும் நோக்கத்துடன் விழா ஒன்றை ஏற்பாடு செய்தனர் அக் கிராமவாசிகள்.

அழைப்பின் பேரில் ஆசிரியர் தண்டாயுதம் விழாவிற்குச் சமுகம் கொடுத்தார். தலைமை வகித்த கிராமச் சங்கத் தலைவர், ஆசிரியர் அவர்களது தாங்கொணுத் துயரைக் குறித்து தமது அநுதாபத்தைத் தெரிவித்தன்பின் ஆசிரியர் தண்டாயுதத்தை உரை நிகழ்த்துமாறு வேண்டி அமர்ந்தார்.

பேச்சுக் கெழுந்த ஆசிரியர் தண்டாயுதம் நன்றி தெரிவித்து விடை பெறும் தருணத்தில்,

"தம்பி, ஏதோ நீ பி. ஏ. பட்டம் பெற்று இருக்கிறாயாம் எப்ப நீ படிச்சனீ? றேனிங்காலே வெளிக்கிட்டு ஒரு வருஷம் கூட ஆகல்லே. இப்படி இந்தப் பட்டத்தைத் தட்டிணுய்?" என்று குடும்பியும் கடுக்கனும் உள்ள கிழட்டுக் குரல் மக்களிடையே இருந்து தளதளத்தது.

அன்புடையீர்! நான் தற்போது பயிற்சி பெற்ற ஆசிரியரே B. A. என்று போட்டதன் காரணம் (Bachelor Again) அதாவது திரும்பவும் பிரமச்சாரி என்ற பொருள்படவே என்று கூறி முடித்தார்.

பாவம்! எல்லா முகங்களிலும் அசடு வழிந்தது. வாயைப் பிளந்த வண்ணம் இருந்தார்கள். அன்றைய அநுதாபம் காட்டும் முகமாய் நடந்த விழா எல்லோரையும் வெட்கமடையச் செய்ததுமல்லாமல் ஒருவரோடொருவர் பேசுவதற்குக் கூச்சப்பட்டார்கள் தமது மடைமையை நினைந்து.

இரு மாதங்கள் சென்றிருக்கும், ஆசிரியர் தண்டாயுதம் மறுபடியும் திருமணம் செய்துகொண்டார். மறுதினம் அவரைக் கௌரவிக்கும் முகமாக வீடு வந்தோர் வீட்டின் முன்னர் இருந்த பெயர்ப் பலகையில் B. A. க்குப் பதில் M. A என்று இருந்ததைக் கவனித்தவர்கள் மேலும் கலவரப்பட்டபடி உள்ளே சென்று தாம் கொண்டு வந்தபரிசுகளையும் வழங்கி அமர்ந்திருக்கும்போது ஒவ்வொருவர் மனதிலும் இனம் அறியாத முகமாற்றம், எதையோ யோசித்துக் கண்டு பிடிப்பவர்போல் காணப்பட்டார்கள். இவர்கள் மனப் பிராந்திக்கு முற்றுப்புள்ளி போடுவது போல் தளதளத்த குரல் ஒன்று எழுந்தது.

"தம்பி, நீ உன் பெயருக்குப் பக்கத்தில் ஒரு முறை B. A. என்று போட்டு எமது கிராமத்தையே ஆட்டிவிட்டாய். இப்போது வேறு M. A. என்று போட்டு மேலும் இலங்கைத் தீவையே கலவரப்படுத்துகிறுயே என்று தான் எமது மனதுக்குள் டிக்கு! டிக்கு !! என்கிறது. உனது மனைவி இறந்ததும் நீ தண்டாயுதம் B. A. என்றுய். மறுமணம் செய்ததும் தண்டாயுதம் M. A. ஆக்கிவிட்டாய் எனறு ஆச்சரியக் குறியுடன் பேச்சை நிறுத்திஞர்.

முறுவலித்த ஆசிரியர் தணடாயுதம், ஐயா! நீங்கள் சொல்வதுபோல் மறுமணத்தின் பின் M. A. ஆகிவிட்டேன். ஏனென்ருல் நான் இப்போ (Married Again) அதாவது மறுமணம் செய்து கொண்டேன் என்ருர்.

அப்பாவிக் கிழவன் தனது கண்ணை மூடி பொக்குவாயை அகலவிரித்து இளித்தபோது இரு சொக்கையிலும் பெருத்த இருகுழிகள் விழுந்தன.

---

அன்பு மனித குணங்களின் பலமீனமான சக்திகளுள் ஒன்று ஆனல் அது மிருகங்கள் சாதிக்காததைசாதிக்கும் பேராற்றல் பெற்றது.

—ஒயிட்

# துணிவும் பயமும்

— ந. முழந்தைவேல் —

வீரனது வீரப் பேச்சுத்தான் பலத்த குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது. என நண்பர்களில் வீரமும் துணிவும் மிக்கவன் வீரன் தான் அவன் என்றும் தன்னைப் பற்றிப் பெருமையாகக் கூறிக் கொள்வான். இவனது குணம் தனனைப் பற்றிப் பெருமை கூறிக் கொள்வது. ஆதலால் என் மற்ற நண்பர்கள் வீரனை "புளுகன்" என மறைவாகக் கூறுவார்கள். எதிரில் வெடுக்கெனக் கடித்துக் கொள்வது நட்புக்குப் பங்கமல்லவா ?

ஒருநாள் நானும் வீரனும் என் உடன் நண்பர் மற்ற மூவருமாகப் படம் பார்ப்பதற்கு அயற் கிராம மொன்றிற்குச் சென்றிருந்தோம். அன்று நாங்கள் பார்த்த படத்தில் பல பயங்கரக் காட்சிகளும் இடம் பெற்றிருந்தன இவைகளைப் பற்றிப் படம் கலைந்து வரும் போது நீ முந்தி நான் முந்தி என்ற முறையில் "வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல" எல்லோரும் மளமள வெனக் கதைத்துக் கொண்டு வந்ததனால் நடந்து வந்த களைப்புக் கூட இல்லாமல் எங்கள் கிராமத்தை நெருங்கிக் கொண்டிருந்தோம். அப்போது வீரனுக்கு எங்கள் கிராமமான குருமண்வெளி மயானக் கரையை நான் ஞாபகப் படுத்தினேன் ஏனெனில் இன்று அவனது திறமையை அறியவேண்டுமென்ற ஆவல் எனக்கிருந்தது. எனக்கு மட்டுமென்ன எனது பேச்சைத் தொடர்ந்து மற்ற நண்பர்களும் அதனைத் துரிதப்படுத்தினர். எங்களை யறியாமல் கால்கள் தம் வேலையைச் செய்து கொண்டு வந்தன. எங்களூரின் பிரபல முச்சந்தியான ஓர் வாகை விருட்சம் அமைந்த அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தோம். அன்று பூரணஇரவு, களங்கமற்ற நீலவானத்தின் உச்சியை நோக்கிப் பூரணைச் சந்திரன் சென்று கொண்டிருந்தான். சுமார் பதினொரு மணியிருக்கும், ஊர் அடங்கி விட்டது. ஒரு புறத் தேயிருக்கும் பரந்த வயலிலிருந்து விட்டு விட்டொலிக்கும் நீர்த்தாரா முதலிய பறவைகளின் ஒலிகளும் மறுபுறத்தே நாய்களின் ஊளைச் சத்தமும் மாறி மாறி ஒலித்துக் கொண்டிருந்தன. கடலிரைச்சல் கல்லாமாந்தாது கழறலேபோன்று ஓயாது கேட்டது. இதனிடையில் எங்களது வாக்கு வாதங்களும் நடந்து கொண்டிருந்தது.

முடிவில் நாங்க ளெல்லோரும் சேர்ந்து வீரனைச் சுடுகாட்டிற்குச் சென்று சொல்லப்பட்ட இடத்தில் நின்று அவ்விடத்திலுள்ள ஆலமரத்தில் இக்கயிற்றைக் கட்டி

விட்டு வரும்படி கூறினோம். வீரனல்லவா? பந்தயம் கட்டினான். அவ்வாறு வீரன் செய்தால் நாங்கள் ஆளுக்கைந்து ரூபா அவனுக்குக் கொடுக்கவேண்டும். ஆனால் எல்லாவற்றிற்கும் துணிவுள்ளவன். பேய் என்றால் சிறிது பயம்தான். வெளியில்காட்டிக்கொள்ள மாட்டான். பேய் என்று ஏதாவது கூறினால் அவனது மெய் சிலிர்க்கும். அதனை விரைவில் சமாளித்துக் கொள்வான். நாங்கள் இப்பந்தயத்தைக் கூறியவுடன் பண ஆசை அவனையும் விட்டுவிடவில்லை. யாருக்குத்தான் இல்லை. அவனும் விரும்பியதில் வியப்பில்லையல்லவா? துணிந்தான். தனியே செல்ல ஒப்புக் கொண்டான்.

நடு நிசி எங்கும் ஒரே அமைதி! பேய் என்றால் ஒரே பயத்தினால் மெய் சிலிர்ப்பவன் இன்று இதற்குத்துணிந்தது விந்தைதான். "வீரா! பெண் என்றால் பேயும் இரங்கும்' என்று அவனைப் பயமுறுத்தினான் என் நண்பர்களில் ஒருவன். இக்கூற்று பழமொழி உண்டு. ஆண் என்றால் இரங்கவே இரங்காது" என்று அவனுக்கு "எரியும் நெருப்பில் எண்ணெய்ய ஊற்றினால் போல்" இருந்தது. இன்று இதனை நிறைவேற்றாது விட்டால் எனக்கு இனி மானமே இல்லை வெறும் புளுகன் என்று என்னைத் தூற்றுவார்களே! என்று எண்ணினான்,

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா
—அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்

எனும் வள்ளுவர் குறள் நினைவிற்கு வந்தது. இவற்றையெல்லாம் சிந்தித்துக் கொண்டிருந்தவன் எங்களுக்கு ஒரு முடிவும்கூறாமல்மௌனமாயிருந்தான் என்ன பயப்படுகிறாய் போலிருக்கிறது. உன்னால் இயலாது விட்டால் சொல்லன்—என்றேன நான். அவனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை.

சிறிது நேரத்தின்பின் கயிறு எங்கே? என்று கேட்டான். இந்தா இருக்குது என்று கொண்டுவந்து கொடுத்தான் என் நண்பன். எங்களை இங்கே இருக்கும்படி கூறி விட்டு நடந்தான். நாங்கள் அங்கு இருக்கவில்லை. அவனை யறியாது பினதொடர்ந்தோம். பூரணை நில்வு அல்லவா? வீரன நடந்து செல்வது எங்களுக்கு நன்றாகத் தெரிந்தது.

நாங்கள் சென்று மயானக் கரையைவிட்டுச் சிறிது தூரத்தில் ஒரு மறைவில் இருந்து கொண்டு

---

வாழ்க்கையில் வெப்பம் தோன்றுவது செய்த தவறுகளை பிறர் சுட்டிக்காட்டும் போது! குளிர்ச்சி தோன்றுவதோ, பிறர் நம் அன்பைக் போற்றும்போது!

—பௌலர்

தன்னிடமே அன்பு செலுத்தாதவன பிறரிடம் அனபு செலுத்துவது இயலாத காரியம்!

—பெய்லி

மேற்கொண்டு நடக்கப் போவதை கவனித்தோம். விறு விறு என்று நடந்தவன் நடையைத் தளர்த்தினுன். நாங்களும என்ன நடக்கப் போகின்றதோ! தெரிய வில்லையே என்று ஆவலுடன் கூர்ந்து நோக்கிேைம். குறிக்கப்பட்ட ஆலமரத் தண்டை அடைந்தான். கரங்கள் படபடத்தன நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. அவனுல் அவனது கண்களை நம்பவே முடியாது போய்விட்டது. இதற்கெல்லாம் காரணம் மயானக் காட்டுக்குள் பலவித ஒலிகள் உறுமல் சீற்றம் எல்லாம் அவனது காதுக்குள் கணீரென ஒலித்துக் கொண்டிருந்தது. பயம் அவனைக் குடி கொண்டது உடம்பெல்லாம் வியர்த்தன. அவனுல் இனி ஒன்றும் செய்யமுடியாமல் போய்விட்டது. காட்டுக்குள் இருந்து யாரோ ஓடி வருவது போலிருந்தது. வீரன் பயந்து விட்டான். அந்நிலையில் வீரனது வீரம் துணிவு அகந்தை இறுமாப்பு இவையெல்லாம் ஓடி ஒளித்துக் கொண்டன. செய்வதின்னதென்றறியாது வந்த வழியை நோக்கி ஓட்டமெடுத்தான.

பின்னர் வீரிட்டலறிக் கொண்டு கீழே விழுந்தான். நாங்கள் ஓடிச் சென்று தூக்கினேம். மயக்க நிலையில் காணப்பட்டான். பயத்தினுல் ஏற்பட்ட மயக்கம் சிறிது நேரத்தின் பின் எல்லாம் சரியாகிவிடும் என்ருன் ஒருவன். அவன் கூறியதைப் போல மயக்கம் தெளிந்து விட்டது.

நேரம் பன்னிரண்டரை மணியிருக்கும். என்ன நடந்தது என விசாரித்தோம். பேய் அடித்து விட்டது என்று கூறினுன் அவன். கயிறு எங்கே என்று விசாரித்தோம். மரத்தடியில் கிடக்குது. நான் கட்ட இல்லை, எனக்குப் பந்தயமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாமெனக் கூறினுன் வீரன். எவ்வளவு துணிவும் வீரமும் இருந்தும் பயத்திற்கு அடிமையாகி விட்டான். காட்டிற்குள் ஒன்றும் நடக்கவில்லை அவனது நண்பர்களின் சூழ்ச்சி. இப்படி நாங்கள் செய்தோமென்று கூறினுல் ஒப்புக் கொள்வானு பயத்தினுல் பீடிக்கப் பட்டவன். ஒருபோதும் ஒப்புக் கொள்ளவே மாட்டான்.

## கலைஞனின் கண்ணீர்

முன்பொருநாள் டேனிஸ் சிற்பக்கலைஞா பெர்டெல் தொர்வால்ட்சென தான் செய்துமுடித்த ஒரு சிறபத்தின் அருகே அமர்ந்து அழுது கொண்டிருந்தார் ''ஏன் அழுகிறீர்கள்? நீங்கள் செய்த சிற்பம் உங்களுக்குப் பிடிக்கவில்லையா?'' என்று கேட்டனர் அவரைப் பார்க்க வந்தவர்கள். ''இல்லை, என் சிற்பத்தில் எந்தக் குறைபாடும் இருப்பதாகத் தெரியவில்லை எனக்கு'' என்ருர் அவர். ''பின் ஏன அழ வேண்டும்?'' என்று கேட்டனர் வந்தவர்கள். என்னுல் எவ்வித குறைபாட்டையும் காண முடியவில்லையென்ருல் எனது ஆற்றல் குன்றி வருகிறது என்பதைத்தானே காட்டுகிறது அது.'' என்ருராம் அவர்.

# இரவில் வருவாள்!

—குமார் தனபால்—

எங்கள் வீட்டின் முன் வாசலில் போடப் பட்டிருந்த மல்லிகைப் பந்தலைத் தழுவி வந்த மெல்லிய காற்று என் அறை யன்னல் ஊடாக வந்து என்னை ஆரத்தழுவிச் சென்றது. அந்த மல்லிகையின் நறுமணத்தை தாங்கி வந்த இளம் தென்றல். எனக்கு அவளின் நினைவை எழுப்பி விட்டு வேடிக்கை பார்த்தது.

நான் எஸ். எஸ். ஸி.பரீட்சைக்காக மிக ஊக்கமாகப் படித்துக் கொண்டிருந்தேன். எங்கள் வீட்டின் வலது பக்கத்தில்தான் என் அறை. வீடு முழுவதும் விளக்குகள் அணைக்கப் பட்டாலும் என் அறை விளக்கு அணைவதற்கு குறைந்தது பத்து மணியாகும்.

சாதாரணமாக அவள் ஊரடங்கும் வேளையில் இரவு பத்து மணிக்கு என்னைத் தேடிவருவது வழக்கம். அவள் என்னைத்தேடி ஓடோடி வரும்போது நான் ஏதாவது பாடப் புத்தகங்களை படித்துக கொண்டிருப்பேன். அப்போது அவளுக்கு வருகிற கோபத்தை நீங்கள் யாராவது கண்டீர்களேயானால் பயந்தேபோய்விடுவீர்கள் ஆனால் நான் பயப்படவே மாட்டேன் ஏன் என்றால் அவள் என காதலி அல்லவா ?

"நான் வந்த பிறகு என்னோடு உறவாடாமல் அப்படி என்ன படிப்பு ?" என்று வாய்விட்டுச் சொல்லாமல் புத்தகத்தை கையில் இருந்து பிடுங்கி விடுவாள். சில அறையிலும் இரவுபத்துமணி மட்டும் விளக்கு எரியும். ஏதாவது புராணப் புத்தகங்களைப் புரட்டிக கொண்டிருப்பார். அப்பாவின் அறையில் விளக்கு எரிந்தால் கூட பயப்படாமல் அவள் வந்த ஆனந்தத்தில் விளக்கை அணைத்து கதவைப் பூட்டிக் கொள்வேன். உடனே என்னைத் தழுவிக் கொள் அவளுடைய மலர்க் கரத்தின் மயக்கத்தில் இந்த அவனியையே மறந்து சொர்க்க லோகமெனக் கூறுவார்களே அங்கு போய்விடுவேன்.

அப்பாவுக்கு கொஞ்ச நாட்களாக என் மீது சந்தேகம். என் அறைக்கு இடைக்கிடை வந்து நான் படிக்கிறேனா ? என்று பார்த்து விட்டுச் செல்கிறார். எனக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி அப்பாவுக்கு "எந்த அறுவான் அள்ளி வச்சானோ ?" நேற்றைய முன்தினம் நான் அவளுக்கு எச்சரித்தேன். என்னை ஒரு பத்து நாட்கள் சந்தித்து தொந்தரவு செய்யக் கூடாது என்று. அதைச் சட்டென்று அவள் ஒப்புக கொள்வாளா ? எப்படியோ அவளின் சம்மதத்தை பெற்றேன. நான் கேட்டுக் கொண்டதின்படி அவள் நேற்று இரவு என் படிப்புக்கு

இடையூருக வந்து தொந் தரவு செய்யவில்லை. ஆனுல் அவ ளுடைய இதயத்தை அவளா லேயே 'கொன்ரேல்'' படுத்திக் கொள்ள முடியவில்லை. பாவம் காதலர்கள் நெஞ்சமே இப்படித் தானே? முதலில் கடுமையான கட்டுப் பாட்டுக்கு உடன் படுவது பின்பு அதைக் காப்பாற்ற முடியா மல் தவிப்பது. வழக்கமாக எல் லோரும் செய்யும் வேலைக்கு அவள் மட்டும் விதிவிலக்காக இருக்க முடி யுமா ?

என் மேசையில் வைக்கப்பட் டிருந்த மணிக்கூடு பத்துமணியாகி விட்டதை அறிவித்தது. ஜில் என்ற தென்றல் என் அறை ஜன்னல் ஊடாகவந்து எனை இன்பக் கட லில் வீழ்த்தியது. யாரை ஒரு பத்து நாட்கள் சந்திக்கக் கூடாது என்றிருந்தேனே அவள்... ..ஆம் என் இதயராணி அதோ வருகி ருள். படிப்பில் இருந்த கவனம் நழுவியது. அதே நேரத்தில் என் ஆந்தை முனி ''அப்பன்'' எங்கே இதைக் கண்டுவிடுவானே என்று நினைத்ததும் ''குலப்பன் காய்ச்சல்'' வந்தது போல் உடலெல்லாம் கிடு கிடுக்கத் தொடங்கியது. இப்படி நினைத்துக்கொண்டிருக்கும்போதே அவள் என் அருகில் வந்தே விட் டாள். ஐயகோ.........இந்த இன் பமயமான நேரம் பார்த்தா படு பாவி ''அப்பனும்'' வரவேண்டும். ''என்ன டாலு ஒருமாதிரி இருக் கிருய் கவனமாய்ப்படி'' என்று எச்சரித்து விட்டுச்சென்ருர். அவர் போனதுதான் தாமதம் ஒளிந் திருந்த அவள் என் அருகில் வந் தாள். அவளைக் கண்டு விட்டால் போதும் பிறகு எனக்கு இந்தக் ''கோதாரி'' உலகத்தைப் பற்றி கவலையே இல்லை. அவள்தான் எனக்கு உலகம். என் அன்புக் குரிய அந்த இன்பக்குயில் என் செவிக்கருகில் வந்து பண் இசைத் தாள். என் வெறியெல்லாம் ஒன்று சேர அவளைச் சிக்கெனப் பிடித்தேன். விளக்குகள் அணைந் தன். மன்கண்ணுக்கு கண்ணை கண்ணுட்டி என் கண்ணின் இமை களில் ஆயிரமாயிரமாக முத்த மழை பொழிந்தாள். பிற கென்ன.......அடடே.......அவளைப் பற்றிக் கூறிய உங்களுக்கு அவள் யார்? என்ற விபரத்தைச்சொல்ல வில்லையே? அவள் யாரென்று அறிய உங்கள் உள்ளம் துடிக் கிறதா? பொறுமை...பொறுமை மன்னிக்க வேண்டும். ஹி......... ஹி......ஹி...... அவள்தான்......... அவள்...தான்..அ..வ...ள்..ள்..ள்.

---

# வாழ்த்துக்கள்

'விவேகி' வாசகர்கள்—எழுத்தாளர்கள்
சந்தாதாரர்கள்—விளம்பரதாரர்கள்—ஏஜெண்டுகள்
அனைவருக்கும் எமது நத்தார்—புத்தாண்டு
வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேம்.

உருவகக்கதை

# "அகந்தையின் அழிவு"

— ரேஸ்மலர் தம்பிமுத்து —

"என்ன? எனக்கு வயது போய் விட்டது என்ற எண்ணமோ இவர்களுக்கு என்ற சிணுக்குறியை எழுப்பியது அந்த மல்லிகைச் செடி. அது அழகிய செடிதான். என்றாலும் அதனால் நிமிர்ந்து நிற்க முடியவில்லை. துவண்டு துவண்டு தரையில் விழுந்தது. அது நிமிர்ந்து நிற்கட்டுமே என்று பக்கத்தில் ஒரு பச்சைத் தடியை நட்டதும், அந்தச் செடியின் யோசனை கீழான முறையில்சென்றிருக்கவேண்டும்" ஏனெனில் அதன் செயகை அப்படிக் காட்டியது.

இக்கால மக்களிற் சிலருக்கு நன்மைக்கென்று செய்தாலும் அது அவர்கட்கு தின்மைக்கு என்று தோன்றுவதுபோல், இந்தத் தடியின் துணையால் தான் நின்றால் தன்னுடைய இளமையும் அழகும் கெட்டு, மற்றமரங்கள் தனககு வயது முதிர்ந்து விட்டது என்று எண்ணி விடுவார்கள் என்று எண்ணி தடியையும் தள்ளி விட்டு தானும் தரையில் விழுந்தது. அந்தநிலையில் அதைத் தடியுடன் சேர்த்து நிமிர்த்திவிட்டனர் சில மல்லிகை விருப்புடைய சிறுவர். மீண்டும் தன எண்ணத்தை மாற்றி வேறு விதமாக சிந்தித்தது அந்தச் செடி.


"நெல்லுக் கிறைத்த நீர்
வாய்க்கால் வழியோடி
புல்லுக்கு மாங்கே பொசி
யுமாம்"

என்றதுபோல் தனக்கு வளர ஊற்றும் நீரை அந்தத்தடி குடித்து வளர்ந்துவிடுமே! அதற்கு முன் தான் குடித்து விட வேண்டும் என்று தண்ணீர் குடிக்கும் யோசனையில் சில நாட்கள் நிமிர்ந்து நின்றது. அந்தச் சில நாட்களுக்குள் அந்தத் தடி வேரூன்றி விட்டது. தண்ணீர் குடித்து முடிந்ததும் மீண்டும் பழைய நினைவுகள் தலைகாட்ட நிமிர்ந்து நின்ற தடியை தள்ளி விட்டது அந்தச் செடி.

என்ன அதிசயம்!

மல்லிகைச் செடியால் நம்பவே முடியவில்லை. தடி வேரூன்றி விட்டதை அறிந்தது. மீண்டும் வாயு பகவானின் சேட்டையால் தடியில் ஒய்யாரமாக சாய்வது போல் தடியை தள்ளியது. அதனுடைய அகந்தை, தடி வேரூன்றிய பின்னரும் அழியவில்லை. நம்பிக்கையை இழந்தது. இத்தனையும் எதனால்?

தன்னை மற்றவர்கள் வயது போனவள் என்று எண்ணக் கூடாது என்ற பேரவாவினால் விளைந்த வினை இக்கால வயோதிபர்களில் சிலா தாங்கள் வயது போனவர்கள் என்று மற்றவர்களால் கருதப்படாமலிருக்க பூசிப் புணர்த்தி ஒய்யாரமாகப் பவனி வருவதுபோல் அந்தச் செடியும் எண்ணியது. அந்த ஊன்றுகோலின் துணையுடன் நின்றிருந்தால் அது மலராக எத்தனை மங்கையரை மகிழ்வித்திருக்கும். அந்தத் தடி வேரூன்றியதும் தான் எப்படி வாழப் போகிறேன் என்ற வேதனையால் தடியின் கிளைகளின் அசைவால் தட்டப்பட்டு தரையில் குப்புற விழுந்து மடிந்தது. தன்னுடைய அகந்தையால் ஏற்பட்ட அழிவை எண்ணி மடிந்தது. தடியோ மரமாக மாறியது.



# "டக் டக்" பதில் விவேக்

**காறு இளமுருகன்,** உடுவில்.

கே: அடக்கமில்லாத மனைவி எதற்குச் சமம்?

ப: ஓடும்போது கழன்று விட்ட மோட்டார் சக்கரத்துக்குச் சமம்!

கே: வாழ்க்கை என்பது பாடலைப் போன்றதெனலாமா?

ப: எடுப்பும் தொடுப்பும் முடிவும் சரியாக அமைய வேண்டுமெனபதில் அந்த உவமை சரியே!

**'பலாப்பிரியன்',** பலாந்தை.

கே: பெண்ணின் உண்மையான அழகு, அவள் சிரிக்கும் போதா அல்லது அழும் போதா தெரியும்?

ப: இரண்டு போதிலுமல்ல, நித்திரை விட்டெழும்போதுதான் தெரியும்!

கே: தாலி பெண்ணுக்கு வேலி என்கிறேன் நீர் என்ன சொலகிறீர்?

ப: சில பெண்களுக்கு அது 'ஜாலி' யாகிவிடுகின்றது!

**ஆ. கார்த்திகேசர்,**
கந்தரோடை

கே: நாம் விரும்பாதவைகளில் முதன்மையானது எது?

ப: கிழவனாவது!

கே: வீரம் என்பது என்ன?

ப: தக்க சமயத்தில் ஏற்படும் துணிவு

**மு. த. மு. றிபாயிஸ்,** காலி

கே: உங்கள் பத்திரிகையில் சினிமாப் போட்டி வைத்தாலென்ன?

ப: மூளைக்கு வேலை கொடுக்கும் குறுக்கெழுத்துப் போட்டி வைத்திருக்கிறோமே, அது போதாதா?

**'அத்தியடி இந்திரா',**
129, அத்தியடி ரோடு
யாழ்ப்பாணம்.

கே: கல்யாணத்துக்கு முன் காதல் ......?

ப: இன்னும் முடிவு பெறாமல் நிற்கும் நூலுக்கு எழுதிய முகவுரைதான்!

கே: விவேகி அத்தான், உங்களை நான் உயிருக்குயிராகக் காதலிக்கிறேன்?

ப: உன்னைச் சொல்லிக் குற்றமில்லை; என்னைச் சொல்லிக் குற்றமில்லை; காலம் செய்த குற்றமடி! வயது செய்யும் குற்றமடி!

**'மக்கள் மகன்',** மாத்தறை.

கே : பணத்துக்காகக் கொள்கையை விற்றுப் பிழைப்பவர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப : பெற்றதாயை விலைபேசும் பச்சோந்திகள் !

**கே. நடராசா,** பத்தைமேனி. அச்சுவேலி

கே : எழுத்தாளர் பாமா ராஜகோபால் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் ?

ப : உங்கள் கேள்விகளுக்குப்பதில் எழுதிக் கொண்டிருக்கிறார் !

**செ. ரவீந்திரன்,** கரிசல்.

கே : உம்மைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர் ?

ப : என்னைப்பற்றி நானே சொல்வதற்கு நானென்ன தமிழ்வாணனா ?

**'கலையழகன்' ஏ. எஸ். எம் நஸீர்,** பலாந்தை.

கே : தங்க்ள் பதில்கள் மற்றவர்களை மயக்குகின்றன. அதற்குத் தங்களிடம் எதும் வசியம் உண்டா ?

ப : 'வாசகர்கள் வசிய லேகியம்' என்னிடமிருக்கிறது என்ற சங்கதி இன்னும் உங்களுக்குத் தெரியாதா ?

**'சங்கானைச் சோமு',** சங்கானை.

கே : ஓலைக் குடிசையில் வாழ்ந்தாலும், உயர்ந்த மாடங்களில் வாழ்ந்தாலும் மாறுத பொருள் எது ?

ப : **உண்மை !**

கே : நம்மை மிகவும் பயமுறுத்தும் ஒரே சொல் எது ?

ப : "பயப்படாதே" — என்பது தான் !

**வி. என். அருட்பிரகாசம்,**
**'வியாபாரி மூலை',**
**பருத்தித்துறை.**

கே : ..............?

ப : மிஸ்டர் ! உமக்காக ரொம்பவும் பரிதாபப்படுகிறேன். நீர் கேட்டிருக்கும் அத்தனை கேள்விகளும் பெண்களைப் பற்றியதாக, அதுவும் ஆபாசமுள்ளவைகளாய் இருக்கின்றனவே ! பெண்கள் வேறு யாருமல்லவே ; எம்முடைய தாய்க் குலமல்லவா ? அப்படிப்பட்டவர்களைப் பற்றியெல்லாம் மட்டமாகக் கேள்விகள் கேட்டிருக்கிறீரே ! **இனியாவது; நல்ல பயனுள்ள தரமான கேள்விகளாகக் கேளும் !**

**எஸ். சண்முகம்,** திருமலை.

கே. கதம்பம் ஆசிரியர் மோகனைத் தங்களுக்குத் தெரியுமா ?

ப: தெரியுமே ! பழகுவதற்கு இனியவர் ; வயதில் இளையவர் ; என்னைவிட ஐந்து வயது கூடியவர் !

கே. உங்களுக்கு எத்தனை வயது ?

ப : பத்தோடு பத்தைக்கூட்டி ஐந்தைக் கழித்து மூன்றைக் கூட்டிப் பாரும் !

**கே. எஸ். லிங்கம்,** எழாலே.

கே: மகத்தின் தாய் எது?

ப: சம்மதம்

கே: எழுத்தாளர் ஜோ. ஏ. எம். தாஸ் இப்பேபது எங்கிருக்கிரூர்? அவர் முகவரியென்ன?

ப: எண்மதிப்புக்குரிய நண்பர் **ஜோ. ஏ. எம். தாஸ்,** இப்போது கொழும்பில் ஒரு பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிரூர். அவர் முகவரி, 92, College St. Colombo-13

**செல்வி ரேஸ்மலர் தம்பிமுத்து,** எழாலே.

கே: உத்தியோகம் பார்க்கும் பெண்களேயே திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆண்களுக்கு ஏதாவது அறிவுரை கூறுங்கள்!

ப: முதலில் அடுப்படி வேலைகள் செய்வதற்குப் பயிற்சி பெற்றுக் கொள்ளுங்கள் என்பது தான் நான்கூறும் அறிவுரை!

**என். எஸ். சுகந்தமலர்,** நெடுந்தீவு.

கே: யாழ் நகரில் தமிழ்ச் சிறுகதை எழுதுவதில் சிறந்த எழுத்தாளர் யார்?

ப: சாகித்திய மண்டலத்தின் பரிசு பெற்ற சிறுகதை எழுத்தாளர் முதல் நிறையளவு எழுத்தாளர்கள் வாழும் யாழ் நகரில் எவரையுமே சிறந்த சிறுகதைஎழுத்தாளர் என்று சொல்ல முடியவில்லேயே! காரணம் —சாகித்திய மண்டலத்தின் பரிசைப் பெற்றவர்கள் கூடச்சுயமாக எழுதுகிரூர்களில்லேயே! ராஜாஜி, புதுமைப்பித்தன் கதைகள் தானே கை கொடுக்கின்றன!

**எஸ். ரி. பாலசுந்தரம்,** சுன்னுகம்.

கே: விவாக ரத்தின் உட் கருத்தென்ன?

ப: அநேகம் தாம்பத்திய உறவிஞல் ஏற்படும் கசப்புத்தான்!

**ஆர். வல்லிபுரம்,** வசாவிளான.

கே: தங்கள் காதற் பாதை எப்படியிருக்கிறது?

ப: கரடு முரடானதாக இருந்தாலும், வெற்றிப பாதையில் தான் போய்க்கொண்டிருக்கிறது.

**கே. நளினி** வல்வெட்டித்துறை

கே: இலேயில்லாமல் பூத்தமலர் என்ன மலர் ஐயா?

ப: அது இளமை பொங்கி வீற்றிருக்கும் கன்னி மலர் அம்மா!

**சி. நாதன்,** கரவெட்டி,

கே: கடவுள் ஏன் பெண்களேப் படைத்து—ஆண்களே காதலிக்கச் செய்து, பின் வேதனேக்குள்ளாக்குகிரூர்?

ப: கடவுள் மனிதனுகப் பிறக்க வேண்டும்—அவன் காதலித்து வேதனேயில் வாடவேண்டும்! அவனே அழைத்து வந்து, ஆசையில் மிதக்க விட்டு ஆட்டா ஆடு என்று ஆடவைத்

நீங்கள் கேட்கும்
கேள்விகள் —

◉ இலக்கியம்
◉ விஞ்ஞானம்
◉ அரசியல்
◉ நகைச்சுவை

நிறைந்தவைகளாக
இருக்கட்டும்.
— விவேகி

துப் பின் அவன் பட்டது போதுமென்று பெண்குலத்தைப் படைக்காமல் நிறுத்தி வைக்கவேண்டும்.

**கே. தர்மு, உடுப்பிட்டி**

கே: ஆசிரியர்கள் முன் மாணவர்கள் எப்படியிருக்கவேண்டும்?

ப: உயிரற்ற நாற்காலியோடு நாற்காலியாக அமர்ந்திருக்கவும் கூடாது; 'நாற்கால்' மனிதராக ஆகவும் கூடாது.

**யா. கிறிஸ்தோப்பர் கொலம்பகம்.**

கே: விவேகி ஆசிரியரே! நீங்கள் 'விவேகி ஆசிரியர் மட்டுமன்றி ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியராமே! உண்மையா?

ப: இருக்கும், இருக்கும். நெருப்பில்லாமல் புகை வருமா?

**எவ். யோண்பிள்ளை, கல்முனை**

கே: எறும்பு நம்முடைய சருமத்தில் ஏறியவுடன் ஏன் கடிக்கின்றது?

ப: சரும அசைவைக் கண்டதும் தனக்கு ஏதோ ஆபத்து வருகின்றது என்ற பயத்தினால் கடிக்கின்றது


The First

BLOCK MAKERS
IN
JAFFNA

COLOMBO STUDIO

Stanly Road.—Clock Tower Rd.

# தற்கால உலகமும் இலங்கையும்

எழுதியவர் : திரு. வி. ஈ. நிக்கலஸ், B. A. (Hons.) Lond. Eng. Tr.
(விரிவுரையாளர், கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி)

## 2. புரட்டெசுத்தாந்த மதச் சீர்திருத்தம்

### 2. செர்மனியில் மாட்டின் உலூதர்

மாட்டின் உலூதர், 1483 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் நாள் சக்சனியில் ஒரு பாமர சுரங்கத் தொழிலாளியின் குடும்பத்தில் பிறந்தார். 19 ஆம் பராயத்தில் ஏர்பேட் பல்கலைக் கழகத்தில் நியாய துரந்தராகக் கல்வி பயிலப்புகுந்து, பட்டம்பெற்றுத் தேறினர். ஆனல் தன் ஆத்தும ஈடேற்றத்தைப்பற்றி நீண்டகாலமாக கவலைகொண்டதன் பேருக அவர் 1505 இல் ஒகத்தினியன் சபையில் ஒரு துறவியாகச் சேர்ந்து எல்லோரையும் அதிசயிக்கச் செய்தார். மடத்தின் ஒழுங்குகளையும், செப, தப, பரித்தியாக முயற்சிகளையும் மிகக் கடினமாக அனுட்டித்து, பாபத்தின் கொடூரங்களினின்று விடுதலை பெற முயன்ருர். ஆனல் அப்பேர்ப்பட்ட முயற்சிகளின் மூலம் தான் தேடிய மன அமைதி தமக்குக் கிடைக்கமாட்டாதென உணர்ந்த அவர், துறவறத்தைத் துறந்து, 1508 இல் விற்றன்பேக் பல்கலைக் கழகத்தில் சமயப் பேராசிரியராக அமர்ந்தார். 1511 இல் உரோமாபுரிக்குக் கால் நடையாகச் சென்று, அங்கு உயரிடங்களில் நிலவிய ஊழல்களைக் கண்டு நெஞ்சங் கலங்கினர்; சீர்திருத்தத்தின் அவசியத்தை நன் குணர்ந்தே தாயகம் திரும்பினர்.

### 95 கண்டனங்கள் :

போப்பாண்டவரின் தூதுவரான தெற்சல் (Tetzel), 1517 இல் பாவ மன்னிப்புப் பத்திரங்களை விற்பனை செய்வதற்காக விற்றன்பேக் நகருக்கு வந்தார். உரோமையிற் கட்டவிருந்த புனித பீற்றர் தேவாலயத்தின் கட்டட நிதிக்குப் பணமுதவினுற் பாபங்கள் மன்னிக்கப்படுமென அவர் கூறி, சீட்டுக்களை விற்பனை செய்ததைக் கண்டு உலூதர் கோபங்கொண்டெழுந்தார். அவர் அம்முறையைப் பலமாகக் கண்டித்துத் தமது எதிர்ப்பை 95 கண்டனங்களாக எழுதி, விற்றன்பேக் கோவிலின் கதவில் அறைந்தார். உலூதர் தமக்கு ஐயமுண்டான அச் சமயக் கொள்கைகளைப் பகிரங்கமாக எவருடனும் தாம் தர்க்கிக்க விரும்புவதாகவும், போப்பாண்டவர் அவற்றைப்பற்றி விளக்கம் தரவேண்டுமென்றும் அதிற் கேட்டிருந்தார். இதன் மூலம் உலூதர் விரும்பியது சீர்திருத்தமேயன்றிப் புரட்சியல்ல. இதைத்

தொடர்ந்து சமயாசிரியர் குழுக்கள் முன் விவாதங்கள் பல நடைபெற்றன. 1518 இல் ஒக்சுபேக்கில் கயற்ருன் (Cajetan) என்ற கருதினுலின் முன்னும், 1519 இல் இலேப்சிக்கில் எக் (Eck) என்பவரின் முன்னும் நடைபெற்ற விவாதங்களில், உலூதர் தம் கொள்கைகளேக் கைவிட அறவே மறுத்துவிட, அவர்கள் அவரை ஒரு பரநெறியாளனெனத் தீர்ப்புக்கூறினர். இத்தீர்ப்புக்கேற்ப 1520 இல் போப்பாண்டவர், அவரைக் கிறித்தவ சமயத்தினின்று விலக்கிக் கட்டளை யொன்றைப் பிறப்பித்தார். ஆனுல் உலூதர் அதனை ஏற்க மறுத்து, அவ்வாண்டு திசம்பர் 20 ஆம் நாளன்று, விற்றன்பேகில் செர்மன் மக்கள் முன்னிலேயில் தீயில் இட்டெரித்தார். இச்செயலினுல் உலூதர், போப்பாண்டவருக்கெதிராக நேரடியான போர்க்கணை தொடுத்தார்.

இதன் பின்பு உலூதர் போப்பாண்டவரின் அதிகாரத்தை மறுத்தும் வேறு பல வேத சத்தியங்களை ஆட்சேபித்தும் பல விஞ்ஞாபனங்களை ஒன்றன்பின்ஞென்ருக எழுதிப் பிரசுரித்தார். ஒவ்வொரு நாட்டிலும் போப்பாண்டவரின் ஆட்சியை நிராகரித்துத் தனித்த சமயத் தாபனங்களை நிறுவுவதை ஆதரித்தும் போப்பாண்டவருக்காகப் பணம் சேகரிக்கும் முறையைக் கண்டித்தும் அவர் எழுதியமையினுல், தேச பக்தர்களின் ஆதரவும் அவருக்கு நிறையக் கிடைத்தது. செர்மனியர்களில் பாதிப் பெயர்கள் இத் துணிவு நிறைந்த இளம் சீர்திருத்தவாதியை மனமுவந்து வரவேற்றனர். போப்பாண்டவரின் அரசியலதிகாரத்தையும் நடத்தையையும் கண்டு பொருமை கொண்ட சில செர்மன் இளவரசர்களும் உலூதருக்கு உற்சாகத்தையும் பேராதரவையும் கொடுக்கத் தலைப்பட்டனர் அக்காலத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அச்சு எந்திரம் அவரது விஞ்ஞாபனங்களையும் போதனைகளையும் செர்மன் மாநிலமெங்கும் பரப்ப உதவியது.

## வேமிசுச் சபை (The Diet of Worms):

உலூதரின் போதனைகளினுல் செர்மனியில் அமைதி குலைவதைக் கண்ட பேரரசன் ஐந்தாம் சாள்சு, அவரை வேமிசில் கூடும் சங்கத்தில் சமுகம் தருமாறு கட்டளையிட்டான். 1521 ஆம் ஆண்டு பேரரசனின் ஆணையின் கீழ் கூடிய அச்சங்கத்திலே உலூதர் தம் கொள்கைகளை மாற்றிக்கொள்ளுமாறு கற்பிக்கப்பட்டார். ஆனுல் அவர் "வேதாகமத்தின் சாட்சியத்தினுலோ வெளிப்படையான நியாயத்தினுலோ, எனக்கு உண்மையென நிரூபித்துக் காட்டினுலன்றி...... மனச்சாட்சிக்கு விரோதமாக நடப்பது தவருனது எனக்கண்டு, நான் எதையும் மாற்றமுடியாது, மாற்றவும் மாட்டேன்...... இங்கு நிற்கின்றேன்...... நான் செய்யக்கூடியது வேருென்றில்லை" என விடை

பகர்ந்தார். இக் கூற்றினுல் தனித்த ஒரு துறவி, ஆயிரம் ஆண்டுகளாக ஓங்கியுயர்ந்திருந்த திருச்சபையை ஒழிப்பு மறைப்பின்றி எதிர்க்கத் துணிந்தார். சாள்சின் வேண்டுகோளுக்கிணங்க மறுத்த அவர் மேல் நாடு கடத்தற் கட்டளை உச்சரிக்கப்பட்டது ஆனல் சக்சனி நாட்டின் மன்னன் பிரதெரிக்கு, பேரரசனின் ஆணையை மீறி நாடு கடத்தப்பட வேண்டிய உலூதரைத் தன் உவாட்பேக் கோட்டையில் வைத்துப் பாதுகாப்பளித்தான்.

## புரட்சிக்குத் துணைபுரிந்த நிலைகள் :

பிரதெரிக்கு தந்த இப்பாதுகாப்பு உலூதரின் சமயப்புரட்சி உயிர்வாழ்தற்கு அனுசரணையாகவிருந்த அரசியல் சூழ்நிலைகளுக்கு ஓர் உதாரணமாகும். மற்றொன்று ஐந்தாம் சாள்சு உலூதரின் மேல் விதித்த நாடு கடத்தற் கட்டளையை நிறைவேற்ற ஐரோப்பிய அரசியல் நிலை இடம் கொடாமற்போனமையாகும். வேமிசுச் சபைக்குப் பின்பு சேர்மனிக்குப் புறம்பான பல பிரச்சினைகள் சாள்சின் கவனத்தை ஈர்த்ததனுல் அவர் ஒன்பது ஆண்டுகளுக்கு மீண்டும் அந்நாட்டுக்குச் செல்ல வாய்ப்புக் கிடைக்கவில்லை. 1521 தொடக்கம் 1529 வரை பேரரசனும் பிரான்சின் முதலாம் பிரான்சிசும் இத்தாலியில் ஓயாது பிணங்கிப் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நின்றனர். மேலும் அவன் வியன்னுவின் வாயில்கள் வரை முன்னேறி நின்ற துருக்கரைத் தடுத்து நிறுத்த வேண்டியதுமாயிற்று. இக்காரணங்களினுல் சாள்சு சேர்மனியில் வளர்ந்து வந்த சமயப்புரட்சி இயக்கத்தை முளையிற் கிள்ளியெறிய முடியாமற்போயிற்று. தவிர சேர்மனியின் குறுநில மன்னர்கள் உலூதர் விடயத்தில் தாம் விரும்பியவாறு நடந்து கொண்டதனுல், அவர்களும் ஒன்று சேர்ந்து புது மதத்தை அடக்கிவிட சந்தர்ப்பம் இடம் கொடுக்கவில்லை. இவ்விதமாக எழுந்த வாய்ப்பான அரசியல் சூழ்நிலைகளினுல் உலூதரின் கொள்கைகள் சேர்மனியில் வெகு விரைவாகப் பரவின. கத்தோலிக்க மடாலயங்கள் குலைக்கப்பட்டன ; குரவர்கள் போப்பாண்டவருக்குப் பணிந்து கிடக்கும் கடமையை நிராகரித்தனர், திருமணம் செய்தனர், சேர்மன் மொழியில் ஆராதனை முறைகளை ஏற்படுத்தினர்.

## உழவோரின் போர் :

உலூதர், திருச்சபை அதிகாரிகளின் ஆதிக்கத்தை ஒழிக்க புரட்சி செய்வதைக் கண்டு பாமர மக்கள் தாமும் பிரபுக்களினதும் நாட்டாண்மைக்காரரினதும் கொடுங்கோலாட்சியை நிராகரித்து விட எண்ணி, 1524 இல் கலகம் செய்தனர். இக்கலகத்துக்குச் சமயமல்ல மானிய முறையினுல் ஏற்பட்ட இன்னல்களும் மக்களின் பொருளாதாரக் கீழ் நிலையுமே அடிப்படைக் காரணங்களாகும். ஆனல்

உலூதர் அவர்களுக்குக் காட்டிய அனுதாபம், அவர் மக்களின் சுதந்திரத்தைப் பற்றி நிகழ்த்திய உரைகள் முதலியவையே அவர்களை உடனடியாகப் புரட்சியிலிறங்கத் தூண்டியது. அவர் தமது கொள்கைகளுக்கு வேதாகமத்தில் ஆதாரம் காட்டியது போன்று, உழவரும் தம் புரட்சிக்கு 12 காரணங்கள் காட்டினர்.

புரட்சி வெகுவிரைவில் காட்டுத்தீபோல் நாடெங்கும் பரவி இரத்தக்களரியை உண்டு பண்ணுவதைக் கண்ட உலூதர், தன் ஆதரவை உழவோரிடமிருந்து பிரபுக்கள் பக்கம் மாற்றினூர். வாளும் தீயும் கொண்டு புரட்சியை உடனடியாக அடக்கிவிடுமாறு பிரபுக்களைக் கற்பித்தார். இச் செயலினுல் மக்களின் ஆதரவையிழந்த உலூதர் பிரபுக்களினதும் இளவரசர்களினதும் ஆதரவைப் பெற்ருர். 1526 இல் புரட்சி அடக்கப்பட்டது.

## உலூதரன் சமயத்தின் வளர்ச்சி (1526–29)

உழவோரின் போருக்குப் பின் உலூதரின் புதுச் சமயக் கருத்துக்கள் செர்மன் குறுநில மன்னர்களினதும் பிரபுக்களினதும் செல்வாக்கினுலேயே நிலைத்தன. 1526 ஆம் ஆண்டு சிப்பியர் (Speyer) என்னுமிடத்தில் கூடிய சங்கத்தில் இளவரசர்கள் தத்தம் இராச்சியங்களில் சமயப் பிரச்சினையை ''தேவனுக்கும் பேரரசனுக்கும் பொறுப்புள்ள வகையில்'' தீர்த்து வைக்கலாமெனச் சட்டமியற்றினர். இதன்படி ஒவ்வொரு அரசனும் தன் நாட்டின் சமயத்தைத்தானே தீர்மானிக்க உரிமையுடையவன் என்ற கோட்பாடு தெளிவாக அங்கீகரிக்கப்பட்டது. உடனே சக்சனி, எசு (Hess) போன்ற இராச்சியங்களின் இளவரசர்கள் உலூதரைப் பின்பற்றவும், கத்தோலிக்க சமயத்தை ஒடுக்கவும், திருச்சபையின் சொத்துக்களை அபகரிக்கவும் துணிந்தனர். செர்மனியிலுள்ள 300 சிற்றரசுகளிலும் மதப் பிரிவினைகள் தோன்றி அமைதியின்மையை வளர்த்தன. அவ்வேளையில் பிரெஞ்சுப் போரினின்று சற்று ஓய்வு பெற்ற சாள்சு மீண்டும் செர்மனியின் சமயப் பிரச்சனையைத் தீர்க்க முற்பட்டார். சிப்பியரில் 1529 இல் கூடிய இரண்டாவது சங்கத்தில் சாள்சு முதற் சங்கத்தில் பிறப்பிக்கப்பட்ட சட்டத்தை நிராகரித்ததுமன்றி, சமயத்தில் மேலும் மாற்றங்கள் ஏற்படுவதைத் தடைசெய்தார். இக்கட்டளையை அங்கீகரிக்க மறுத்த உலூதரன்கள், தம் பிரசித்தி வாய்ந்த எதிர்ப்பை (Protest) வெளியிட்டனர். அன்று தொட்டு அவர்கள் எதிர்ப்பாளர் அல்லது புரட்டெசுத்தாந்தர் என்ற பெயரைப் பெற்றனர்.

## சமயப் பூசல்களின் தோற்றம் (1529--46)

இதற்கிடையில் சாள்சு போப்பாண்டவருடன் சமாதானம் செய்து, புரெட்டெசுத்தாந்தரின் பரநெறிகளை அழிக்க உடன்பட்டிருந்தார். ஆனுல் அங்கேரியின் எல்லைகள் வரை தங்கு தடையின்றி முன்

னேறி வந்த துருக்கரின் ஆக்கிரமிப்புத் திட்டங்களை முறியடிக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை எழவே, சாள்சு தன் திட்டத்தைப் பின் போடவும் உலூதரன்களுடன் சமாதானம் செய்யவும் வேண்டியதாயிற்று. 1530 இல் உலூதரன்கள், தம் கொள்கைகளை ஒக்சுபேக்கு உறுதிப்பாடு (Confession of Augsburg) என்ற பெயருடன் சாள்சுக்குச் சமர்ப்பித்தனர். மெலங்தனினுல் (Melanchthon) வரையறுக்கப்பட்ட இவ்விஞ்ஞாபனம் உலூதரன் சமயத்தின் கொள்கைகளைத் தெளிவாக வரையறுத்தது. ஆனுல் சாள்சு அவை பரநெறிக் கொள்கைகள் மிகுந்தவையெனக் கூறி அவற்றை உலூதரன்கள் கைவிட வேண்டுமெனக் கட்டளையிட்டார். மறுபுறம் புரட்டெசுத்தாந்த இளவரசர்கள் சிமல்க்கல்தேக் கூட்டணியில் (League of Schmalkalde) ஒன்று சேர்ந்து தம் சமய உரிமைகளைப் பாதுகாக்கவும், தேவையேற்படின் சாள்சுடன் போர் தொடுக்கவும் ஆயத்தம் செய்தனர், ஆனுல் துருக்கரின் அபாயம் மீண்டும் தலைகாட்டவே சாள்சு நியூரம்பேகில் உலூதருடன் சமாதானம் செய்து இரு சாராரும் துருக்கர் முன்னேறுவதை எதிர்த்து நிறுத்துவதற்காக ஒன்று சேர்ந்தனர்.

## சிமல்க்கல்தேப் போர் (1546-55)

சாள்சு, சேர்மனியில் புரட்டெசுத்தாந்த மதத்தை ஒழிக்க வேண்டுமெனக் கொண்ட உறுதியினின்றே இப்போர் எழுந்தது மதப் பேதம் தனது பேரரசின் ஒற்றுமையை சிதைத்துவிடலாமென எண்ணிய அவன், உலூதரின் போதனைகள் மேலும் பரவுவதைக் கட்டுப்படுத்தத் தீர்மானித்தான். பிரான்சுடனும் போப்பாண்டவருடனும் துருக்கருடனும் ஓயாது போர்கள் நடாத்த வேண்டியிருந்தமையினுல் அவன் சமயப் புரட்சியை ஆரம்பத்திலேயே வேருடன் களைந்தெறிய சூழ்நிலை வாய்ப்பில்லாமற் போயிற்று. ஆனுல் இப்பேர்ப்பட்ட ஈடுபாடுகளினின்று விடுதலை பெற்றவுடன், சமயப் பிரிவினையை அடக்கிவிடவேண்டுமென எதிர்ப்பட்ட சாள்சு, உலூதர் காலமான 1546 ஆம் ஆண்டு, உலூதரன் மதத்தினருக் கெதிராகப் போருக்கு எழுந்தார். இப்போர் 1555 வரை நீடித்தது அவ்வாண்டு, சாள்சு, சேர்மன் பேரரசின் மேலாட்சியைத் தன் சகோதரன் பேடினந்திடம் ஒப்படைத்து முடியைத் துறந்தார். பேடினந்து உடனடியாக ஒக்சுபேகில் மாநாடு கூடி சமய நிலைக்கு ஒரு முடிபு காணும் முயற்சியைக் கைக்கொண்டார்.

## ஒக்சுபேக் அமைதிப் பொருத்தனை :

சேர்மன் மாநிலத்தின் ஒவ்வொரு இராச்சியத்திலும் அரசன் தழுவும் சமயமே நாட்டுச் சமயம் என்ற கொள்கை இப் பொருத்தனையினுல் அங்கீகரிக்கப்பட்டது. இதன்படி அச்சமயத்தை மக்கள் பின்பற்ற வேண்டும், அல்லது நாட்டையே விட்டு வெளியேற வேண்டுமென

ஒத்துக்கொள்ளப் பட்டது. இரண்டாவதாக 1552 க்கு முன்பு புரட்டெசுத்தாந்து சமயத்தைத் தழுவிய இளவரசர்களும் மேற்றிராணிமாரும் தமக்குரிய நிலங்களை தாமே வைத்துக் கொள்ளலாமென்றும், அதற்குப் பின்பு புதுச் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் தம் நிலங்களைத் திருச்சபைக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்றும் முடிவு கட்டப்பட்டது.

ஒக்சுபேக் சமய அமைதிப் பொருத்தனையில் காணப்பட்ட பல குறைபாடுகள்தான் நாளடைவில் கலகங்களுக்கும் போர்களுக்கும் வழி காட்டின. பொருத்தனையின் குறைகளாவன : (1) ஒரு இராச்சியத்தின் சமயத்தைத் தீர்மானிக்கும் பொறுப்பு இளவரசர்களிடம் ஒப்புவிக்கப் பட்டது. மக்களின் சமயக் கருத்துக்கள் பொருட்படுத்தப்படவில்லை. (2) ஒரு கத்தோலிக்க இளவரசன் அல்லது மேற்றிராணியார் மதம் மாறின், அவன் தன் பதவியுடன், தன் நிலங்களையும் வருவாய்களையும் துறக்க வேண்டுமென்ற விதி நீண்டகால சச்சரவுகளுக்கு வழி காட்டியதுமன்றி ஈற்றில் முப்பதாண்டுப் போரையும் விளைவித்தது: (3) இவ்வுடன் படிக்கை, சீர்திருத்த வாதிகளுள் மிகவும் தீவிரவாதிகளான கல்வீனியரை அறவே பொருட்படுத்தாமல் விட்டது.

## மதச் சீர்திருத்த இயக்கத்தின் பயன்கள் :

1. புதுச் சமயக்கருத்துக்களையும் வேறுபாடுகளையும் உட்புகுத்திய சமயச் சீர்திருத்த இயக்கம், ஐரோப்பிய ஒற்றுமையின் சீர்குலைவை மேலும் துரிதப்படுத்தியது. அரசியற்றுறையில் நாட்டினவாதம் தலை தூக்கியதன் பயனாக பல நாடுகள், புனித உரோமைப் பேரரசினின்று ஏற்கனவே பிரிந்துவிட்டபோதும், சமயத் துறையில் ஐரோப்பா எங்கணும் பூரண ஒற்றுமை நிலவியது. இப்பொழுது சமய ஒற்றுமையும் சீரழிந்து புரட்டெசுத்தாந்த மதந்தைப் பின்பற்றிய வட ஐரோப்பாவுக்கும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றிய தென் ஐரோப்பாவுக்குமிடையே தெளிவானதும் வெளியரங்கமானதுமான பிளவுகள் ஏற்பட்டன இங்கிலந்து, சுக்கொட்லந்து, வடசெர்மனி, தென்மாக்கு, நோவே, சுவீடன். நெதர்லாந்து எனும் நாடுகள் உரோமைத் திருச்சபையினின்று பிரிந்தன

2. அவ்வியக்கம், ஐரோப்பாவை இரு கூறுகளாகப் பிளவு படுத்தியதுமன்றி செர்மனியையும் இரு கட்சிகளாகப் பிரித்து வைத்தது. அங்கும் புரட்டெசுத்தாந்த வட இராச்சியங்கள் கத்தோலிக்க தென்னிராச்சியங்களினின்று பிரிந்தன. அவற்றிற்கிடையே எழுந்த சமயவேறுபாடுகள் தான் பிற்காலத்தில் பல சச்சரவுகளுக்கும் போர்களுக்கும் காரணிகளாயமைந்தன. தவிரவும் அது செர்மனியின் ஐக்கியத்தைத் தடைசெய்து, ஒற்றுமை கைகூடுவதைப் பல நூற்றுண்டுகளுக்குப் பின்போடவும் செய்தது.

3. சமய விடயங்களில் போப்பாண்டவரின் அதிகாரத்துக்கு மேலாக விவிலிய நூலின் முதன்மையை அங்கீகரிக்கும் நெறி பிறந்தது திருச்சபையின் ஆணைகளுக்குக் கண்மூடித் தனமாக நடப்பதற்குப் பதிலாக மக்கள் சுதந்திரமாகச் சிந்திக்கவும், தம் உளக்கருத்துக்களை வெளியிடவும் வாய்ப்புக்கள் கிடைத்தன. இதனால் சமயச் சுதந்திர இயக்கம் வலுப்பெற்றது.

4. புரட்டெசுத்தாந்த நாடுகளெங்கும் கிறித்தவ சமயம் நாட்டின அடிப்படையில் அமைவு பெற்றது. உண்மையில் புரட்டெசுத்தாந்த சமய இயக்கம், நாட்டின இயக்கத்தின் இரண்டாம் முகமாகும். ஒவ்வொரு புரட்டெசுத்தாந்த நாட்டு இளவரசனும் சமயத்தைத் தன் நாட்டின் இறைமைக்கு பங்கமேற்படாத வகையில் அமைத்தான்.

5. சீர்திருத்த இயக்கத்தின் அரசியற் பயன்களும் அதி விசாலமானவை. போப்பாண்டவரின் ஆணையினின்று விடுதலை பெற்ற நாட்டின் அரசுகள் தம் உள்நாட்டு விவகாரங்களில் பரிபூரண சுதந்திர உரிமைகளைப் பெற்றன திருச்சபையின் நிலங்களைத் தேசிய மயமாக்கியும் திருச்சபையைக் கட்டுப்படுத்தியும் புது அதிகாரம் பெற்ற புரட்டெசுக்தாந்த இளவரசர்கள் தத்தம் நாடுகளில் சர்வாதிகாரிகள் போலானார்கள். தவிரவும் புரட்டெசுத்தாந்த சமயம் விசேடமாகக் கல்வினியம் (Calvinism) பரவிய நாடுகளிலெல்லாம் சனநாயகக் கருத்துக்களும், தனி மனிதனின் சுதந்திரத்தைப் பற்றிய எண்ணங்களும் உறுதியாக நிலை கொண்டன. அந்நாடுகள், கத்தோலிக்க நாடுகளிலும் மேலாக அரசியற் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் முன்னேற்றத்தைக் காட்டின.

## பயிற்சி வினாக்கள்

1. ஐரோப்பாவில் ஒன்றுபட்டிருந்த கத்தோலிக்க திருச்சபை 16-ஆம் நூற்றாண்டில் பிளவு பட வேண்டியதற்கான (i) உடன் (ii) மறைமுகமான காரணங்கள் எவை ?

2. மாட்டின் உலூதர் போப்பாண்டவராட்சியை (i) ஏன் (ii) எவ்வாறு எதிர்த்தார் என்பதை விளக்குக.

3. அறிவுத்துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டிராவிடின் புரெட்டெசுத்தாந்த மதச் சீர்திருத்தம் ஏற்பட்டிராது என்று கூறுவது நியாயமா ? காரணங் கூறுக.

4. "ஏராசுமசு இட்ட முட்டையையே உலூதர் அடைகாத்துப் பொரிக்கச் செய்தார்" எனும் கூற்றினை விளக்குக.

5. செர்மனியில் புரட்சி. சமயத் சீர்திருத்த இயக்கம் வெற்றி பெறுவதற்குத் துணைபுரிந்த அரசியற் காரணிகள் எவை ?

6. (i) தெசிடேரியசு ஏராசுமசு (ii) மாட்டின் உலூதர் (iii) எட்டாம் என்றி என்பவர்கள் புரட். சீர்திருத்தம் பற்றி எத்தகைய கொள்கைகளுடையவராக இருந்தனர் என்பதை விபரிக்க.

7. மாட்டின் உலூதர் இறக்கும் பொழுது சமயச் சீர்திருத்தம் எவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்திருந்தது ?

8. 1555 இல் ஏற்பட்ட ஒக்சுபேக் அமைதிப் பொருத்தனையின் மூறிகளை விளக்கி, அவை எவ்வாறு முப்பதாண்டுப் போருக்கு வித்திட்டன எனக்காட்டுக

9. புரட். சமயச் சீர்திருத்தத்தினல் ஏற்பட்ட நிலையான விளைவுகள் எவை ?


பாடநூற் பிரசுர சபையாரின் அங்கீகாரம் பெற்ற

**புது உலக சரித்திரம்**

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைச் சரித்திர விரிவுரையாளர்

**திரு V. E. நிக்கலஸ்**

அவர்கள் எழுதியது

க. பொ. த. ப. வகுப்பு, ஆசிரிய கலாசாலை
என்பவற்றில் உபயோகிக்கத்தக்கது.

**விலை ரூபா : 7-75**

ஆசீர்வாதம் புத்தகசாலை, 32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**'விவேகி'**

பத்திரிகை

வருட சந்தா ரூபா 4-00

தனி இதழ் -40

விபரங்களுக்கு :
நிர்வாகி,
29, கண்டிவீதி யாழ்ப்பாணம்.

# பேசும் திரை

எம். சி. யேசுதாசன்

கு பாரிஎஸ். பாரதி
திருகோணமலை வீதி, கண்டி
கே : சினிமாப் பட டைரெக்டரின் கடமை என்ன ?

ப : சினிமாப்படம் எடுக்க ஏற்ற கதையைத் தேர்ந்தெடுத்து, நடிக நடிகைகளைத் தேர்ந்தெடுப்பது முதல், படத்தை முடிக்கும் வரையில் டைரெக்டரின வேலை முக்கியமானது. எந்தெந்த நடிகர், கதையின எந்தெந்தக் கட்டத்தில், எப்படி எப்படி நடக்க வேண்டுமெனச் சொல்லிக் கொடுத்து சொன்னபோது நடிக்கத் தெரியாதவி த்து டைரெக்டரும் நடித்துக்காட்டுவார். ஒவ்வொரு காட்சியையும் படம் பிடிக்குமுன் பல தடவை ஒத்திகை பார்ப்பார். படத்தை எந்தெந்தக் கோணத்தில் எடுக்க வேண்டுமெனக் கூறுபவரும் டைரெக்டரே ஒரே காட்சியை வெவ்வேறு கோணங்களில்படமாக்கவெவ்வேறு கமராக்களை உபயோகிக்க அனுமதிப்பவரும் டைரெக்டரே! படத்தின் வெற்றி தோல்வி இவர் கையில்தான் இருக்கிறது !

கே : கார்டூன் படம் எடுப்பதெப்படி ? இதை முதலில் தயாரிக்கத் தொடங்கியவர் யார் ?

ப : கார்டூன் படத்தை முதலில் தயாரிக்கத் தொடங்கியவர் வால்ட் டிஸ்னி (Walt Disney) என்பவரே! ஓவியர் ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக் கணக்கான படங்களை வரைவார் இவை ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுபடுவனவாக இருக்கும் எடுத்துக்காட்டாக ஒரு மனிதன் தன்கையை உயர்த்துவதைக் கார்டூனுக்குவதற்கு அவன கையைத் தொங்கவிட்டுக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து உயர்த்தும் நிலையையடையும் வரையுள்ள கையின் நிலைகளைப் படங்களாக ஓவியர் வரைவார். இப்படங்களை வரிசைப்படி அடுக்கி வைத்துவிட்டு மிகவேகமாக ஏடுகளைப்புரட்டினல் அவை வெவ்வேறு படங்களாகத் தோன்றுமல் மனிதன் கை உயர்த்துவது போலவே தோன்றும் ஒவ்வொரு காட்சியில் வரும் விபரங்களையும். பின்னணியையும் (Back-Ground) தனித்தனியாக எழுதி, ஒளி புகும் (Transparent) செலுலாயிட் தகட்டில் தீட்டிப் பின் சினிமாப்படக் கமிராவைக் கொண்டு இப்படங்களைப் படமாக்குவார். கதைக்கேற்ப ஒலிப்பதிவையும் செய்வார்.

படங்களை எழுதுவதற்குப் பதிலாகப் பொம்மைகளைக் கொண்டும் கார்ட்டூன் படங்களைத் தயாரிக்கிறார்கள்.

**செல்வி. எஸ். மீனுஷோரி,**
அதிராம் பட்டினம்,
தஞ்சாவூர், தென் இந்தியா.

கே: கு வோஸ் த மான் கு பிறடியூஸ்ட் த பெஸ்ற் மோஷன் பிக்ஸர் இன் இந்தியா?

ப. இராஜா கரிச்சந்திரா, த பெஸ்ற் எவர் இந்தியன் மோஷன பிக்ஸர், வோஸ் புறடியூஸ்ட் இன் 1912 பை டாடா சாஹிப் படேக், த பாதர் ஒவ் த இன்டியன் பிலிம் இன்டஸ்றி. இற் வோஸ் ஏ சைலன்ற் பிக்ஸர். ஆலம் ஆரு, பிறடியூஸ்ட் பை ஆர்டஸி இறனி இன் 1931, வோஸ் த பெஸ்ற் இன்டியன் டோக்கி.

கே: படம் பார்த்து விட்டு வெளி வந்தால் கண்ணெல்லாம் எரிகிறது. காரணம் என்ன?

ப: உங்களுக்குக் கண்மட்டும் எரிகிறது. எனக்கு உடம்பே எரிகிறது—உருப்படாப் படங்களைப் பார்த்துவிட்டு வந்ததும்!

**செல்வி. ரூேஸ்மலர் தம்பிமுத்து,**
"லில்லியன் லொஜ",
ஏழாலை கிழக்கு, ஏழாலை.

கே: நடிகர் தங்கவேலு தயாரிக்கும் "நல்ல யோகம்" படம் முடிவடைந்து விட்டதா?

ப: இல்லை! இன்னும் படத்திற்கு கதாநாயகனையே தெரிவு செய்யவில்லை. சந்திரபாபுவை கதாநாயகனுகப் போடுவதற்கு தங்கவேலு முயற்சி செய்கிறுர்!

கே: இப்போது திலிப்குமார்-பத்மினி நடித்து இலங்கையில் ஓடிக்கொண்டிருக்கும் "ஜிஸ் தேஷ் மென் கங்கா பெத்தி ஹர்ய்" என்ற ஹிந்திப் படம் பத்மினி திருமணம் செய்வதற்கு முன்னர் நடித்ததா?

ப: திலிப்குமார் பத்மினி நடித்ததல்ல! ராஜ்கபூர்—பத்மினி நடித்தது! பத்மினி திருமணம் செய்வதற்கு முன் நடித்த படமே இது!

**உருபுரக் கலைஞன் சூ. மரியதாசன்**
27, உருத்திரபுரம்.

கே: பலே பாண்டியா, அறிவாளி சபாஸ் மீனு முதலிய படங்களில் நகைச் சுவைப் பாத்திரத்தில் சிவாஜி நடித்திருக்கிறுரே! நகைச் சுவைப் பாத்திரத்தில் நடிக்கவில்லையென்று நீர் போன மாத விவேகியில் கூறியிருக்கிறீரே! காரணம் என்ன?

ப: இப்படங்களில் ஒருசில காட்சிகளில் மட்டும் சிரிப்பு நடிப்பு நடித்திருக்கிறுரே ஒழிய மேற்படி மூன்று படங்களிலும் அவர் ஏற்றது குணசித்திர பாகமே!

கே: சிவாஜி கணேசன். எம். ஜி. ஆர். இருவருள் கூடிய படங்களில் நடித்திருப்பவர் யர்ர்?

ப: எம். ஜி. ஆர்.

கே : அண்ணை இல்லம், பரிசு, காஞ் சித்தலைவன இவற்றுள் சிறந்த படம் எது ?

ப : பரிசு !

**ஏ. எஸ். எம். நஸிர்**
பாடசாலைவீதி, பலாந்தை,
காலி !

கே : பத்மினி கடைசியாக நடித்து வெளிவந்த படமெது ?

ப : காட்டு ரேஜா !

கே : எம். ஜி. ஆர் எப்படத்திலாவது சிகரெட் புகைத்த துண்டா ?

ப : 1939-ல் திரையிடப்பட்ட "சதி லீலா" படத்தில் சிகரெட் புகைத்திருக்கிரூர்!

**வீ. எஸ். பாலசிங்கம்**
21, மருதடிவீதி
நல்லூர், யாழ்ப்பாணம்.

கே : ஸ்ரீதர், பீம்சிங், கிஷ்ணபஞ்சு சங்கர், யோகாஞந், வாசன் இவர்களில் சிறந்த டைரக்டர்கள் யார் என்பதை வரிசைப் படுத்திக் கூறவும் ?

ப : வாசன், ஸ்ரீதர், கிஷ்ணபஞ்சு சங்கர், யோகானந் !

கே : பணத்தோட்டமா, பந்த பாசமா அதிக நாட்கள் ஓடியது ? எது அதிக வசூல் கொடுத்தது ?

ப : இரண்டும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக ஓடியது ! பணத் தோட்டம் அதிக வசூலைக் கொடுத்தது !

## கல்யாணகுமார் கன்னித் தமிழரே!

'நெஞ்சில் ஓர் ஆலயம்' மூலம் ரசிகர்கள் மனதிலே நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்ட கல்யாணகுமார் ஒரு கன்னடக்காரர் என்றே பலர் எண்ணிக் கொண்டிருக்கிருர்கள்! ஆனுல் அவர் ஒரு மறத் தமிழருக்குப் பிறத்த கன்னித்தமிழர் பெங்களூரிலே இவர் வாழ்ந்த காரணத்தால்—பெயரிலே சாயலிலே கன்னடக்காரர் போலக் காட்சி தருகிருர் ;

அவரது வீட்டு வரவேற்பு அறையில் ஒரு அழகான பெண்ணின் 'போட்டோ' ஒன்று தூங்குகிறது ! அது வேறு யாருமல்ல; கல்யாணகுமார் பெண்வேடம் போட்டுக் கொண்டபோது எடுத்த போட்டோவேதான் !

ஆண்டு மலரில் அகில இந்திய நடிகர் ஆர். ரஞ்சன் **B. A. M. Litt.** அவர்களின் வாழ்க்கை வரலாறு அழகிய படத்துடன் பிரசுரமாகும்.

# அழகு கண்டேன்

— புயல் வண்ணன் —

வானத்தின் நிலவுதான் அவளின் நெற்றி
வளைந்திருக்கும் வில்லுதான் அவளின் புருவம்
கானத்தில் காண்கின்ற மானின் பார்வை
காரிகையின் கண்ணிற்றான் "கடலுள் முத்தின்
மானத்தை வாங்குதற்கே இதழை விரித்து
மலர்கிறேன்" என்பதுபோல் வெள்ளைச்சிரிப்பு
மோனத்தைக் கலைத்தந்த மேனகைக் குமில்லை
மோகினியாள் உருவதற்கோர் சொல்லு மில்லை

ஆடியவள் நடப்பதையே அன்னம் பார்க்கும்
அவளிதழில் தேன்வண்டு அமர்ந்து செல்லும்
கூடிவரும் கருமேகம் குலைந்து போகும்
குமரிகுழற் கிணையாதல் கனவே என்று
மூடிமறை சேலையிடை முனைந்து நிற்கும்
முலைகளையோ கண்டுவிட்டால் தென்னைக் கேக்கம்
ஓடுவதும் அழகென்றே நோக்குங் கண்கள்
ஒருகோடி உண்டுதான் பொய்யே இல்லை.

சீவாதே செவ்விளநீர்க் குரும்பை மீது
சீராக வாய்வைத்துச் சுவைத்த போதும்
மேவாத நாண மென்ன மிதந்து வந்து
மென்னகையாள் முகமெல்லாம் மலர்ந்த தென்று
மோவாயைப் பிடித்தபோது மனதில் ஏதோ !
மௌனமாய் நின்றாள்சில கணத்தின் பின்னே
தாயாகப் போகின்றேன் என்று சொல்லி
தாழ் பணிந்த நிலையிற்றான் அழகு கண்டேன்.

# நோத் முதல் கோபல்லாவை வரை

## 6. டொனமூர் அரசியற் திருத்தம்

(திரு. க. சி. குலரத்தினம்)

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்த ஒரு பெண்ணுக்கு அவள் பெற்றோர் அவள் இளமையிற் றைத்த சிற்றுடையை, நூலை அவிழ்த்தும், மடிப்பை நீக்கியும் சுருக்கை விரித்தும் பழுதுபார்த்து அவள் வளர்ந்த பின்பும் அணியக் கொடுத்தமாதிரி, ஆங்கிலேயர் இலங்கைக்கு 1833 ம் ஆண்டிற் கொடுத்த சட்டசபையையே 1924-ம் ஆண்டுவரையும் அவ்வப்போது சிற்சில மாற்றங்கள் செய்துகொடுத்தார்கள். இலங்கையர் நூறு வருடகாலமாக வேண்டா வெறுப்பாக இந்தச் சட்டச்சபையினுற் பரிபாலிக்கப் பட்டுவந்தார்கள்.

சட்டசபையிலே 1924-ம் ஆண்டிலே ஏற்பட்ட திருத்தங்கள்கூட மக்கள் அபிலாசைகளைத் திருப்திசெய்ய வில்லை. சட்டசபையிலேயும் அதன் நடைமுறையிலேயும் பல பிழைகள் இருந்தன என்பதைச் சீர்திருத்தவாதிகள் பல கோணங்களில் இருந்து கண்டித்தனர், சுட்டிக்காட்டினர், திருத்தங் கோரினர். சட்டசபைக்கும் சட்ட நிறைவேற்று சபைக்கும் நேரடியான தொடர்பில்லாமை, சட்டசபையினர் சட்ட நிறைவேற்று சபையில் வேண்டியவளவுக்குப் பிரதிநிதித்துவம் பெருமை, சட்டசபையிலே இருந்த உத்தியோகப்பற்றற்ற சிங்களப் பிரதிநிதிகளின் தொகையில் மூன்றில் இரண்டு பங்காவது தமிழருக்குஇருந்தல்வேண்டுமென்று கோரியதற்கு அவர்கள் அரைப் பங்காவது கொடுக்காமல்விட்டமை, சிங்களப் பிரதிநிதிகளின் விருப்பத்துக்கமையத் தொகுதி வாரிப் பிரதிநிதித்துவம் அமையாமை, இலங்கையர் என்று கணித்த அளவிலே 4% மக்களே வாக்குரிமைபெற்றும் ஏனையோர் கல்வி. செல்வம் இல்லாமையால் நடைப்பிணங்களாக இருந்தமை, குடிசனத்தில் அரைவாசி மக்களான பெண்ணினத்துக்கு வாக்குரிமை அறவே இல்லாமை என்பன போன்ற குறைகள் எடுத்துக்காட்டப்பட்டன. இலங்கைக்கு ஒரு சட்டசபை 1833-இல் வழங்கப்பட்ட தன் பின் சட்டசபைகளைப் பெற்ற இந்தியா போன்ற நாடுகளில் சட்டசபைகள் முன்னேற்றமாக அமைந்திருப்பவும் இலங்கையின்

சட்டசபை பின்தங்கிய முறையில் இருந்தமை வெட்கமும் துக்கமும் கொடுக்கக்கூடியதாக இருந்தது

ஆகவே, இலங்கையர் பல கோணங்களிலிருந்து கோரிய திருத்தங்களைப் பொதுவாகச் சுருக்கிக் கூறின் அவர்கள் கேட்டவை, சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் மேலதிகமாய் இருத்தல் வேண்டும், இலங்கையருக்கு நல்ல முறையில் தாராளமான அளவுக்கு வாக்குரிமை வழங்கப்படல் வேண்டும், தெரியப்பெற்ற வாசகர் சட்ட சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தல் வேண்டும், சட்ட நிறைவேற்று சபையிலுள்ள அங்கத்தவர்களுள் அரைப் பங்கிற்கு மேற்பட்டவர் சட்ட சபையில் உள்ள தெரியப்பட்ட பிரதிநிதிகளுள் தெரியப்பட்டவராய் இருத்தல் வேண்டும். அவர்களுக்கு மந்திரிப் பொறுப்பு வழங்கப்படல் வேண்டும், ஆள்பதி ஆங்கிலேய பாராளுமன்ற முறைகளில் அநுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும் என்பனவும் பிறவுமாம்.

பிரித்தானியக் குடியேற்ற நாட்டு மந்திரியாராய் இருந்த அமெரி என்பார் 6.8-1927-ல் ஒரு விசேஷ சீர்திருத்தசபையினரை இலங்கைக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். அதன்படி டொனமூர்ப்பிரபுவைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவில் மதியூநாதன், யெவ்ரிபட்லர், திறமன் சீல்ஸ் என்பாரும் இருந்தனர். அவர்கள் 13-11-27-ல் இலங்கைக்கு வந்து 18-1-28 வரையும் இங்கே தங்கிப் பல தகவல்களைச் சேகரித்தும் பல காரியங்களை நேரில் அறிந்தும் முப்பத்துநான்குமுறை கூடிப் பலபிரமுகர்களின் வாக்கு மூலங்களைக் கேட்டும் அபிப்பிராயங்களை அறிந்தும், பொதுமக்களின் வசதியை முன்னிட்டுக் கண்டி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு காலி ஆகிய இடங்களில் கூடியும் காரியங்களை நன்கறிந்தார்கள். பல்வேறு தாபனங்கள் தங்கள் தங்கள் இன, மத, பொருளாதார நாட்டங்களின் அடிப்படையில் தகவுரைகள் கூறியிருந்தார்கள்.

டொனமூர்த் திருத்த சபையினர் தயாரித்த திருத்தங்களை அறிவதற்கு முன் அவர்கள் இலங்கையில் நடைமுறையில் இருந்த ஆட்சி முறையைப் பற்றியும் அதன் அரசயாப்பைப் பற்றியும் என்ன கருதினர்கள் என்பதை முதலில் அறிதல் நல்லதாகும்

1. இதுகாறும் நடைபெற்று வந்த முறையால் அரசாங்கம் ஓர் ஏலாச்சுவாகியாய் விட்டது.

2. உத்தியோகப்பற்றற்றவருக்கும் அதிகாரம் வழங்குதல் வேண்டும். அவர்களும் சட்ட நிறைவேற்றுத்துறையில் பங்கு பெறுதல் வேண்டும்.

3. இதுகாறும் நிகழ்ந்த வரலாற்ருல், உத்தியோகப் பற்றற்றவர் ஒருநிரந்தர எதிர்க் கட்சியினராய் அமர்ந்து விட்டார் போல இருக்கிறது.

4. இலங்கையர், தங்கள் அரசாங்கத்தின் சுய நிர்ணய ஆட்சிப் பொறுப்பைப் பெறுவதில் முனைந்து விட்டார்கள்.

5. உத்தியோகப் பற்றற்றவர்கள் படித்த இலங்கையரின் பிரதிநிதிகளாய் இருக்கிருர்கள். அவர்களே ஆட்சிப் பொறுப்புக்கு அருகதை வாய்ந்தவர்கள், ஏற்றவர்கள் என்பது எமது துணிபு.

6. உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரிடம் ஆட்சிப் பொறுப்பை அளித்தல் வேண்டும் என்று நாங்கள் தகவுரை கூறுகின்ருேம்.

இவ்வாறு கூறிய டொனமூர்த் திருத்த சபையினர் தயாரித்த திட்டத்தில் சில மாற்றங்கள் குடியேற்றநாட்டு மந்திரியாராலும் சில மாற்றங்கள் சட்ட சபையினராலும் செய்யப்பட்டுக் காரசாரமாக நீடித்து நடந்த வாதப்பிரதிவாதங்களின் பின் பத்தொன்பது அங்கத்தவர் சாதகமாகவும், பதினேழு அங்கத்தவர் பாதகமாகவும் வாக்களிக்க அது ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## டொனமூர்த் திருத்த சபையினரின் தகவுரை:

இதுகாறும் சட்டசபை எனவும் சட்ட நிறைவேற்றுச் சபை எனவும் நிலவிவந்த இரு சபைகளின் கருமங்களை இனிமேல் அரசாங்கசபை என ஒரு சபை நடத்தும். உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதிகளுக்கு நல்ல முறையில் பொறுப்பு வழங்கப்படும். அவர்களுள்ளே ஏழு பேர் மந்திரிப் பொறுப்புள்ளவராய் நாட்டின் சுயகருமங்களை நிர்ணயித்து நடத்த அதிகாரம் பெறுவார்கள். ஜனநாயக முறையில் முற்ருக அமைந்த அரச யாப்பை அடிப்படையாகக் கொண்டு அரசாங்கத்தை அமைத்து ஆட்சியை நடத்துவதற்கு அடிப்படை அம்சமாகவேண்டிய கட்சிகள் இங்கே இல்லாத காரணத்தால் இப்போது இம்முறையே தகுதியானதாகும்.

அரசாங்க சபை சட்டமியற்றுதல் காரணமாகச் சட்டசபை எனவும், சட்ட நிறைவேற்றுதல் காரணமாகக் கூடும்போது சட்டநிறைவேற்று சபை எனவும் அதன் கருமத்தைக் கொண்டு நடத்தும். அரசாங்கத்தின் திணைக்களங்கள் யாவும் இதுகாறும் குடியேற்றக் காரியதரிசியின் கண்காணிப்பில் கருமமாற்றிய முறை மாற்றியமைக்கப்பட்டுப் பத்துப் பகுதிகளின் தலைப்பில் நடைபெறும் இப்பத்துப் பகுதிகளில் மூன்று பகுதி

கள் அரசாங்க உத்தியோகத்தர் என அழைக்கப்படும் மூன்று காரியதரிசிகளின் கண்காணிப்பில் நடைபெறும். இதுகாறும் குடியேற்றக் காரியதரிசி என இருந்த பெரிய உத்தியோகத்தர் இனிமேல் பிரதம காரியதரிசி என அழைக்கப்படுவார். சட்டத்துறை நாயகம் என்பார் இனிமேல் சட்டக் காரியதரிசி எனவும், இறைசேரிநாயகம் என்பார் நிதிக்காரியதரிசி எனவும் பெயர் பெறுவர். இம்மூவரும் காரியதரிசிகள் எனப்பட்டபோதிலும் மந்திரிப் பொறுப்புள்ளவர்களாய் மந்திரிகள் சபையிலே இடம்பெறுவார்கள். இவர்கள் ஆலோசனைகள் கூறுவதையே பிரதான கடமையாகக் கொண்டிருப்பரன்றிச் சட்ட நிறைவேற்றுதலில் இரண்டாந்தரக் கடமை செய்பவராவர்.

ஏனைய ஏழு தலைப்புகளில் அடங்கும் திணைக்களங்கள் அரசாங்கசபை அங்கத்தவர் எழுவரின் தலைமையில் நடைபெறுவனவாகும். இவ்வேழு பேரும் அரசாங்கசபை கூடியதும், அங்கத்தவர் தம்மை ஏழு நிர்வாக சபையினராகப் பிரித்து ஒவ்வொன்றின் தலைவராக அவ்வப் பிரிவினரால் தெரியப் பெற்று வந்தவராவர். இவர்களை மந்திரிகள் என ஆள்பதி நியமித்து அங்கீகரிப்பாராவர். இவர்கள் நிர்வாகசபைத் தலைவர்கள் எனவும், மந்திரிகள்சபை அங்கத்தவர்கள் எனவும் வழங்குவர். இவர்கள் தத்தம் பொறுப்பில் உள்ள திணைக்களங்களின் பரிபாலனத்துக்குத் தனித்தனி பொறுப்புள்ளவராகவும், எல்லோரும் சேர்ந்து நிதிசம்பந்தமான காரியங்களுக்குப் பொறுப்புள்ளவராயுமிருப்பர்.

அரசாங்கத்தின் சட்டநிறைவேற்றும் பணியை இவர்களின் தனித்தனி தலைமையி லியங்கும் நிர்வாக சபைகள் செய்யுமெனினும் அவற்றின் அங்கீகாரம் பெறுவதற்கு இவர்கள் அவ்வவ் நடைமுறைகளை மந்திரிகள் சபைக்கு அறிவித்தல் செய்தாகல் வேண்டும்.

இதுபோலவே சட்டசபைக் கூட்டங்களிலும் இத்தலைவர்கள் சட்டங்களைச் செய்து வைப்பார்கள் ஆக இவர்கள் இருதுறைகளிலும் செய்யுங் காரியங்கள் யாவும் ஆள்பதி அவர்களின் அங்கீகாரம் பெற்றபின்பே நடைமுறைக்கு வரலாம்.

எனவே, ஆள்பதியவர்களுக்கு அரச கற்பனையால் அதற்கேற்ப அதிகாரமும் வழங்கப்படும். அதனால் அவர் அங்கீகரிப்பதை மறுக்கவோ அதனை ஒதுக்கவோ இயலும். இதுதவிர நாட்டின் பிரதிநிதிகளான அரசாங்கசபை அங்கத்தவர் உள்நாட்டு அலுவல்களில் பரிபூரணமான அதிகாரம் உள்ளவராவர்.

# ஆசை

"அருள்"

மன்றிலே பிறந்தே னெந்நாள்
மருவியே அவளும் வந்தாள்,
அன்பொடு அணைக்கச் சொல்வாள்:
அன்னையின் பாலைக் கேட்பாள்,
எண்ணிய பொழுதி லெல்லாம்
எண்ணரிய வண்ணம் கேட்பாள்,
கண்ணிமைப் பொழுதி னுள்ளே
கருதிய பொருளே வேண்டும்.
பொறுதியும் போற்றல் கேளாள்
புந்தியில் பொங்கி நிற்பாள்
எந்தனின் வாழ்வுயர
எடையவள் கூடி விட்டாள்
சிந்தையில் சிறந்து நின்றாள்
சிலம்பதில் ஒலித்து நின்றாள்
முந்தையர் உரைத்த வாறு
முனிவுரை முற்றும் கேளாள்
சந்ததம் வாழ்வு வேண்டும்
தன்னரசாட்சி வேண்டும்
தான் நினை பெண்டிர் வேண்டும்
தன்னலம் போற்ற வேண்டும்
தாரணி தன்கீழ் வேண்டும்
பேரணி கொண்ட இந்த
பேடியின் வார்த்தை கேட்டு
தேடிய தேட்ட மெல்லாம்
தீங்குதா னென்று கண்டேன்
கண்ணிலே எண்ணெய் விட்டு
கன்னியைக் காத்தல் போலாய்
பெண்ணிவள் பேயைக் காக்க
பேதமை தானும் மாறும்
எண்ணிய எண்ணம் கூடும்
இறைவனைக் காணல் சாலும்.

# தமாஷ்

## பெருத்த வருத்தம்

ஜார்ஜ் பெர்னுட்ஷா ஒரு தடவை நடனசாலேக்குச் சென்றிருந்தார். அங்கு பருத்த உடலமைப்புள்ள பெண்ணுடன் நடனமாடினர் நடனமாடி முடிந்ததும் அந்தப் பெண், "உங்கள் பெருந்தன்மையே பெருந்தன்மை! இவ்வளவு புகழ்பெற்ற நீங்கள் சிறிதும் தகுதியில்லாத என்னுடன் நடனமாடினீர்களே!" என்று வியந்தாள்.

அதற்கு ஷா மிகுந்த வருத்தத்தோடு "என்ன செய்வது, வேறு யாரும் கிடைக்கவில்லையே!" என்றுராம்.

◉

## ஒரே நிமிடம்!

ஒரு 'தர்மபத்தினி' தன் கணவனிடம் கூறுகிருள்:

"என்னங்க!... .....நான் பக்கத்து வீடுவரைக்கும் போய் வருகிறேன். அடுப்பிலிருக்கும் சாம்பாரை அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை கலக்கிவிடுங்கள். நான் ஒரே நிமிடத்தில் வந்துவிடுகிறேன்!"

◉

## காதல் தத்துவம்!

பெண் உள்ளத்தில் காதல் உணர்வு எவ்வளவு காலம் இருக்கும் என்ற ஆராய்ச்சியில் இறங்கினுர் பெர்னுட்ஷா.

யார் யாரையோ கேட்டுப்பார்த்தார்; அவருக்குத் திருப்தியளிக்கும் பதில் யாரும் தரவில்லே. கடைசியில், எழுபது வயதுக்கு மேற்பட்ட தன் மாமியாரிடம் சென்று ஒரு கேள்வி கேட்டார்.

அதைக் கேட்பதற்கே அவருக்குப் பயம். இருந்தும் துணிந்து கேட்டே விட்டார்.

"ம்......பெண்களுக்கு எத்தனே வயதுக்குமேல் காதல் உணர்வு வருவதில்லே?......"

அதற்கு அந்த அம்மையார் எந்த விதமான பதட்டமுமில்லாமல் பதில் கூறினுர்கள். அது இது; "அன்புள்ள ஷா; இதைப்பற்றி என்னேவிடப் பெரியவர்களிடம் கேட்டால்தான் தெரியும்"

◉

## ஆ......ஆச்சரியம்!

இருவர் இப்படியாகப் பேசிக்கொண்டனர்.

"சின்னஞ்சிறு கோழிக்குஞ்சுகள் முட்டையை எப்படி உடைக்கின்றனவென்பதை நினேக்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாயில்லேயா?"

"அதைவிட ஆச்சரியம், எப்படி அவை உள்ளே புகுந்துகொண்டன என்பதுதான்!"

## எதிரொலி !

ஒரு அரசியல்வாதி, ஒருமணி நேரத்திற்குமேல் தன் பெருமையைப்பற்றியே பேசிவந்தார். பிறகு முடிவுரையில், ''இப்பேர்ப்பட்ட என்னை, மக்கள் எல்லோரும் பொதுச் சேவைக்கு வா ; வா என்று அழைப்பதுபோல் இருக்கிறது !'' என்றார்.

கூட்டத்திலிரு த ஒருவர் கூறினர் :

''ஒருவேளை அது உங்கள் எதிரொலியாக இருக்கலாம்.''

◉

## மொழி பெயர்ப்பு !

ஒரு ஆங்கில மேயர் பாரீஸ் பட்டினம் சென்றிருந்தார். அங்கு நடந்த விருந்தில் அவர் பேசினர். யாரும் கைதட்டவில்லை ஒரு பிரஞ்சுக்காரர் எழுந்து பேசினர். அவர் பேசப்பேசக் கைதட்டல் எழுந்தது. மேயரும் கைதட்டுவதுதான் பண்பு—என்ற முறையில் கைதட்டத் தொடங்கினர். உடனே அவரது செயலாளர், ''கைதட்டாதீர்கள் ; உங்கள் பேச்சைத்தான் அவா மொழிபெயர்க்கிறார்'' என்றார்.

◉

## பரிசோதனை !

நோயாளிக்கு மருந்துகளை எழுதிக் கொடுத்துவிட்டு அவரிடம் டாக்டர் சொன்னார் ' ''மருந்துகளை ஒழுங்காகச் சாப்பிட்டு விட்டு உடல் நிலை எப்படியிருக்கிறது என்று சொல்லுங்கள். நானும் இதே போன்ற நோயால் நெடுங்காலமாக அவஸ்தைப் படுகிறேன்.''

◉

## ஓ, நீங்களா !

நெடுநாட்களாகத் தாடி வளர்த்துக் கொண்டிருந்தார் வில்சன். திடீரென்று ஒரு நாள், அலுவலகத்திலிருந்து வரும்போது, சலூனில் நுழைந்து தாடியை எடுத்து விட்டார். அவரை அறியாமலேயே அவருக்கு மகிழ்ச்சி. வீடு திரும்பியவுடன், மகிழ்ச்சிப்பெருக்கில் மனைவியை அள்ளி முத்தமிட்டார்.

''என்ன திடீரென்று உங்களுக்கு ?''

''தாடியை எடுத்து விட்டேன். அதுதான்......ஆனந்தம் !''

மனைவி அப்போதுதான் அவரை உற்றுப் பார்த்தாள்.

''ஓ......நீங்களா ? ''—என்றாள் அவள்.

—பாமா ராஜகோபால்



# மதிப்புரை

## நீரா மகளிர்

எழுதியவர் :

**கவிஞர் திமிலைத் துமிலன்**

வெளியிட்டவர்கள் :

இராஜம் பிரசுரம்,

திமில தீவு—மட்டக்களப்பு.

விலை சதம் : 50

கவிஞர் திமிலைத் துமில னைத் தெரியாத வாசகர்கள் இருக்கமாட்டார்கள் ; ஈழத்துக் கவிஞர்களில் முதலிடம் வகிக்கும் அவர் கவிதை இயற்றுவதில் மட்டுமல்ல—சிறுகதை, நாடகம், நாவல், எல்லாமே அவருக்குக் கைவந்த துறைதான் !

அவரது இச்சிறு காவியம் படிக்கும்போது இனிக்கிறது ; இன்னும் கொஞ்சம் ஊன்றிப் படிக்கும்போது சுவைக்கிறது ! அவருக்கே சொந்தமான தனி நடையில்—அழகுத் தமிழில் அருமையாக எழுதியிருக்கிறார் ! இராவணனின் இசைப் புலமையை நன்றாக வர்ணித்துள்ளார்.

விபுலானந்த அடிகளாருக்குச் சமர்ப்பணம் செய்திருக்கும் இந்நூல் நல்ல தாளில் — அழகான அட்டைப்படத்துடன் (கவிஞரே படத்தை வரைந்துள்ளார்) வெளிவந்திருக்கிறது:

—அத்தியடி பாமா


வெளி வந்துவிட்டது !

ஒன்பதாம் வகுப்புப்

**படிமுறைக் கணிதம்**

விலை ரூபா **6-00**

ஆசீர்வாதம் புத்தகசாலை,

32, கண்டி வீதி—யாழ்ப்பாணம்.

# புத்தகம்

மூலம் : ஆனந்திகா தர்மபிரிய

தமிழில் : அன்ரனி பெர்னுண்டோ.

அன்று பலத்த மழை பெய்தது. தெருக்களில் எல்லாம் மழைநீர் பெருகிக் கொண்டிருந்தது. மழை, சுற்றிலும் இரைச்சலை உண்டாக்கியவாறு ஓயாது கொட்டியது. சாளரங்களுக்கு அப்பால் மழைத்துளிகள் வழிவதை நான் சோம்பலோடு கவனித்துக் கொண்டிருந்தேன்.

அவளுடைய புத்தகத்தை வாங்கிவர வேண்டுமென்பது திடீரென என் நினைவுக்கு வந்தது. அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்து தரும்படி அன்றைக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்தான் அவள் என்னிடம் சொன்னுள். நான் அந்நாட்களிலேயே அந்தப்புத்தகத்தைத்தேடிப் பார்த்தேன், புத்தகம் விற்றுமுடிவடைந்து விட்டதாகப் புத்தகக் கடைக்காரர் பலர் என்னிடம் கூறினர், அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு எப்படியாவது புத்தகமொன்று தேடிவைப்பதாக என்து நண்பரான புத்தகக் கடைக்காரர் ஒருவர் எனக்கு வாக்களித்திருந்தார்.

கந்தோரிலிருந்து வெளியேறிப் போய் புத்தகத்தை எடுத்து வர வேண்டுமென்று எனக்குத் தோன்றியது எனினும் மழை பலமாகப் பெய்கிறது, புத்தகத்தைக் கொண்டுவரப் போனுல் நான் தெப்பமாக நனைந்து விடுவேன, நான் புத்தகத்தைக் கொண்டு வருமட்டும் அவள் காத்திருக்கிருள என்று எனக்குத்தோன்றியது. ஆவல் நிறைந்த அவள் முகம், நான் புத்தகத்தைக் கொண்டு போய்க் கொடுத்தபோது மகிழ்ச்சியால் பொங்கும் விதம் என் கற்பனையில் தோன்றியது. எப்படியாவது அவளுக்குப் புத்தகத்தைக் கொண்டுபோய்க் கொடுக்க வேண்டுமென்று நான் தீர்மானித்தேன்.

நான் மழையைப் பாராது கந்தோரைவிட்டு வெளியே இறங்கினேன். வழி தெரியாத அளவுக்குப் பலமாக மழை பெய்கிறது. தெரு முழுவதும் கடும்பனி போன்ற ஏதோ பரந்து கிடந்தது. நான்கு புறங்களிலும் கண்ணுடிகளை மூடிக கொண்டு மோட்டார் வண்டிகள் அடிக்கடி தண்ணீரை இரு பக்கங்களிலும் அள்ளி வீசியவாறு தெருவில் மேலும் கீழுமாகச் சென்றன. என்னிடம் குடையொன்று இடையாது. எனக்குத் திரும்பிவிடத் தோன்றியது. அவளது சாந்தமான முகம் என்முன் தெரிகிறது. நான் மழையிலேயே தெருவில் இறங்கினேன். மழைக்காகக் கந்தோர் ''போர்டிகோ''வின் கீழ் ஒதுங்கியிருந்த சிலர் என்னை வியப்போடு பார்த்தனர். தெருவின் மறுபக்கத்திற்குப்போய் 'ட்ரொலி' யில் ஏறும்போது என் உடல்

தெப்பமாக நனைந்துவிட்டிருந்தது. சிலவேளை புத்தகத்தை விற்றிருக்கலாமென்ற சந்தேகத்தோடுதான் நான் புத்தகக்கடையினுள் நுழைந்தேன். எனக்கென்றே புறப்பாக வைத்திருந்த புத்தகமொன்றைக் கடைக்காரன் நன்றுகச் சுற்றி எனக்குத் தந்தான்.

நான் புத்தகத்தையும் வைத்துக்கொண்டு மழை ஓயுமட்டும் புத்தகக் கடையிலேயே நின்றேன். மழையிலேயே திரும்பிப் போனால் புத்தகம் நனையுமென நான் அஞ்சினேன். நன்றுகப் பொழுது பட்ட பின்பே மழை நின்றது. நான் கந்தோருக்குப் போகாமல் நேரே வீட்டுக்கு வந்தேன்.

புத்தகத்தைக் கையில் எடுத்ததும் மகிழ்ச்சியால் நிறைந்த அவள் முகம் ரயிலிலும் என் கற்பனையில் தெரிந்தது. புத்தகம் கிடைத்தவுடன் அவள் மாணிக்கக் கல்லொன்று கிடைத்தது போல் மகிழ்ச்சி அடைவாள். என்மனம் காற்றில் மிதக்கும் பஞ்சுத் துண்டு போல் இலகுவானதென எனக்குத் தோன்றியது. என் உதடுகளிடையே தவழ்ந்த சிரிப்பை கஷ்டப்பட்டே அடக்கிக்கொண்டேன்.

நான் வீட்டினுள் நுழையும் போது, அவள் சோபாவின்மேல் சோம்பலுடன் அமர்ந்திருந்தாள். என்னைக் கண்டவுடன் அவள் புத்தகத்தைப் பற்றிக் கேட்பாள் என நான் நினைத்தேன். அவள் முயற்சித்து புன்சிரிப்பொன்றை உதிர்த்தாள். அவள் என்னிடம் ஒன்றுமே கேட்கவில்லை.

''நான் ஒரு சாமான் கொண்டு வந்திருக்கிறேன்'' நான் அளவற்ற மகிழ்ச்சியோடு சொன்னேன். அதனுலாவது அவள் புத்தகத்தைப் பற்றி அக்கறை கொள்வாளென நான் நினைத்தேன்.

''என்னது ?'' அவள் உற்சாகமின்றியே கேட்டாள். அவள் புத்தகத்தின் பேரில் இதைவிட அக்கறை கொள்வாளென நான் நினைத்தேன்.

''அந்தப் புத்தகம்'' நான் கவனமாக சுற்றப்பட்டிருந்த புத்தகத்தை வெளியே எடுத்தவாறு சொன்னேன். புத்தகத்தைக் காண்பதால் அவள் மிகுந்த மகிழ்ச்சி அடைவாளென்றும், அவள் சோபாவைவிட்டு எழுந்து வந்து என்னிடமிருந்து புத்தகத்தைப் பறித்துக் கொள்வாளென்றும் நான் நினைத்தேன்.

''அதுவா, அதை எனக்குக் கொண்டுவந்து தந்தார் சுது ஐயா (அண்ணு) இன்று பகல்.'' அவள் உற்சாகமின்றியே சொன்னுள். என் தொண்டை ஒரேயடியாக இறுகியதுபோல் எனக்குத் தோன்றியது. நான் மூச்சுவிட மறந்தவன் போல் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் இதயம் மிகவும் வருந்தியது. என் கண்களால் கண்ணீர் வெளிவருமோ என நான் அஞ்சினேன்.

''அப்படியென்றால் வேண்டாமா ?'' என் தொண்டை அடைபட்டுக் கம்மிய குரல் ஒன்று வெளிவந்தது. அவள் முன்னுல் நான் குறைவடைவதாய் எனக்குத் தோன்றியது. என் உள்ளங் கால்

களில் தொடங்கிய ஒருவித குளிர் மின்சாரம் போல் முதுகெலும்பு வழியே தலையின் பக்கம் பெருகிச் சென்றது.

"இப்போது எதற்கு. வேண்டாம்" அவள் உற்சாகம் இன்றிச் சொன்னாள், எனக்கு அவ்விடத்தில் நிற்கமுடியாததுபோல் தோன்றியது. என் தொண்டை அடைபட்டுக் கண்ணீர் பெருகுவதாக நான் நினைத்தேன். நான் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டு உடனே அறையினுள் போய் சாளரத்தால் வெளியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மழையின்பின் சுற்றுடல் சலனமற்று ஈரலிப்பாக இருந்தது. இரவும் நெருங்கி விட்டதால் சுற்றுப் புறமெல்லாம் இருள் பரவத் தொடங்கியது. நான் புத்தகத்தைப் பார்த்தேன். அழகிய படங்களாலான புத்தகம் என்னை அறியாமலே கையில் கசங்கிக் கிடந்தது. அறையின் அருகில் ஓடையில் தண்ணீர் ஓடியது. கையில் கசங்கிக் கிடந்த புத்தகத்தை நான் ஓடையில் வீசினேன். என்னை அறியாமலே என் கண்களில் நிறைந்த கண்ணீர் கன்னங்களை நனைத்தவாறு கீழே வடிந்தது.

நான் கண்களைத் திறந்து அறையைச் சுற்றிப் பார்த்தேன். அறை முழுவதும் காரிருள் சூழ்ந்து கிடந்தது. நான் கட்டிலில் போய் முகம் குப்புற விழுந்து தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டேன்.


## சந்தா விபரம்

"விவேகி" (மாதாந்த வெளியீடு)

| | |
|---|---|
| ஆண்டுச் சந்தா | — 4 ரூபா |
| அரையாண்டுச் சந்தா | — 2 ரூபா 25 சதம் |
| தனிப்பிரதி | — 40 சதம் |

**குறிப்பு:** மணியோடர், போஸ்ரல் ஓடர் என்பவற்றை ஆசிரியர், "விவேகி" சுண்டிக்குளி என்று எழுதி, கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பவும்.

ஆசிரியர், 'விவேகி'

தொலைபேசி : 274 — 29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

# சுகவாழ்வு

எழுதியவர் : 'மான்விழி'

சுகத்துக்கு நிலைக்களன் சரீரம். ஆகவே இச்சரீரத்தை நோய் நொடியின்றி வெகு கவனமாகப் பாதுகாத்தல் அவசியமாகின்றது. "நோயற்ற வாழ்வே சுக வாழ்வு" என்பது ஒரு முதுமொழியாகும். இம்முதுமொழிக்கேற்ப நாம் தேகாரோக்கியமுள்ளவர்களாய் சுக வாழ்வை அனுபவிக்க வேண்டும்.

சுகவாழ்வு என்பது நமது தேகத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பும் தத்தம் தொழில்களைச் சரிவரச் செய்தலாகும். இவைகள் தமக்குரிய தொழிலைச் செய்யாமலிருப்பது சுகக்குறைவாகும்.

சுக வாழவுக்கு ஆதாரமானவை ;-கூணவு, உடை, காற்று வசிக்குமிடம், வெளிச்சம், தேகாப்பியாசம், ஓய்வு. நாம் சுகவாழ்வை விரும்புகிறோமானால், இவையனைத்தையும் அனுசரித்தே தீர வேண்டும். இவையனைத்திலும் தேகாரோக்கியத்துக்கு அதாவது சுகவாழ்வு இன்றியமையாததாயிருப்பது தேகாப்பியாசமாகும். ஆகையால் இதனை நமது கடன்களில் ஒன்றாக வைத்துக்கொள்ளுதல் அவசியமாகும். ஆயுதங்கள் துருப்பிடித்து அழிந்து போவதைப் போல, உழைப்பில்லாத உடலும் உரங்கெட்டுப் போகும். ஆகையால் மனிதனது உடம்பு பல தேகாப்பியாசத்தால் இயங்கவேண்டும். பெரும்பாலும் தேகாப்பியாசம் காலையில் செய்வது எனெனில், பவனத்திலுள்ள அணுக்கள் சுத்தமானவைகளாயிருக்கின்றன. தேகாப்பியாசத்தினால் உடம்பிலுள்ள எல்லா உறுப்புக்களும் வேலையில் ஈடுபடுகின்றன. இதனால் நமது தேகத்திலுள்ள கழிவுப் பொருட்கள் வெளியேறுகின்றன. அப்போது தமது தேகம் வேறு நோய்களுக்கு இடமாகாது நோய்க் கிருமிகள் "பரிதி முன் பனிபோல் மறைந்து விடும், இன்னும் தேகப்பியாசம் செய்வது மாத்திரம் போதாது. தேகத்துக்குப் நல்ல புஷ்டியைக் கொடுக்கக்கூடிய ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். சுத்தமான தண்ணீரைப் பருகுதல் வேண்டும், நல்ல காற்றைச் சுவாசிக்கவேண்டும். காற்றானது மனிதனுக்குயிர் வாழ அவசியமாயிருக்கின்ற. எல்லாவற்றினுள்ளும் சிறந்து விளங்குகின்றது ஆகையால் காற்று இல்லையானால் மனிதன் சீவிக்கவே மாட்டான். காற்றின் மூலம் பல நோய்கள் உண்டாகின்றன. இவற்றைத் தடுக்க நல்ல காற்றைச் சுவாசிக்க வேண்டும். நாம் வசிக்கும் வீடு சுக வாழ்வுக்கு எற்றதாக அமையப் படவேண்டும். நல்ல வெளிச்சம் வீட்டினுள் பிரவேசிக்கத் தக்கதா

யும், காற்றேட்டம், பிரவேசிக்கக் கூடியதாயுமிருக்கவேண்டும். இன்னும் உணவு, உடை, என்பவற்றையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் சுத்தமாக இருப்போமாஞல் சுகவாழ்வைப் பெறலாம். ''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்பது போல் நோய் நொடியில்லாத வாழ்வு தான் குறையாத பாக்கியம். ஒருவன் பெரிய செல்வந்தனுயிருந்தும் அவன சரியான சுக் வாழ்வை நுகராவிட்டால் அவனது பணத்திஞல் ஒரு பிரயோசனமுமில்லை. சுகவாழவில்லாதவன் தனக்கும் உதவான், உலசுத்தவருக்கும் உதவான். இதஞல் சுகவாழ்வில்லாதவன் இருந்து ஒரு பலனுமில்லை. ஆகையால், சுகவாழ்வு உடையவனின் வாழக்கை எப்போதும் இன்பமாகவேயிருக்கும்

நமது தேகசுகம் கெடுதலடைவதற்குக் காரணம் உடம்பிலுள்ள உறுப்புக்கள் சரிவர அதனதன் தொழிலைச் செய்யாமல் விடுவதாகும். நாமுண்ட உணவைச் சீரணக் கருவிகள் சீரணப்படுத்துகின்றன. இக்கருவிகள் இடையீடின்றி தங்கடமைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும் நிலையே சுகநிலையாகும். இதற்கு மாருன நிலை சுகக்குறைவர்ன் நிலையாகும். சுகக்குறைவானவன் எப்போதும் சுறுசுறுப்பின்றி சோம்பேறியாகவே காணப்படுவான, அவன் தேகம் நோய்களுக்கு இருப்பிடமாயிருக்கும். அப்படிப்பட்டவன் எவ்வித வேலைக்காவது உதவமாட்டான். அவன் ஒரு செல்வனுயின் அச் செல்வத்தாலாய பயனை அனுபவித்தலின்றி வருந்துகின்றுன். இன்பங்களை அநுபவிக்க முடியாமல் தத்தளிக்கிருன். அதஞல் சுகமில்லையேல் மற்றவையிருந்தும் இல்லாதனவேயாகும்.

மனிதனது வாழ்வுக்கு சுகம் மிகவும் அவசியம். சுகமுளதேல் மற்றெல்லாந் தேடலாகும். சுகமில்லாது மற்றெல்லாமிருந்தும் அவைகளை அனுபவிக்கமுடியாது ஆகையால். நாமும், சுகவாழ்வை அடைவதற்கான வழிகளைக் கையாண்டு நமது தேகத்தை நோய்களுக்கு இருப்பிடமாயிருக்க விடாது சுகவாழ்வை அனுபவிக்க முயலுவோமாக !

## அன்பு

ஒருவரின் கண்ணீரைத துடைக்கும் செயல், அவருக்காக பெரும் சமுத்திரங்களைவிட அதிகமாகக கண்ணீர் வடிப்பதிலும் சிறந்த செயலாகும் !

— பைரண்

அன்பு மின்னலைப் போன்றது அதை நீங்கள் பார்ககமுடியும். எங்கு, எப்போது—உண்டாகிமுடிந்தது என்று கூறமுயாது.

— லாகொரடைரே

# கல்வி வளர்ப்போம்!

(பா. சத்தியசீலன்)

விண்ணிற் பறப்பதெங்கள் எண்ணமுமல்ல—ஒளி
விஞ்சும் மணிவகையெம் நெஞ்சமுமல்ல—தமிழ்
வண்ணக் கவியிற்புது எண்ணமணைத்து—புகழ்
வாரிக் குவித்தல் எங்கள் ஆவலுமல்ல

கள்ளக் கருவிழியில் காதை சொல்லுவார்—மலர்க்
காலின் தளர்நடையில் பாடல்தருவார்—அந்தப்
பிள்ளைக் கனிகளுடன் பேசிமகிழும்—ஒரு
பேற்றைத் தருந்தொழிலே போற்றிமகிழ்வம்.

வெள்ளைக் கமலமென்னும் உள்ளமலரில்—பல
விந்தைக் கலைகளுக்கு வித்தையிடுவோம்
துள்ளித் திரியுமந்தத் தோழருடன்—ஒரு
தும்பி எனத்திரிந்து அன்புவிளைப்போம்

உள்ளத் திறனறிந்து உண்மையறிவை—அவர்க்கு
ஒருந் திறனறிந்து ஓகையுடனே
அள்ளித் தினமவர்க்கு நாமருத்துவோம்—அந்த
அன்புப் பணியிற் பல விந்தை புரிவோம்

பாலன் மனத்திலொரு பண்பை வளர்ப்போம்—அந்தப்
பச்சை உளத்திலுள அச்ச மொழிப்போம்
நூலென் றவர்க்குரைத்து நோய்கள்புரியோம்—அவர்
நோக்கில் இருந்தறிவி னுக்கமளிப்போம்

பச்சை வெளியில் அவர் பந்தையுதைவார்—அங்குப்
பாயும் புனலில் உடன் தோய நினைவார்!
இச்சை பெறச் சிறிய கப்பல் விடுவார்—நாமும்
இங்குத் தொடர்ந்தறிவை ஏற்றி மகிழ்வோம்

மேலைத் திசையிலொரு பார்வை யெறிவம்—அங்கு
மேவும் புதியவுத்தி மூத்து மெடுப்பம்!
காலத் துடனமைந்து 'கல்விவளர்ப்பம்—அந்தக்
காதற் பணியிற்புது மேதினி செய்வம்!

# "அகத்தியன் அனுமான்" இசைப்போட்டி

(கு. வேலாயுதம்பிள்ளை)

**ச**ங்கீதம் மிகப் புராதன மானது, புனிதமானது, வசீகர மானது. எதையும் இணைகரும் தன்மையும் உடையது. சுருங்கக் கூறின் உலகம் நிலைப்பதற்கும் ஓர் ஆதாரமானதும் ஜீவ நாடி போன்றதும் இசை. ஆக்கவும்அழிக் கவும் வல்லது. இதனல்தான் இசை யானது இறைவனே எனக் கருது வர். இசைவிற்பன்னர்கள் இசை யினுல் எதையும் சாதித்து விடு வார்கள். ஆனுல் இவர்கள் இசை யைக் கொண்டுள்ளோம் எனப் பெருமிதம் கொள்ளலோ கர்வ மடைதலோ இசையின் தத்துவத் தைக் குறைவுறச் செய்துவிடும். இத்தகைய நிலையைத் தெய்வீகப் புலமையுடையவர்களே அடைந் துள்ளார்கள் எனச் சில கதைகள் உண்டு. முற்காலத்தில் அகஸ்திய ரும் அநுமானும் உண்மையான இசை மேதைகளாக விருந்தார் கள். ஆனுல் தங்களுள் தனித் தனியே தான் பெரிது என்ற எண் ணம் உடையவர்களாக விருந்தார் கள். ஒரு சமயம் அநுமான் அபாரமாகச் சங்கீத சாதனை செய்துகொண்டிருந்தார். அவ்வம யம் திரிலோக சஞ்சாரியாகிய நாரதன் அது கேட்டு வியப்புற்று என்ன கானம்! ஆகா! இவ ருக்கு யான எம்மாத்திரம்; என் ருலும் இவரிடம் போய் சில சந் தேகங்களைக் கேட்போம் என்று அநுமன் முன்புபோய்ஸ்ரீநாராயண என்று இசையுடன் ஜெபித்தார். உடனே அநுமான் அவரை விதிப் படி அர்ச்சித்து முனி சிரேஷ்ட டரே, யான் இன்று புண்ணியன் ஆனேன். சங்கீதமே உருவாகிய தங் களின் தரிசனத்தால் என்னுடைய சங்கீதமும் நிலை உயர்ந்து விட்டது என மகிழ்ச்சி தெரிவித்தார். ஸ்ரீ நாரதர் புன்முறுவலுடன் அநு மந்தா! உமது கானமே என்னை அப்பால் போகவிடாது உம்மிடம் இழுத்து வந்தது. யான் இப்படி ஈர்க்கப்பட்டால் இசைப்பிரியனுகிய சங்கரன் இங்கேயே...... என்ருர். சுவாமி, எல்லாம் தங்கள் ஆசீர் வாதத்தால்தான் என வணங்கி நின்ருர். ஸ்ரீ நாரதர் அநுமானை நோக்கி, உம்மால் எனக்கு ஒரு விஷயம் முடிய வேண்டும். அதை மறுக்காது முடித்துத் தருவீரா? அது உம்மால்தான் முடியும் என் ருர். அதற்கு அநுமான் உங்கள் வேண்டுகோளுக்கு யான்மாறுண்டா சொல்லுங்கள் என்ருர்.

நாரதமுனி, அநுமந்தா வ! நீர் சிரஞ்சீவி, உமதுஇசையும் அவ் வாறே.ஆனுல்பொதிகைமலை அகஸ் தியன் என்னைக் கூட மதிக்கிருன் இல்லை. தானே சர்வகலா வல்ல பன் எனத் தம்பட்டம் அடிக்கி

றுன். ஆகையால் நீர் போய் அவரின் கானத்தைக் கேட்க விரும்புவதாகக் கூறி இசைப் போட்டியை நடத்தும், யானும் அங்கே வருகிறேன். இம்... இப்போதே... அநுமான் முனிவரை வலம்வந்து வணங்கிவிட்டு ஒரே பாய்ச்சலாக ஆகாய மார்க்கமாக மறைந்து பொதிகைமலையை அடைந்தார். அங்கு மிகு பக்தி வியனத்தோடு அகஸ்தியர் முன்புபோய் வணங்கி நின்றார். அகஸ்தியரும் அன்பு கூறி அழைத்து வந்து விடயம் யாது என வினவ, அநுமானும் ஐயனே, தங்களின் கானம் கேட்கவே வந்தேன் எனக் கூறவே, அகஸ்தியரும் ஞானத்தால் மனநிலை உணர்வர் ஆதலால் நல்லது பாடுகிறேன் கேளும், என மலையமாருத உருகிளி என்ற இராகத்தை ஆலாபனை செய்யத் தொடங்கினார். சில நிமிடத்தால் மலை உருகியோடும் தன்மைகொண்டு பின் இறுகத் தொடங்கியது. அப்போது அநுமானின்வால் உருகிய போது உள்ளே சென்றது. பின் மலை இறுக இறுக வால் எடுக்க முடியாமல் பிடிபட்டுக் கொண்டது. அவ்வமயம் நாரத முனியும் அங்கே வந்தார். உம்... என் தயங்குகிறீர் அநுமாந்தரே. மணிரெங்கு மோகினியைப் பாடும் என, அவ்வாறே அநுமான் கானஞ் செய்தார். மலையானது உருகிச் சமுத்திரம்போல் காட்சிகொண்டது. அகஸ்தியர் சீற்றம் கொண்டு ஓய் நாரதரே! எம்மிடம் உமது கைவரிசையைக் காட்ட வந்தீர்எனக்கூறி தீபகவர்ச்சனிஇராகத்தைப் பாடவே ஜலசங்கையெல்லாம் ஒரேதீயாக மாறியது. உடனே அநுமான் தேவாமிருத வர்ச்சனியைப் பாடினார். மேகம் கறுத்து ஒரே மழை பெய்யத் தொடங்கித் தீயை நிர்மூலமாக்கியது. இதற்கிடையில் அநுமான் பாசங்கி மர்ச்சனி இராகம் தொடங்கவே அகஸ்தியர் பல பாசங்களால் பிணைக்கப்பட்டார். இதனால் தெய்வலோகமே தடம் புரண்டது. சிவபிரானே இடபாரூடனாக அங்கே வந்து வாதம் வேண்டாம் விடுங்கள். நீங்கள் இருவரும் இசை மேதைகள்தான். ஆனால் இனிமேல் எதற்கும் கர்வம் கொள்ளாதீர்கள் என அருளி இருவரையும் பிராண நண்பர்களாக்கி மறைந்தார். நாரதரும் கலகம் கண்டு மகிழ்ந்தார்.

# கடவுளும் மனிதனும்

— மருதூர்க் கய்யாம் —

விரிந்து பரந்து பரவை சூழ்ந்த இம் மண்ணுலகிற் கடவுளொருவன இருக்கின்றுனு என்றதொரு கேள்வி மனிதனின் பகுத்துணருமறிவு வளர்ச்சி யடைந்து செயற்படத் தொடங்கிய அன்று தொட்டு இன்றுவரை வினவப்பட்டு வருகின்றது. ஆனுல் கடவுளொருவன் இருக்கின்றுனென்பது இவ் வையகம கண்ட பேருண்மையாகும்.

மனோன்மணியம "எல்லையறு பரம் பொருள்" என்றும, மகாபாரதம் "ஞானமாகிய பரம்பர வமிழ்த" மென்றும் "இரட்சணிய யாத்திரிகம், ஒப்புறவுயர்ந்த வொரு தனி முதலெனறும்,சீருப்புராணம் "பழுதிலா மெய் முதலவன்" என்றும் வர்ணித்துப் போற்றப்படுங் கடவுள் ஏகனுகவும் தன்னிகரற்ற மாபெருஞ சக்தியாகவும் உலகெங்கும் வீற்றிருக்கினறுன். உலகிலுள்ள சகல படைப்பினங்களையும் சிருஷ்டித்தவன் அவனே. விண், மண், கோள், மலை, மதி, நதி அனைத்தும் அவனது சிருஷ்டித் தொழிலின் ஆக்கங்களாகும். இந்த இறைவனே வள்ளுவர் கூறும் "உலகின் முதற்பொருளாக" அமைந்திருக்கிறுன்.
"அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்களெல்லாம் "அ" வையே முதலெழுத்தாகக் கொண்டிருப்பது போல் உலகமும் இறைவனையே முதற் பொருளாகக் கொண்டுள்ளது. இத்தகைய இறைவனொருவன் எங்கும் வியாபித்து, சகலவற்றையும் சிருஷ்டித்து அருள்கூர்ந்து உறைந்திருக்கின்றுனென்பதில் எத்துணையும் ஐயமில்லை. உலகிலுள்ள அத்தனைச் சமயங்களும் கடவுளின் இருப்பையுண்மையென நிரூபிக்கத் தோன்றியவைகளே. ஆனுல் எம் மதத்தையுந்தம் மதமெனக் கொள்ளாத நாத்திகர்கள் மட்டுமே இறைவன் இல்லையென்று, வாதம் புரிந்து தங் கூற்றை நிரூபிக்கப் பொய்க் காரணங்கள் கூறி மக்களையுமவர்களது மனங்களையும் மாசுபடுத்துகினறனர். அவ்வாருயின உயிரினங்களும் பிறவும் எவ்வாறு உலகிற் றேன்றினவென்று அவர்களை வினவினுல் அவை எத்துணையுமின்றிச் சுயமாகவே தோன்றின வென்று விடைபகர்கின்றனர். அவர்கள் இவ்வாறு பொருட்களனைத்தும் சுயமாகவே தோன்றினவென்றுல், தற்காலத் தெழும் நவீன சிருஷ்டிகளை ஏன் மனிதன் சிருஷ்டிக்க வேண்டும்? அவைகளும் சுயமாகவே தோனறினுலென்ன? என்று மீண்டுமவர்களை வினவினுல் வாய் மூடி மௌனம் சாதிக்கின்றனர். இதனுல் அவர்களது வாதம் பொய்யென்று புலனுகின்றது.

இன்றைய உலகின்கண் எண்ணரிய மதங்கள்தோன்றியுள்ளன. அம்மதங்களனைத்தும் தன்னிகரற்ற—ஒப்பற்ற பெருஞ் சக்தியான கடவுளைப் பற்றியும், அவன் ஏகன

என்பதைப் பற்றியுமே விளக்கிக் கூறுகின்றன. இத்தகைய பேராற்றல் மிக்க இறைவன் யார்? அவன் எங்கிருக்கிறன ? என்பது பறறி ஈண்டு ஆராய்வாம்.

மாணிக்க வாசகப் பெருமான் தினந்தோறும் கிழக்கு வானிலெழும் சூரியனில் ஒளியை அமைத்தோன் இறைவன்; அழகுறு மதியில் குளிர்ச்சியை வைத்தோன் இறைவன் ; வலிமையான தீயில் வெம்மையை வைத்தோன் இறைவன் ; வானிற் பல கலப்புக்களைவைத்தோன் இறைவன் என்று இறைவன் யார் என்ற கேள்விக்கு அழகான விளக்கந்தருகின்ருர்.

"...............நாள்தொறும்
அருக்கனில் சோதி யமைத்
தோன்; திருத்தகுமதியில்
தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்;
பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்..."

ஆனல் இத்தகைய "பழுதிலா முதலவனுன" இறைவன் எங்கிருக்கின்ருனென்ற கேள்விக்கு இடங்குறித்து விடையிறுத்த லென்பது அசாத்தியமானது. இறைவன் பரந்துபட்ட பரவையின்கண்ணுள்ள நீர்த் துளிகளிலும், பரந்த விவ்வுலகின் கண்ணுள்ள நிலம், வானம் மறைந்துள்ள விடங்கள், தெரியக்கூடிய பொருள்கள் போன்றவற்றிலும் பரந்துள்ளானென்று நம்மாழ்வாரென்ற பக்திப் பெருமான் இறைவனுறைந்திருக்குமிடம் பற்றிக் கூறுகின்ருர்.

"பரந்த தண் பரவையுள்
நீர் தொறும் பரந்துளன்.
பரந்த அண்டம் இதுஎன,
நிலம் விசும்பு ஒளிவறக்
கரந்த சில் இடந்தொறும்
இடம் திகழ் பொருள்தொறும்
கரந்து எங்கும் பரந்துளன்"

கவி கம்பரும்,

"சாணிலும் உளன்; ஓர் தன்மை
அணுவினைச் சத கூறிட்ட
கோணினும் உளன்; மாமேருக்
குன்றினும் உளன்......"

என்று பாடுகின்ருர். அவர் இன்னேரிடத்தில், "பரமாகாயத்திலிருந்து தோன்றி, யெல்லை கடந்த ஐம்பெரும் பூதங்களி னெவ்விடத்தும் உடலுமுயிருமுணர்வும் போற் கடவுள், உள்ளேயும் புறத்தேயும் இருக்கின்ருர்" என்ற கருத்தைத் தம் பாடலிலேற்றிப் பாடுகையில்,

"வானின் றிழிந்து வரம்பிகந்த
மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ
லுள்ளும் புறத்து முளனென்ப"

என்று பாடுகின்ருர். இப் பக்திப் பாடல்களிலிருந்து இறைவன் எங்குமுள்ளா னென்பது புலனுகின்றதல்லவா ? எமது யாக்கை

யின் கண்ணுள்ள ஆத்மா, எங்கும் பரந்து, ஊனக் கண்களுக்குப் புலனுகாது, மனக் கண்ணிற்கு மட்டும் புலனுகுவது போல "அங் கிங்கெனுதபடி எங்கும் பிரகாச மாய்" நிறைந்த, முழு முதற் பொருளாகிய கடவுளும் எங்கும் உறைந்து, சடப்பொருட்களைக் காணும் எமதூனக் கண்களுக்குப் புலப்படாது கரந்திருக்கின்ருன். இந்த விள்ளுதற்கரிய வுண்மை யைச் சீருப்புராண ஆசிரியர் உம றுப் புலவரவர்கள்:

"உள்ளுறைந் தெவர்க்குந் தோன்ரு
துலகெல்லாம் நிறைந்த மேலோன்"

என்று உணர்த்துகின்ருர்.

இனிக் கடவுளின் தொழில் அவனது தன்மை முதலியவற் றையும், மனிதனுக்கும் கடவு ளுக்குமிடையேயுள்ள தொடர்பை யும் ஆராய்வாம்.

பரம தயாளனுகிய இறைவ னின் தொழில்கள் ஆக்கல், அழித் தல், காத்தல் எனப் பழந்தமிழ் நூல்கள் கூறும். கம்பநாடாரும் நமது ராமாயணத்தில் பரம்பொரு ளின் தொழில் உலகம் யாவையு மாக்கலும், காத்தலும், அழித் தலுமாகுமென்று கூறுகின்ருர்.

"உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத் தலுநீக்கலும் ............"

இம் முத்தொழிலையும் பிறர் துணையின்றிப் பெரும் வல்லமை யோடு சிறப்புறப் புரியும் தனக் குவமையில்லாதானின் பண்புகள் யாவை? அவன் மானிடனின புறக்கண்களுக்குத் தோன்ருத வன்; எங்கும் பரந்து, யாவற்றை யும் நோக்கி, அகக்கண்களுக்கு மட்டுமே தோன்றிக் கரந்திருப்ப வன்; அளவும் உருவுமற்றவன்; அரூபி; அன்புள்ளவன்; அன்ப ருக் கன்பராய், அழைப்போரை யணுகியும், வெறுப்போரை விலக் கியும், தன்னை நாடிப் பணிந்து உளமுருகுவோர்க்குத் தேனினு மினிய ஆராவமுதாயிருப்பவன; ஒப்பற்றவன்; தன்க்குவமையில் லாதவன்; அறகடலையுடையவன்; இன்பமுந் துன்பமுமற்றவன்; அழி வற்றவன்; வேண்டுதலற்றவன்; தோன்ருத் துணை. இவை மட் டுமா அவனது பண்புகள்? இல்லை யில்லை; ஏராளம்! ஒப்பற்ற பரம வேந்தனின் தன்மையை வள்ளு வர்,

"தனக்குவமை இல்லாதன்......" என்றும்

"அறவாழி அந்தணன்......" என்றும்

"வேண்டுதல் வேண்டாமை
இலான் ......" என்றும்

மாணிக்க வாசகர்,

"ஆரா அமுதே அளவு இலாப்
பெம்மானே !
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும்
ஒளியானே !
நீராய் உருக்கி என் ஆர்உயிராய்
நின்றானே ?
இன்பமும் துன்பமும்
இல்லானே ! உள்ளானே!"

என்றும் அழகுறப் பாடுகின்றனர்

இத்தகைய எல்லாம் வல்ல இறைவனுக்கும் மானிடனுக்கு மிடையே நெருங்கிய தொடர்புள்ளது.

எண்ணரியபிறவிதனில்
மானிடப்பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி
வாய்க்குமோ
ஏதுவருமோ அறிகிலேன"

என்று தாயுமான அடிகள் பாடியபடி, அரிதினுமரிதாகிய மானிடப் பிறவி யெடுத்த நாம் ஒப்பற்ற கடவுளை நெருங்கியவர்களாக விருக்கின்றோம்,

கடவுள் எம்மை உயர்ந்தவந் தஸ்தில் சிருஷ்டித்து ஊன் உறக்கம் போகம் இன்னோரன்னவற்றையும் எமக்களித்து உலகில் வாழ்ந்து அறக்கடலையடைந்து. உய்யும்படி விட்டிருக்கின்றார். இதற்கு யாம் கைம்மாறாக அவரடி தொழுது அவரையே அல்லும் பகலும் நினைந்து நெக்குருகி அவரது பாதக் கமலங்களையடையக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

மானிடனைத் தவிர்ந்த ஏனைய சிருஷ்டிகளும் பேரின்பமயமான இறைவனை நினைந்து துதிக்கின்றன. அவன் செய்யாமற் செய்த உதவிக்கு வானகமும் வையகமும் பிரதியுபகாரம் ஆற்றுதற்கு அவனைத் தொழுது பணிகின்றன: அங்க அசைவுகளாலும் தம்மைப்பணித்து உயர்த்திக் கொள்வதாலும். நீண்ட மௌனத்தாலும் கூக்குரலாலும் அவனைத் தியானிக்கின்றன. ஆனால் மானிடர்களோ அந்த காரத்துள் மூழ்கி "இகபர மிரண்டினிலும் உயிரினுக் குயிராகி எங்கும் நிறைகின்ற பொருளை, மறந்து. தயங்கித் தியங்கிக் குறண்டிக் கிடக்கின்றனர், பொய்யுரைத்து நவ நிதியந் தேடுவதிலேயே தம் வாணாளைக் கரைக்கின்றனர்; பண்பற்ற பாவையரை நாடிக் கூடிப் புல்லி யின்பஞ் சுகிக்கின்றனர்; பாவக்கடலை நீந்திக் கடந்து, அறக் கடலையடையவோராது. சதா பாவத்திலேயே மூழ்கி, மூச்சுத் திணறி ஆப்பசைத்த குரங்குபோலாகி விட்டனர். இது போதரும் வகையில் பட்டணத் தடிகளும்,

"நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியந்தேடி
நலமொன்று மறியாத
நாரியரைக் கூடி

பூப்பிளக்க் வருமேழைப்
புற்றீசல் போலப்
புலபுலெனக கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்!
காப்பதற்கும் வகையறியீர்
கைவிடவும் மாட்டீர் !
கவட்டுத்தோல் மாத்துளையிற்
காலுழைத்துக்கொண்டீர் !
ஆப்பதனை யசைத்துவிட்ட
குரங்கதனைப் போல
அகப்பட்டீர் கிடந்துழல
வகப்பட்டீரே !''

எனப் பாடியுள்ளார். இது தகுமோ ? அவனது உண்மைத் திருவடிகளைத் தொழாது இதிருப் பதினுல் பயனென்ன ? அவனது திருவடிகளைச் சேர்வதனுலன்றோ உலகில் நீடு வாழ முடியும் ?

''மலர்மிசை ஏகினுன் மாணடி
சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்''

ஆயிரமாயிரம் நூல்களைக் கற்று பரிபூரணுனந்தமான கடவுளின் திருவடிகளைத் தொழாமலிருப்பதால் பயனென்ன ? இதனுலன்றோ வள்ளுவரும்,

'' கற்றதனு லாய பயனென்கொல்
வாலறிவன்
நற்றுள் தொழாஅர் எனின் ''

என்று கூறியுள்ளார். ஆகவே மானிடர்களாகிய நாம், சென்றவற்றை மறந்து, பாவக்கடலை விட்டெழுந்து, அறப்பரவையுள் மூழ்கா நின்று, அறக்கடலாகிய அந்தணனின் திருப்பாதக் கமலங்களை யடைந்து வாழவேண்டும்.

இறைவனினிருப்பு, அவனது பண்பு, அவன் மானிடர்களுக்களித்த விநோதங்கள் முதலியவற்றை யுணர்ந்த நாம். இளங்கோவடிகள் கூறும்

'' பரிவு மிடுக்கணும்
பாங்குற நீங்குமின்
தெய்வந் தெளிமின்
தெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின்
புறஞ்சொல் போற்றன்மின்
ஊனூண் றுறமின்
உயிர்க்கொலை நீங்குமின்
தானஞ் செய்மின்
தவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்
தீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின்
பொருள்மொழி நீங்கன்மின்
அறவோ ரவைக்களம்
அகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின்
பிழையுயி ரோம்புமின்
அறம்மனை காமின்
அல்லவை கடிமின்
கள்ளுங் களவுங்
காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும்
விரைவினி லொழிமின்
.................................................
மல்லன் மாஞா லத்து வாழ்வீர் ''

என்ற முறைப்படி வாழ்ந்து உய்வுற்று உயர்வோமாக !

# சாரதா, என்னை மன்னித்துவிடு!

'பாமா ராஜகோபால்'



ஞானம்

ஐயோ! எவ்வளவு பயங்கரமான முடிவு? என்னை வளர்த்து விட்ட அக்காளை யாராவது மணம் செய்து கொள்வதென்றுயாராவது முடிவு செய்வார்களா? ஆனந்தனுக்கு என் இந்தப் பொல்லாத எண்ணம் தோன்றியது? சாரதா அறிந்தாலே தற்கொலை செய்து கொள்வாளே! அவள் ஆனந்தனைப் பற்றி என்னவெல்லாம் எண்ணியிருப்பார்கள்-என்னோடு இன்பமாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதற்காக அல்லவா எம்மிடையே அன்பு வளர்வதற்கு ஏதுவாக இருந்தாள்.

அவர்களுடைய சகோதர வாஞ்சை புனிதமானது, பரிசுத்த

மானது அதன் தூய்மைக்கு நிகர் வேறு எந்த உணர்ச்சியிலும் கிடையாது ?

காதல்!...... அதன் ஆழத்தில் காமம் மூடிக்கிடக்கிறது; கண்டதும் திடீரென்று தோன்றுவது சுயநலத்தாலும் உந்தப்படுவது; அது தோன்றுவது போலவே திடீரென்று மறைந்து விடலாம்,

ஆனல்—சகோதர அன்பு...? தெய்வீகத் தன்மைபொருந்தியது;

ஆனல்—

ஆனந்தன் அத்தகைய தூய்மையான தெய்வீகத் தன்மை பொருந்திய அன்பைக் காம ஆசையாக மாற்றிக் கொள்ளப் பார்க்கிருரே! அவர் எனக்கு எழுதியிருக்கும் கடிதம்—

**'ஞானம்' நான் என் காதலைத் தியாகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது எனக்குக் கடமையே பெரிதாகத் தோன்றுகிறது. என் அக்காளின் வயிற்றிலே ஆறு மாதக் கரு வளர்ந்து வருகிறது. அவளுடைய கல்லூரி அதிபர் சுப்பிரமணிய மாஸ்டர் ஆசை காட்டி மோசம் செய்துவிட்டார். அவனைப்பற்றி உலகிற்குக் கவலையில்லை. ஆனல் என் அக்காளை சும்மா விடுமா? விபசாரி என்று உலகம் பட்டம் சூட்டும். எனக்காகவே வாழ்ந்தாள் என்னைப் படிப்பித்தவள்—என்னை மனிதனுக்கியவள்—என் சுக வாழ்வைஅடி கோலியவள்—அவளுக்காக என் வாழ்வை அர்ப்பணம் செய்து விடுவதில் தவறு இல்லையே !**

**நான் உன்னை மனப் பூர்வமாகக் காதலித்தது உண்மைதான். ஆனல்—அதிலும் மேலாக அக்காளிடம் அன்பு வைத்திருந்தேன். வைத்திருக்கிறேன்; அந்த தூய அன்புதான் காதலையும் வென்றுவிட்டது!; மன்னித்து விடு-!! சகோதரன் ஆனந்தன்.**

எவ்வளவு பயங்கரமான வலையைப் பின்னிவிட்டது விதி; இதிலிருந்து வெளியேற வழி ?...நினைத்தால் இந்த வலையை எல்லாம அறுத்தெறிந்து விடலாம்; அதற்குப் பொறுப்பாளி சுப்பிரமணிய மாஸ்டர்தான ! சாரதாவை மணம் செயது கொள்ள அவர் ஏன் மறுக்கிருர் ? அவள் அழகாக இல்லையா ? ஏன்...அவரிடம் ஒருமுறை சென்று மன்ருடினல்......அவர் மணம் மாறிவிடக் கூடுமல்லவா ?

## ஆனந்தன்

என் முடிவு பயங்கரமானதுதான; ஆனல் வேறு என்ன மார்க்கம் தானிருக்கிறது? நாளைக்கு அக்காள் ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டால்-ஐயோ இந்த உலகம் என்ன சொல்லும். சமூகம் அவளைச் சண்டாளி என்றெல்லாம் ஏசுமே! இவைகள் நடவாமலிருக்க என்னல் ஏன செய்யமுடியாது ?

சாரதாவோடு என்வாழ்க்கை இணைந்து போகாதா? அவள் அழகாக இல்லையா? அவள் வயது இருபத்திரண்டு- என் வயது இருபது! அதனால் என்ன?

கல்யாணமாகாமல் பிள்ளை பிறந்தது என்ற வசையிலும் பார்க்க- ஒன்றாக வளர்ந்த அனுதைப் பையனைக் கல்யாணம் செய்து கொண்டாள் என்ற இழிவை ஒருவாறு சமாளித்துக் கொள்ளலாமல்லவா?

சிறுவயதிலிருந்து தாய் தந்தையரை இழந்துவிட்ட எனக்கு அருமைச் சகோதரியாக தாயாக என்னைச் சீராட்டி வளர்த்தாள்; தான் பட்டினி இருந்த போதும் கூட எனக்கு நேரத்துக்கு நேரம் உணவுதேடித் தந்து என்னைப் படிப்பித்தாளே! இதற்கெல்லாம்நான்செய்யப்போகிறகைமாறு

அவள் மானத்தைக் காப்பாற்றுவதற்காக இதுவரை தாயாகவும் சகோதரியாகவும், இருந்தவளை இனிய பத்தினியாக்க வேண்டியது தான்!

அவள் மனதிலே வளர்ந்த பரிசுத்தமான அன்பை 'கல்யாணம்' என்ற செயலால் மாசு படுத்துவதா?...வேறு என்ன வழி தானிருக்கிறது அவள் மானத்தைக் காப்பாற்றுவதற்கு?...

**அவன்-அவன்தான் சுப்பிரமணிய மாஸ்டர் ஆசை காட்டி மோசம் செய்துவிட்ட மோசக்காரன்! அந்தப்பாவியை எவ்விதமாவது பழிவாங்கியே தீரவேண்டும்;** அதற்கு இது சமயமல்ல! முதலில் சாரதாவின் அவமானத்தைத் துடைக்கவேண்டும். பிறகு... அவனை-அந்தப் பாவியைப் பார்த்துக்கொள்வோம் இதுதான் என் முடிவான தீர்ப்பு.

## சுப்பிரமணிய மாஸ்டர்

'இந்தச் சின்னஞ் சிறுக்கிக்கு எப்படி என் ரகசியமெல்லாம் தெரிந்ததோ?' என்று நினைத்தேன் அந்தப் பெண் என்னிடம் மன்றுடிய போது; அவள் பெயர் ஞானமாம். ஆனந்தனின் காதலியாம் 'ஐயா, மூன்று உயிர்கள் உங்கள் கையிலேதானிருக்கிறது. நீங்கள் மனம் வைத்தால் இந்தப் பாவமான காரியம் நடைபெறுமல் தடுக்கலாம்' என்று கெஞ்சினுள். அவளின் மீன் விழிகளிலிருந்து பிறந்த முத்துப்போன்ற நீர்த்துளிகள் அவளது முகத்தின் பிரகாசத்தால் மின்னின; அந்தப் பரிதாபமான கோலத்தில் அவளிடம் நிரம்பிய அழகு இருந்தது.

அவள் முறைப்பாட்டைக் கேட்டதும் எனக்குச் சாரதாவின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "வஞ்சகி! நடந்தவற்றையெல்லாம் ஒன்றும் விடாது கண்டவர்களிடமெல்லாம் சொல்லித் திரிகிறுளே!" என்று சினந்தேன்.

"இல்லை ஐயா! இவையெல்லாம் எனக்கு மாத்திரம்தான்தெரி

யும்; தெரியக் காரணமும் உண்டு. நான் ஆனந்தனை மனப் பூர்வமாகக் காதலிக்கிறேன்; அவரும் என்னை மணம் செய்துகொள்வார். ஆனுல், அதற்கு இடைஞ்சலாக இருப்பது நீங்கள்தான்'' என்ருள்.

''அவன் உன்னை மணம் செய்வதற்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?'' என்றேன்.

''சம்பந்தம் இருக்கிறது ஐயா' சாரதாவுக்குக் குழந்தை பிறக்கு முன்னரோ அவளை யாராவது கல்யாணம் செய்துகொண்டால்தான் அவள் மானத்தைக் காப்பாற்றலாம். அவளை இந்தக் கோலத்தில் கல்யாணம் செய்துகொள்ள யார் இருக்கிருர்கள்......? அதனுல்தான்—ஆனந்தன் தன் சகோதரிபோல் இதுவரை காலமும் பாவித்து வந்த அவளை திருமணம் செய்து அவள் அவமானத்தைத் துடைக்க முன வந்துள்ளார்'' என்று தெளிவு படுத்தினுள்.

''என்ன அநியாயம்?...மிருகத்தனமான செயல்!''—என்று என்னை மீறிக் கூறிவிட்டேன்.

''எது அநியாயமையா?—எது மிருகத்தனமான செயல்?......... நீங்கள் படித்த மனிதர்—யோசனை செய்து சொல்லுங்கள்: தன்னை வளர்த்து படித்து முன்னுக்கு வருவதற்குக் காரணமாக இருந்தவள் மானம் போகிறதே என்பதற்காக தன் வாழ்வையே அர்ப்பணம் செய்வது அநியாயமா? தன் சகோதரியைக் கண்டு சந்தி சிரிக்காமல் செய்யத் தன் இன்பத்தையெல்லாம் துறப்பதா மிருகத்தனமையா? காமப் பேய் என்று வீணுக பழி சுமத்தப்படும் ஒரு பெண்ணின் மானத்தைக் காப்பாற்றுவதையே கடமையாகக் கொண்டு தன் காதலையே துறக்கிருரே! அவர் தியாகி—ஆனுல்.........

......நீங்கள்? ஒரு பாவமும் அறியாத பெண்ணுக்கு பதவியைக் காட்டிப் பாழாக்கினீர்களே! அது அநியாயமில்லையா? உலகம் அறியாத பெண்ணுக்கு ஆசை காட்டி ஏமாற்றி—உங்கள் ஆசையைத் தீர்த்துக் கொண்டீர்களே! அது அநியாயமில்லையா, கள்ளத்தனமாக இரவிரவாகச் சென்று அந்த அபலையின்கற்பை அழித்தீர்களே! அது மிருகத்தனமில்லையா?...... இவ்வளவையும் செய்து விட்டு ஒன்றும் அறியாத சாதுபோலக் கபட நாடகம் நடத்துகிறீர்களே! உங்களுக்கு வெட்கமாக இல்லையா? .........உங்கள் கோலத்தை ஒரு முறை கண்ணாடியில் போய்ப் பாருங்கள். உங்கள் நரைத்த மயிரைப்பாருங்கள்; சுருக்கு விழுந்த கன்னத்தைப் பாருங்கள், உங்களை எந்தப் பெண்ணாவது விரும்புவாளா? மணஞ்செய்து கொள்ள நினைப்பாளா? —சாரதா உங்கள்இச்சைக்குஇசைந்தது மட்டுமல்ல மணம் செய்து கொள்ளவும் இணங்குகிருளே! அவள் தியாகி, அவளல்லவா உத்தமி; அவள் உங்களையன்றி வேறு யாரையாவது ஏறிட்டுத்தானும்

பார்த்ததை அறிவீர்களா? அப்படியான பதிவிரதை உங்களுக்குப் பத்தினியாகக் கிடைக்கக் கூடியவளா ?'' என்று பொரிந்து தள்ளினாள்.

அவளின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் வேல் கொண்டு தாக்குவதுபோல வதைத்தன. அவற்றின் வேதனையில் நான் புழுவாய் நெளிந்தேன். 'ஆனந்தன் தியாகி தான். ஒரு பெண்ணுக்காக தன் காதலையும் வாழ்க்கையின் சுகங்களையும் தியாகம் செய்கிறானே! சாரதாவை அவன் மணம் செய்து ஏது இன்பத்தைக் காணப்போகிறான்?......அவள் எத்தனை வருடங்களாக என் மிருக இச்சைக்கு ஆளாகிய கசங்கிய மலர். புதுமை என்பது கிடையாத 'வற்றல் கனி' அதை அறிந்தும் அவன் சாரதாவை மணம் செய்து கொள்ள இணங்குகிறானே! அவன் மனம் எவ்வளவு தியாக சிந்தனை உடையது !.........

அவள்—ஆம், சாரதா உண்மையில் பதிவிரதைதான்! நான்வயது சென்றவன் என்பதை அறிந்தும் என் இச்சைக்கு இணங்கி- என்னோடு வாழச் சித்தமாக இருக்கிறாளே! ஒருசமயம்-ஒரு இளம் வாலிபன்—அழகுமிக்கவன்—அவளுக்கு எழுதிய காதல் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்து தந்து 'இந்தக் காதல் கடிதம் எழுதியவனுக்குத் தக்க பாடம் கொடுக்க வேண்டும' என்றாளே! அப்படிப்பட்ட உத்தமியை மானமழிய விடுவது......

'அவள் செய்த குற்றம் தானென்ன? தன் உணர்ச்சிகள் எல்லாம் உருப்பெற்று--ஒன்று திரண்ட அன்புக் கனியை ஆசையோடு பெற்றெடுக்க எண்ணியது தவறா? தன் இன்பக்கனியின் மென்மையான ஸ்பரிசத்தையும், இனிமையான மழலை மொழியையும் அனுபவிக்க நினைத்தது தவறா?......பாவி நான் எத்தனை சிசுக்களை அழித்தேன்; நானே உயிர்கொடுத்த எத்தனை கருக்களை நானே கருக வைத்தேன் எனக்கு விமோசனமே யில்லையா? என் மன அலைகள் புரண்டோடின.

ஞானம் சற்று முன்னர் கண்ணகி போல் இருந்தாள். ஆனால் இப்போது சாந்தமே உருவான ஒரு தேவதை யாகக் காட்சி தந்தாள்; அவள் வார்த்தைகள் என்வேதனையைத் தணிப்பதுபோல் இருந்தன.

''ஆனந்தனின் முடிவு இன்னும் சாரதாவுக்குத் தெரியாது! தெரிந்தால் அவள் தனது உயிரை மாய்த்துக் கொண்டு விடுவாள். பிறகு ஆனந்தன் உயிரோடு இருப்பது நிச்சயமில்லை. இத்தனையும் நடைபெறாமல் தடுக்க உங்களால் தான் முடியும். இப்பொழுதே நீங்கள் சாரதாவிடம் செல்லுங்கள்......! இல்லாவிட்டால்...எமது பிணங்களைத் தான் நீங்கள் காணுவீர்கள் !''என-ஞானம் கொதித்தாள்

என் மனச்சாட்சி என்னை அணுவணுவாகக் கொன்று கொண்டிருந்தது.

''ஐயோ, ஞானம்!............ நான் உணர்ந்துவிட்டேன்...இன்று வரை பாவியாகவேயிருந்தேன். இனிநான் எனது தவறுகளை உணர்ந்து கொண்டேன, உங்களின் ஒருமித்த காதலுக்கு எது விதமான களங்கமும் என்னால் ஏற்படாது!........... சாரதாவின் மானத்தை நானே காப்பாற்றுகிறேன்......அவள் இனி என் பத்தினி! இப்பொழுதே அவளிடம் செல்கிறேன். ஆனந்தனுடன் நீ சந்தோஷமாக வாழு!......'' என்றேன் உணர்ச்சி வேகத்தில்.

'சாரதா, என்னை மன்னித்து விடு! உன்னை ஏற்றுக் கொள்கிறேன்' என்று சாரதாவின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பதற்காக அவள் வீட்டை நோக்கிப் புறப்பட்டேன்.

முற்றிற்று.


வீரமாமுனிவர் அவர்கள் எழுதிய

''பரமார்த்த குருவும் சீடரும்'' என்னும் வசன நூலை
இன்பத் தமிழில் விருத்தப் பாக்கள் கொண்டு

**பூரணன் கதை**

என்ற பெயரில்

பண்டிதர் சோ. இளமுருகனுர் அவர்கள்
ஆக்கியுள்ளார்கள்

எட்டாம், ஒன்பதாம் வகுப்புகளுக்கு இலக்கிய பாடநூலாக
உபயோகிக்கக்கூடியது

**பூரணன் கதை** ரூபா : 2-50

ஆசீர்வாதம் அச்சகம் புத்தகசாலை
32, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

# இயற்கைப் பெண்ணாள்

— ச. அமிர்தநாதர் —

அழகெல்லாம் குடிகொள்ளும் மாது அவள் ;
அசைந்திடுவாள் சிலம்பொலிக்கும் ஆவல்துள்ளும்
பழகுதமிழ்ச் சிறப்பெல்லாம் கூட்டிக் கூட்டிப்
பலகவிதை எழுதென்பாள் தன்னைப் பன்னி
சிலையெனவே நான்நிற்பேன் என்னை மறந்து!
சிந்தனையைக் கிளறிடுவாள் சிரிப்பால் ; அந்திக்
கலையுடுத்துக் குழலசைய நடந்து வந்து
கவிதைதனைத் தந்திடுவாள் கலந்து நிற்பாள்.


❀ ❀ ❀

நெஞ்சமதில் பூத்திடுவாள் நிலவாய் ; எந்தன்
நினைவெல்லாம் கவர்ந்திடுவாள் கள்ளி ; வண்ணக்
கஞ்சமலர் முகம்சிவக்க நாணம் கொள்வாள்
கருவிழியைக் காட்டிப்பல கதைகள் சொல்வாள்
கொஞ்சமல்ல அவள்செய்யும் குறும்பு ; யாலம்
கொட்டிவிடும் அத்தனையும் கோடி இன்பம் ;
பஞ்சமின்றிக் கவிதைவெறி பாயும் என்னுள்
பாவை அவள் ஈயும் இன்பப் போதையாலே ;

❀ ❀ ❀

மீன்பிறழ்வை அவள்விழிகள் விஞ்சும் ; விண்ணின்
விந்தைஎல்லாம் அவள்உடம்பு காட்டும் ; கான
மான்எனவே துள்ளிடுவாள் ஒயிலாய், காதல்
மடைதிறந்து பாய்ந்துவரும் நெஞ்சில் ; நல்ல
தேன்சுவையை வென்றிடுவாள் மொழியாள் ; சீர்த்த
செந்தமிழின் கலைவளரும் ; அசைவாள்
நான்சுவைப்பேன் கவிதைமலர் யாப்பேன்
நங்கை அவள்பெயர் இயற்கையாமே.

❀



# கீரிமலையின் கீர்த்தி

மலர் விழி எம். சி. யேசுதாசன்

மூர்த்தி தரிசனம், தலவாசம், தீர்த்த ஸ்நானம் ஆகிய மகத்துவங்கள் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற தலங்கள் பரதநாட்டில் பலவுண்டு. ஈழத்தில் இச்சிறப்புக்கள் மூணறும் பெற்று விளங்குபவைகளுள் முதல் இடம் பெற்றது கீரிமலையாகும். இஃது யாழ்ப்பாணத்தின வடகோடியிலே சமுததிர தீரத்திலே திகழ்கின்றது. யாழ்ப்பாணத்திற்கும் இதற்கும் பன்னிரண்டு மைல் இடைத்தூரம். கோடிக் கரைக்கும் இதற்கும் ஏறக்குறைய முப்பத்தேழு மைல் தூரம். இதற்கு வீணுகானபுரம் நகுலேஸ்வரம் திருத்தம்பலேஸ்வரம் என்ற பெயரும் உண்டு. கீரிமலைக்குச் சமீபத்தில் உள்ள கிராமத்தின் பெயர் வலித்தூண்டல். வலித்தூண்டலில் அதிகமாக மீனவர்கள் வசிக்கிருர்கள். கீரிமலையில் பக்தி சிரத்தையுடன் வந்து வசித்து, விதிப்படி வழிபட்டு வரும் அன்பர்களுக்கு நகுலேஸ்வரனின் அநுக்கிரகம் கிடைக்கும் என்று புராணங்கள் கூறுகின்றன. கீரிமலையின் சுற்றுப்புறங்கள் சிறந்த வளநலங்களை யுடையன. கடற்கரையோரத்திலே தெள்ளிய தீம் புனல் பெருக்கெடுத்து சமுத்திரத்துடன் சங்கமம் ஆகின்றது. இயற்கை வனப்பு இன்றியமையாதது. இந்நன்னீர்ப் பெருக்குச்

சுகாதாரத்திற்குச் சிறந்தது. கரை நெடுகிலும் அலைமோதி ஒதுக்கப்பட்ட வெண்மணலின் வனப்பு கடற்கரையிலே உல்லாசமாக உலாவப் போவோரைக்களிப்புறச் செய்யும். இங்கு வீசும் இளம் தென்றல் உள்ளத்திற்கு இன்பத்தையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். நளன், ஸ்ரீராமன், அரிச்சுனன், முசுகுந்தன் முதலியோர் இங்கு வந்து தரிசித்ததாக பல புராதன நூல்கள் கூறுகின்றன. இதன் பழமை வரையறுத்துக் கூறமுடியாது.

## வீணுகான புரம்

இராவணன் சாமவேதகானம் பாடும் வீணையிலே, சுசங்கீதன் என்னும் கந்தர்வன் ஒருவன் மிகுந்த ஆசைகொண்டான். வீணையைக் கவர்வதற்குத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்திருந்தான். காலம் சென்றது; இராவணனை ஸ்ரீஇராமன் வென்ருர். இதை அறிந்ததும் சுசங்கீதன்என்னும்கந்தர்வன் வீணையைக் கவர்ந்துவந்து கீரிமலையில் வைத்துக் கானம் பாடினான். இப்பாடலில் சிவபிரானுக்கு மிகுந்த ஆவல் ஏற்பட்டது. உடனே சிவபிரான் அவனுக்குப் பிரசன்னமாகி நீ பக்தியுடன் கானம் செய்தவை என்னைக் கவர்ந்துவிட்டது. ஆதலால் இவ்விடதிற்கு வீணுகானபுரம் எனப் பெயர் வழங்குமாறு ஆவன செய என்று கூறி மறைந்தார். சுசங்கீதன் காட்டை வெட்டி நாடாக்கி ஆங்குள்ள ஆலயத்தைப் புதுப்பித்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்ததாக தக்ஷிணகைலாச புராணம் கூறுகிறது.

## நகுலேஸ்வரம்

மேடுமலையிலே அக்காலத்தில் முனிவர் ஒருவர் இருந்து தவம் புரிந்துவந்தார். முனிவரின் வதனம் கீரியின் முகத்தைப் போன்று இருந்தது. ஆதலால் இவருக்கு நகுலமுனிவர் என்னும் பெயர் ஆயிற்று. இவர் பல தலங்களுக்குச் சென்று தொழுது வந்தார். எங்கும் ஒருபலனும் இவரின் வதனத்திற்கு ஏற்படவில்லை. ஈற்




றில் இக் கீரிமலை என்னும் தலத்திற்கு வந்து தீர்த்தம் செய்தார். கீரிமுகம் மாறி மனிதமுகம் ஆகியது. இதன்பின் இங்குள்ள மலைக் குகையொன்றில் இருந்து கடும தவம் செய்து பரமபதமடைந்தார். இம் முனிவர் இங்கிருந்து தவம் செய்து அருள் பெற்றதால் இவ் விடத்திற்கு கீரிமலையென்றும்,

நகுலமலை யென்றும் பெயர் வழங்கப் பெற்றது.

மேருமால் வரையில்
வருனகுலமுக முனிமுனன்
னேவியெங் கெங்கு மூழ்கி
மீதூரி லங்கைவட
கடலின்மேற் பாற்றீர
மிளிர்வெற்பொர் நதிகண்டுளஞ்
சேருமா தரவினோடு
திருவருள் செலுத்திடச்
சென்று நியமத் தொடாடித்
தீர்வை முகமொருவியே
சிவதரிசனம் சென்று
திகழ்நிட்டைதனின் வைகினன்
சாடுபோர் காரணம்
பற்றியச்சயிலமும்
தாழ் கங்கையும் தாணுவுஞ்
சத்தியும் தம்பெயர்
முதற்கண குலப்பெயர்
தழைக்க நிலவுலகு சாற்றும
தாருகாவனமும் சமையந
தடுத்தாட்கொள்
சாந்தி நாயகி சமேத
சந்தரமெளலீசனே
யைந்தொழில் விலாசனே
சந்த்ர புர தல வாசனே.

சோழமண்டலத்தை ஆட்சி புரிந்துவந்த உக்கிரம சோழனுக்கு மாருதப்புரவீக வல்லியென்னும் ஓர் புதல்வி இருந்தாள். இவள் பிறக்கும் பொழுதே இவளுடைய முகம் குதிரையின் முகத்தை ஒத்து இருந்தது. இவள் தன் முற்பிறவியில் கனக சுந்தரி என்னும் பெயருடன் வடநாட்டு அரசனின் புத்திரியாகப் பிறநது, பல பரிசுத்த தலங்களைத் தரிசித்து வரும் பொழுது அயக்கிரிவ முனிவரைக் கண்டு பரிகாசம் பண்ணினள் என்றும், அதனால் அவர் இட்டசாபமே இப்படிப் பிறக்க நேர்ந்தது என்றும், ஓர்சில சான்றுகள் பகர்கின்றன. புரவீகவல்லி பருவம் எய்தியதும் தனது குதிரை முகத்தை மாற்றும் பொருட்டு பெற்றோரின் அனுமதியுடன காசி முதற் கன்னியாகுமரி வரையிலுள்ள அத்தனை தலங்களுக்கும் யாத்திரை சென்று முறைப்படி தீர்த்தங்களாடியும், சுவாமியைத் தரிசித்தும் யாதும் குணம் பெறுமையால் மிகவும் வருந்திக கொண்டிருக்கையில், புகழ்பெற்ற சாந்திலிங்கம் சுவாமிகளின் மூலமாக கீரிமலையின் மகத்துவத்தைக் கேளவியுற்று. இலங்கைக்கு வந்தாள். வந்தவள். திருக்கேதீஸ்வரம் திருகோணமலை. கதிர்காமம் முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு நகுலேஸ்வரம் என்னும் கீரிமலையை வந்து அடைந்தாள், சமுத்திரத்தில் தீர்த்தமாடி, நகுலேஸ்வரப் பெருமானை வேண்டினள், அச்சமயமே இவளது குதிரை முகமும். குன்மவலியும் நீங்கி மலர்விழிகளும். பொன்னெளி மேனியும் பெற்றதாகச் சான்றுகள் பகர்கின்றன.

பொன்னித்துறைவன் புலிக்கொடி
யன்பூவின் மன்னர்
மன்னனெனுஞ் சோழன்
மகளொருத்தி-கன்னிமின்னாள்
தேடுங்கடலருவித் தீர்த்த
சுத்த நீரகத்து
ளாடிப் பிணிதணிப்ப
தானிணைந்து-சேடியர்தஞ்
சேவைகளுங் காவலனுஞ்
சேனையுமாய் வந்திறங்கிப்
பாவையுறு தீர்த்தம்
படிந்ததற்பின்



அவ்வாறு கைலாசமாலை புராணம் இயம்புகினிறது-

மாருதப்பிரவாகவல்லி தனக்குற்ற கொடியநோய் நீங்கியமையால் நகுலேஸ்வரப் பெருமானை நேற்றி யிறைஞ்சி வந்தாள். இவள் வசித்த இடம் மாவிட்டபுரத்திற்கு சமீபத்திலே இருக்கிறது இன்றும் அது குமாரத்தி பள்ளம் என்று அழைக்கப் படுகிறது. இவள் தனக்குக் கிடைத்த சௌக்கியத்தை மக்கள் அறியத்தக்க சான்றாக இருக்க சுப்பிரமணியர் ஆலயம் ஒன்றை மாவிட்டபுரத்திலே நிறுவினாள். இவ்வாலயத்திற்காக இந்தியாவில் இருந்து சுப்பிரமணிய கடவுளாகிய காங்கேய மூர்த்தியின் விக்கிரகம் வரவழைக்கப் பட்டது. இவ்விக்கிரகத்தை இறக்கிய இடமே காங்கேயன் துறை என்று அன்று முதல் அழைக்கப் படுகிறது. மாவிட்டபுரக் கோவில் வேலைகளை முடித்துக் கொண்டு, தனது தாயகம் சென்றாள். அங்கு ஆட்சி செலுத்திய உக்கிரசேன மன்னனை மணத்து. பாலசிங்கன் என்னும் புதல்வனையீன்றாள் என்றும் அவன் பிற்காலத்தில் இலங்கைக்கு வந்து கண்டியை ஆட்சி புரிந்ததாகவும் திருகோணசல புராணங் கூறுகின்றது யாழ்ப்பாணச் சரித்திரங்கள் மாருதப்பிரவாகவல்லி கதிரைமலையிலிருந்து அரசாண்ட உக்கிரக சிங்க மன்னனை திருமணம் செய்து, பாலசிங்கனை யீன்றாள் என்று பகர்கின்றன, யாழ்ப்பாணத்தைப் பரிசாகப்தபற்ற கவிவீரராகவன என்னும் யாழ்பாடிக்கு பரிசளித்தவன் கண்டியில் இருந்து அரசாண்ட பாலசிங்கன் என்பது சில சரித்திர ஆராய்ச்சியாளரின் கூற்று, அநு

ாரத புரத்திலிருந்து அரசாண்ட ஏலேலசிங்கனே வீராகவனுக்குப் பரிசளித்தான் என்பது வேறு சில ஆராய்ச்சியாளரின் வாதம். சிலர் வாலகம்பாகு என்னும் சிங்கள அரசனை வெற்றி கொண்டு அநுராதபுரத்திலிருந்து அரசாண்ட தமிழ் வீரனொருவனுற் கொடுக்கப்பட்டது என்பர். எனது ஆராய்ச்சிக்கும் இவ்வீரனே வழங்கியதாக விளங்குகிறது

கீரிமலைத் தீர்த்தக் கரையிலிருந்து சிறிது தூரத்திலே கடற்கரையோரத்திலே ஓர் குன்று இருக்கிறது. இதுவே கீரிமலையென்றும் நகுலமலையென்றும் வழங்கப்படுகிறது. இதுமுற்காலத்திலே பெரிய மலையாக இருந்ததாக அறியக்கிடக்கிறது. இக்குன்றத்திலே கடற்கரையோரமாக ஓர் பெருங்குகையுண்டு, நகுல முனிவர் தவம் செய்த இடம் இதுவாகவே இருக்க வேண்டும். இதைச் சுற்றி பல ஆலயங்கள் இருந்ததாக மேலும் அறியக்கிடக்கிறது. போர்த்துக்கேயர்போன்ற அன்னியநாட்டுப் படையெடுப்பால் இடிக்கப் பட்டும் கடலால் கொள்ளப்பட்டும் போயின இவ்விடம் ஓர் சுகாதார இடமாக இருப்பதால் சனங்கள் வந்து கூடாத நாளே கிடையாது. பல மதத்தவர்களும் இங்கு வந்து தங்கி ஓய்வு எடுக்கிருர்கள். சுக்கிர வாரம், மகம், மாமாங்கம், சிவராத்திரி, கிரகணகாலம், அர்த்தோதயம், தையமாவசை, ஆடியமாவசை முதலிய புண்ணிய காலங்களிலே பெருந் திரளான சனங்கள் இங்கு வந்து கூடுகின்றனர். இலங்கைச் சரித்திரத்திலேயே தனக்கென ஒரு தனியிடத்தைப் பெற்று இருப்பது கீர்த்தி பெற்ற மலையாம் கீரிமலை.

---



# பெண்ணே !

—ஈழவாணன்—

உணர்வில் சுனைதட்டா
ஒன்றின் உருக்கண்டேன்
ஓங்கிக் கணக்காதவ்
வோசைத் துளிக்குள்ளே
நீயா ?
தனத்துள் சுரக்காமல்
தரையில் கசியாமல்
தாகம் தனைதீர்த்த
தன்மை அதுபெற்றேன்
நானு ?

அருவம் தனைத்தேடி
உருவம் சமைத்தோடும்
ஆசை தளிர்க்காத
அப்பால் வியாபிக்கும்
காதல் ;
பெறுவோம் அது மூப்பில்,
பிஞ்சில், நசுங்காது
பேதம் கலைத்தோடிப்
பேசும் ; அது போதும்
பெண்ணே !

# நாளை முதல்

V. S. M செய்னுதீன் மரைக்கார்

அன்று வகப்பட்ட கூட்டம், மாணவர்கள் படைசூழப் பாடசாலை சிரித்துக் கொண்டிருந்தது. இன்னும், சில நிமிடங்களுக்குள் பாடசாலை மணி கிணுகிணுக்கும். அதன் பின் நிசப்தம் தலைதூக்கும. இவ்வாறு மாணவர்கள் சல்லாபித்துக் கொண்டிருந்தனர். அன்றுதான் பி. ஏ. பரீட்சை நடைபெறப்போகிறது. இதற்கிடையில் ஆசிரியர்கள் அங்குமிங்குமாக அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள். பாடசாலையைச் சூழ்ந்துள்ள மாணவர் திரள்களைப் பார்க்குமிடத்து கறுப்புக் காலணியும வெள்ளைச் சேட்டும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

ஆனால், பாவம் சுந்தர், ஒரு மூலையிலே கிழிந்த உடுப்புடன்-புத்தகத்துடன் அமர்ந்திருந்தான். அவனுடன் யாரும் கதைக்காததால் அவன் நிம்மதியாகப் பாடப் புத்தகதனத படித்துக் சொண்டிருந்தான். சில நிமிடத்தின் பின் பாடசாலை மணி கிணு, கிணுத்தது. மாணவர் குழாம் பாடசாலையினுள் தங்களுக்கெனப் போடப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து விட்டனர். பரீட்சை ஆரம்பமாகி நான்குமணித்தியாலத்தின் பின் மாணவர்கள் மீண்டும்பரீட்சைசம்பந்தமான கதைகளைச் சம்பாஷித்துக் கொண்டு வெளியேசென்றனர். ஆனால்சுந்தர் மட்டும் தனியாகவே வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தான். அவனது நடையிலே பரீட்சையில் வெற்றி பெறுவான் என்பது வெளிக்காகியது. வெற்றியும் பெற்றான்.

சுந்தர், சீரிய குடும்பத்தில் பிறந்த போதிலும்தற்போது தமையனும் அவனும் ஏழைகளாகிவிட்டனர். அண்ணன் மணியன் பல கைத்தொழில்களையும் செய்து வயிறு வளர்ப்பவன் மட்டுமின்றி தனது ஒரே தமபியையும் படிக்க உதவிவந்தான். தமையன்மணியன் ஒரு குடும்பக்காரனாகையால் அவனுக்கு ஒரு மகளும் இருந்தாள். தாய் வள்ளியைப் பெற்ற அறையில் பிரிந்து விட்டாள். தாயில்லாப் பிள்ளையாக வளர்ந்த வள்ளியம்மாள் பருவப் பாவையாக விளங்கினாள். மணியனுடைய ஒரே ஆசை தனது தம்பியையும் மகள் வள்ளியையும் நல்லஇடங்களில் வாழவைக்கவேண்டும், என்று. அந்த நல்ல எண்ணத்தை நிறைவேற்ற மணியன இல்லாமல் போய்விட்டான். ஆம், அவன் இறந்தே போய்விட்டான். அவன் இறக்கும் தருணத்தில் அவன் முனகிய மூன்றே வார்த்தைகள் சுந்தருடைய மனதில அடிக்கடி தோன்றும். அண்ணனுடைய வார்த்தையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என விரும்

பிய சுந்தர் அதற்காக முயற்சித்து வந்தான். அதனுல் படித்த படிப்பைத் தொடர்ந்து படிக்காது ஏதாகிலும் வேலை பார்க்க விரும்பினுன்.

அன்றொரு நாள் ஆற்றங்கரை மணலிலே பலதையும பற்றிச் சிந்தித்து மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தான். அண்ணன் கூறிய மூன்றே வார்த்தைகள மனத்திலிருந்து வாயிலடிபட்டது. "வள்ளியைக் கைவிட்டு விடாதே." மீண்டும் மீண்டும் உச்சரித்தான். மனம் எதையோ நினைத்து ஒரு முடிவிற்கு வந்தவன் போல் எழுந்து நடந்தான்.

வாலிப முறுக்கு காலிலுமிருந்தபடியால் எவ்வளவுதான. நடந்த போதிலும் களைக்கவில்லை. சந்து பொந்துகளெல்லாம் நடந்து ஒரு பெரிய வீதியை அடைந்தான அதுதான் பிரபல ஜவுளி மாளிகை உரிமையாளரான "மௌலானு" உடைய பெயரில பொறிக்கப்பட்ட "மௌலானு ரோட்." அந்த ரோட்டை அடைந்தவுடன் திடீரென ஒரு நினைவு வந்தது, மௌலானு என்பவர் ஜவுளி மாளிகை உரிமையாளர் மட்டுமல்லாது அந்த ஊர் மேயருங்கூட. அவரைக் கேட்டு ஏதாகிலும் ஒரு வேலை செய்யலாம் என்ற நினைப்பில் அவர் வீட்டை அடைந்தான். அங்கு அவரது மகள் "மல்லிகா" நாகரிக உடையுடன் முன்றலில் வீற்றிருந்தாள்.

சுந்தர் அவர் வீட்டை அடைந்ததும் "கோலிங் பெல்" லை அமுக்கினுன். யாரும் வருவதாகத் தெரியாத படியால் மீண்டும் ஒரு முறை அமுக்கினுன். மல்லிகா தனது கௌரவக் குரலுடன் "யாரது, என்ன வேண்டும்?" என்றவாறே வாயிலைத் திறந்தாள். இயற்கையிலேயே அழகு சுந்தரமாக விளங்கிய "சுந்தர்" அந்த இடிச் சத்தத்தைக் கேட்டவுடன் ஒரு விஞடி பயந்தே விட்டான். வாயிலைத் திறந்த மல்லிகா அழகு சுந்தரமாக விளங்கிய சுந்தரை கண்டமாத்திரத்தில் தன்னை அவனிடம் அடகு வைத்துவிட்டாள்.

"நீங்க எங்க வந்தீர்கள்" என்ற அந்த வனிதையின் குரலைக் கேட்டவுடன் சுந்தர் ஆறுதலடைந்தவனுய் "நான்மேயர் மௌலானு அவர்களைக் காண வந்தேன்" என்றுன்.

"நான் மிஸ்டர் மௌலானு உடைய மகள் மல்லிகா. என்ன வேண்டும் உங்களுக்கு, சும்மா பயமில்லாமல் சொல்லுங்கள். உங்களைக் கண்டவுடனேயே நான் உங்களுடையவளாகி விட்டேன். பயமில்லாது சொல்லுங்கள் ம......ம்..." என்றுள.

அவளுடைய வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தில் சுந்தர் மெய் மறந்து விட்டான். சில விஞடிகளின் பின் ஒருவாறு சமாளித்துக் கொண்டு சிந்திக்கலானுன். அவளும் அவனைப் பார்த்தவாறே நின்றுள்.

சுந்தரின் எண்ணச் சூழல் சூழ்நிலைக்கேற்றனவா யிருந்தது. "அவள் என்னுடையவளாக ஆகிவிட விரும்புகிறுள். நானே பரம ஏழை, வீட்டில் அண்ணன் மகள் வள்ளி, அவளைக் கரை சேர்க்க வேண்டியவனுகயிருக்கிறேன் இந்த நிலையில் இவளை விடவும்

முடியாது. எனவே தனது தொழில் விஷயத்தைக் கூறினால், எப்படியாவது வேலை கிடைக்கப் பண்ணுவாள் என்ற நினைப்பில் நான் பி. ஏ. படித்துள்ளேன். என் பெயர் சுந்தர். எனக்கு உங்கள் தகப்பனாரின் ஆபிசில் ஏதாவது வேலை............இவ்வாறு இழுத்து நிறுத்து முன் அவளுக்குக் கடுங் கோபம் வந்ததைப் போல் முக மாறியது. சுந்தர் விஷயமறிய விரும்பி என்ன ஒருவாறு இருக்கிறீர்களே'' என்று கேட்டான். கோபங்கொண்ட முகம் ஒரு வினாடியில் மாறியது.

''நீங்கள் இனிமேல் எனனை வாங்க, போங்க என்று கூறாமல் வா, போ என்று கூறுங்கள் என்று கூறினாள். இவனும் அதைப் புரிந்து கொண்டவனாய் மீண்டும் ''நீ எப்படியாவது உனது தகப்பனிடம் கூறி வேலையொன்று......'' என்று தொடரும் போது ''தரும்படி கூற வேண்டும், அவ்வளவு தானே'' என்று முடித்து ''உள்ளே வாங்க, இப்படி உட்காருங்க'' என்று ஒரு கதிரையைக் கொடுத்து சற்று இருக்க வைத்து விட்டு வீட்டினுள்ளே போய் இரண்டு கப் காப்பிகொண்டு வந்து சுந்தரிடம் நீட்டினாள். இருவரும் காப்பியைக் குடித்துக் கொண்டே பல கதைகளையும் கதைத்தனர். எல்லாம் முடிந்த பிறகு சுந்தரிடம் ''நீங்கள் நாளை வாருங்கள் எப்படியாவது ஒருவழி பண்ணுகிறேன்,'' என்றாள். உடனே சுந்தர் வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

அடுத்த நாள் நல்ல 'சூட்' ஒன்றை மாட்டிக்கொண்டு மல்லிகா வீட்டுக்குச் சென்றான் சுந்தர். இவன் வருவான் என்பதை எதிர் பார்த்த மல்லிகா தன் தகப்பனுக்கும் சுந்தருக்கும், அவளுக்குமாகச் சேர்த்து மூன்று 'கப்' காப்பி தயார் பண்ணுமாறு தன் வேலையாளுக்கு உத்தரவிட்டாள். காப்பி வந்ததற்கும் சுந்தர் வீட்டினுள் நுழைந்தற்கும் சரியாகயிருந்தது. உடனே மல்லிகா, ''அப்பா இவர் தான் மிஸ்டர் சுந்தர்'' என்று அறிமுகப் படுத்தினாள். அவனும் மௌலானாவுக்கு வணக்கம் தெரிவித்தான். அவனைக் கண்ட மாத்திரத்தில் மேயர் மௌலான மிகவும் சந்தோஷப்பட்டவராய் இரண்டொரு கேள்விகளைக் கேட்டுவைத்தார். அவனும் தன் சரித்திரத்தை கூறி முடித்தான.

இவற்றை சுவாரஸ்யமாக கேட்டுக் கொண்டிருந்த மௌலானா ''மிஸ்டர் சுந்தர் நீங்கள் நல்லவராகத் தெரிகிறபடியினால் எமது ஆபிசில் ''நாளை முதல்'' என்று கூறி ஒரு நியமனக்கடிதத்தை நீட்டினார். சுந்தர் மகிழ்ச்சி தாங்க முடியாமல் நன்றி கூறி மல்லிகாவைப் பார்த்துச் சிரித்தான்.

---

ஏ அன்பே ! மனக்கண்ணில் மட்டும் தெரியும் நீ விசித்திரமான பொருள். உன்னைத் தொலைநோக்கியாலும் நோக்கமுடியாது; பூதக் கண்ணாடியாலும் பார்க்க முடியாது

—சிசாரே

---

வெளிவந்துவிட்டது!

# சிங்காரம்



குழந்தைகளுக்காக
கை அடக்கமான அளவில்
மிகவும் கவர்ச்சிகரமான முறையில்
குழந்தை எழுத்தாளர்

## இ. வரதராசன்

எழுதிய

## 'சிங்காரம்'

கட்டாயமாகச் சிறுவர்கள் படித்துப்
பயன்பெற வேண்டிய புத்தகம்

**விலை : 10 சதம்**

# வசந்தி ...நீ... கெட்டிக்காரி!!



வெளிவந்துவிட்டது!

ஈழத்திலும் தமிழகத்திலும்
எழுத்தாளர்

## ஜோ. ஏ. எப். தாஸ்

அவர்களை அறியாத வாசகர்கள்!
இருக்கமாட்டார்கள் அவர்
குழந்தைகளுக்காக எழுதிய

## வசந்தி நீ கெட்டிக்காரி

என்ற இந்தப் புத்தகம் ஒவ்வொரு சிறுவர் கையிலும் இருக்க வேண்டிய தொன்றாகும்.

**விலை : 10 சதம்**

விபரங்களுக்கு :

## ஆசீர்வாதம் புத்தகசாலை

32, கண்டி வீதி, — யாழ்ப்பாணம்.




முல்லை வனத்தினில் மோதும்குளிர்த் தென்றல்
மோக மெழுப்புதடி! — சும்மா
வில்லை வளைத்து விழிக்கணை யெய்தனை
வேதனை யாகுதடி! — முத்துப்
பல்லை யழுத்தும் பவளஇத ழெனைப்
பைத்திய மாக்குதடி! — உன்
சொல்லை நினைக்க உருகுதடி நெஞ்சு
சுக்கு நூறுகுதடி!

மாலைப் பொழுதினி லன்று நிலவிலே
மாந்தளிர்ச் சோலையிலே — குயில்
கோலக் குரலினிற் கூவையிலே மழை
கொட்டும் பொழுதினிலே — உன்
சேலை நனையத் துவளும் துடியிடை
சிந்தை நிறைந்ததடி! — விழி
வேலை எறிந்தெனை வீழ்த்தி விட்டாயாசை
விஞ்சி எழும்புதடி!

வைக்கோற் குவியலில் ஓடிமறைந்து நீ
வாவென் றழைக்கையிலே — உந்தன்
கைக்கொரு கைதந் தணைக்கையிலே விழி
காதலுரைக் கையிலே — அந்த
மைக்கருங் கங்குல் அதனிடையே நளிர்
வானதை நோக்கையிலே — வரு
தைக்கிடை ஒன்றுவம் என்றனை என்உளம்
தாவித் துடிக்குதடி!

ஆற்று மணலினில் மேட்டு நிலத்தினில்
ஆரைப் புதரருகே — வயல்
நாற்று நடுகையில் தோட்ட முழுகையில்
நாவல் மரத்தருகே — கயல்
சேற்று மடுவினில் காட்டு வழியினில்
காணு மிடங்களெல்லாம் — உன்
தோற்ற முளத்தினை வாட்டுதடி அது
சோக மெழுப்புதடி !

மாட்டுத் தொழுவத்தில் வீட்டுப் புருவத்தில்
வாழை மரத்தடியில் — புனல்
ஆட்டுத் துறையினில் பாட்டுத் தொனியினில்
ஆடும் மயிலினத்தில் — தமிழ்
ஏட்டுக் கவிதையில் நாட்டுப் புதுமையில்
எங்கும் உனதுருவே — எனை
வாட்டுதடி துயர் கூட்டுதடி உன்னில்
வாஞ்சை கனக்குதடி !

சோளப் பொரியினை வென்ற எயிறுகள்
சோடிவிழிக் கயல்கள் — மத
வேள மருப்பெனும் மார்புத் துடிமலர்
மேகவரிக் குழல்கள் — பனம்
பாளை வெடிப்பினி லூறிக் கலந்திடு
பானமொழிக் குரல்கள் — இவை
காளை மனத்தினில் மோது முயிர்ப்புகள்
காது கொடுத்திடடி !

தென்னங் குருத்துச் சிலுசிலுப்பில் வளைந்
தேகும்நறும் புனலில் — மெல்ல
கன்னம் கொடுத்து லயிக்கையிலே உந்தன்
கைவளை ஆர்க்குதடி ! — அந்த
வன்ன மலர்க்கொன்றை காற்றி லசைகையில்
வண்டின மாடையிலே — வரும்
கன்னற் கவிதையில் உன்னை யலாதெதைக்
கண்டு களிப்பேனடி !

# இதுதான் நாகரிகமா ?

திருமதி எம். ரி. இம்மானுவேல்

"பெண் என்றால் பேயும் இரங்கும்" என்பது பழமொழி. அத்தகைய பெண் இனம் இன்று நாகரிகம் என்னும் போர்வையில் படமெடுத்தாடுகின்றது. மேல் நாட்டவர் பெண்களை மிகவும் மதித்து வந்தனர். ஆனால் கீழ் நாட்டவரோ அவர்களைத் தெய்வங்களாகவே கருதி வந்தனர். ஆகையால் பெண்களிடம் தெய்வத் தன்மை மிகப் பழைய காலந் தொட்டே விளங்கியதென்பது தெளிவு. இன்றைய உலகில் பெண்கள் மிகவும் முக்கியத்துவம் அடைந்துள்ளனர். ஆனாலும் "நாகரிகம்" என்னும் மூட மந்திரம் அவர்களை நடைப்பிணங்களாக்கி விட்டது.

'பெண்மை' என்பதை யறியாத அநேக நவநாகரிகப் பெண்மணிகள் அளவு கடந்த ஆடம்பரத்தினால் தங்களை வெறும் சிலைகளாகவே மதிக்கின்றனர் இவற்றிற்கெல்லாம் காரணம் இன்றைய சினிமா என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். சினிமாவில் நடிப்பவர்கள் பணம் ஒன்றிற்காகத் தங்கள் மானம் வெட்கத்தை விலை பேசி வேடங்களைத் தாங்குகின்றனர். அந்த வேடங்களை இன்றைய பெண்கள் தங்கள் வாழ்க்கையில் பிரயோசனப் படுத்துவதால்தான் பெண் உலகம் மிகவும் வருந்தத் தக்க நிலையில் இருக்கிறது.

ஒவ்வொரு பெண்ணும் தன் விலைமதிப்பிற்கரிய மானத்தை தானே காப்பாற்ற வேண்டும். தானே அதற்கு முழுப்பொறுப்பாளி யென்பதையும் உணரவேண்டும். ஆண்கள் பல பெண்களிடம் திரிந்தாலும் தாங்கள் குற்றவாளிகளல்ல என்று ருசுப்படுத்த முடியும். ஆனால் பெண்களின் நிலை அவ்வாறல்ல. ஒருமுறை பிழை விட்டால், உடைந்த கண்ணாடியைப் போன்று, பிறகு வாழ்க்கையே சீர் குலைந்துவிடுகின்றது. இன்று எவ்வளவிற்கெவ்வளவு கண்டதும் காதல் விவாகங்கள் ஏற்படுகின்றனவோ அவ்வளவிற்கவ்வளவு விவாக ரத்துக்களும் ஏற்பட்டுக் கொண்டே போகின்றன. இவற்றைப் பெண் உலகம் சிந்திக்க வேண்டும்.

நாகரிகம்! நாகரிகம்!! என்று சொல்லி வீண் ஆடம்பரங்களில் ஈடுபட்டு வாழ்க்கையையே பழுதாக்குவது நாகரிகமல்ல. ஆனால் ஒவ்வொரு பெண்ணின் மனமும் பண்பும் சீர்பெற வேண்டும். நவநாகரிக உடையணிந்து கண்ட கண்ட ஆண்களோடு பல்லுக் காட்டுவது நாகரிகம் ஆகாது. அன்றேல் தன் கடமைகளை மறந்து வீடு வீடாய்த் திரிந்து அயலவரின் இழிவு பற்றி எள்ளி நகையாடுவதும் நாகரிகமாகாது. ஆனால் பெண்மையை உணர்ந்து எத்தப் பெண

ணும் தன் மானத்தோடு மற்றவர் களுக்கு இடையூறு இல்லாதவகை யில் நற்பண்புடன் நன்மை செய் யத் தெண்டிக்கவேண்டும்.

பெண்ணே ! உன்னை நீ எண் ணிப்பார் ! உனக்குப் பாரதூரமான முக்கிய கடமைகள் உள்ளன. அவற்றை யெல்லாம் மறந்து வீண் அலங்காரங்களிலும், வீண் சிந் தனைகளிலும் நேரத்தைக் கடத்து கிறாய். நீ குடும்பப் பெண்ணுயிருந் தால் உனக்கு அளவிடற்கரிய கடமைகள் உன்னை வரவேற்கின் றன-உன் அன்புக் கணவலின் தேவைகளைப் பூர்த்தி செய்-உன மக்கட் செல்வங்களை வீரராக, தன் நம்பிக்கை யுடையோராக, நற்பண் புள்ளவர்களாக நல்லொழுக்க முடையோராக ஆக்குவதற்கு உன் னாலியன்றது செய்.

இவையெல்லாம் சேர்ந்து துளிர் விட்டால் நம்மிடையே போற்றற்குரிய சூழ்நிலை யேற்படு மென்பதை மறவாதே. இதனுல் தாய்மையும் முக்கிய ஸ்தானம் அடையுமென்பது திண்ணம்.

வாழ்க பெண்குலம் ! வாழ்க அவர் கள் பண்பு !

*


## விளம்பர விகிதம்

"விவேகி" (மாதாந்த வெளியீடு)

| | | |
|---|---|---|
| அட்டை பின்பக்கம் : | 25 | ரூபா |
| அட்டை உள் முன்பக்கம் : | 20 | ,, |
| அட்டை உள் பின்பக்கம் : | 15 | ,, |
| சாதாரண ஒரு பக்கம் : | 10 | ,, |
| ,, அரைப்பக்கம் : | 6 | ,, |
| ,, காற்பக்கம் : | 3 | ,, |

இவ்விகிதம் ஒருமுறை பிரசுரிப்பதற்கு மாத்திரம் உரியது. ஆண்டு முழுவதும் விளம்பரம் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதிச் சலுகை விகிதத்தை அறிந்துகொள்க.

நிருவாகி 'விவேகி'

தொலைபேசி : 274

29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

பாட்டிக்கதை :

# வல்லவனுக்கு வல்லவன்....

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

அன்றும்—

இளங்கவிஞர் குண்டுமணி வழமைபோல தனது குருநாதர் குணசிங்கப் புலவரிடம் பாடம் கேட்கச் சென்றான்.

அன்று மாலை : அரசவையிலிருந்து வீடு திரும்பிய குணசிங்கப் புலவர் துக்கமே ஓர் பிறவியெடுத்தாற் போன்று உட்கார்ந்திருந்தார்

'அவர் உண்ணவில்லை; உறங்கவில்லை; யாருடனும் பேசவில்லை; தாகத்திற்குத் தண்ணீர்தானுங் குடிக்கவில்லை'யென்பதை, வீட்டார் குண்டுமணிக்குக் கூறினர்.

குண்டுமணி, குணசிங்கப் புலவரின் பக்கலிற் சென்று உட்கார்ந்தான். விநாடிகள் நிமிடங்களாகி நிமிடங்கள் மணித்தியாலங்களாகிக் கொண்டிருந்தன...

அவர் பேசவேயில்லை. பாறுங்கல்லை கிணற்றுட் போடுவதொப்ப அடிக்கடி பெருமூச்சு மட்டும் விட்டுக்கொண்டார்.

குணசிங்கப்புலவரின் கவலைக்குரிய காரணத்தை குண்டுமணி துருவித்துருவி விசாரித்துப்பார்த்தான்.

அப்பொழுதும் அவித்து வைத்த கொழுக்கட்டையைப் போன்று சலனமின்றித்தான் அவர் இருக்கலாயினர். 'நமக்கென்ன' வென்று குண்டுமணி விடவில்லை...மீண்டும் கேட்கவே செய்தான்......அவனுடைய நச்சரிப்பைச் சகிக்க முடியாதவர் போற் திருவாயை ஒருவாறு திறக்கலாயினர்......

"பாலூர்க் கவிராயர் என்னுமொருவர் எங்கிருந்தோ நமது நாட்டுக்கு வந்துள்ளார். அவர் சென்றவிடமெங்கணும் கண்டகண்ட கவிச்சக்கரவர்த்திகளுடனெல்லாம் வாதிட்டு வெற்றிவாகை சூடிய மகானுபவராம். இலக்கண இலக்கியங்களையெல்லாம் கரைத்துக் குடித்து ஏப்பமிட்ட மகாமேதையாம். எத்தனையெத்தனையோ மாமன்னர்களிடமும் சங்கங்களிலும் வண்டிக்கணக்காகப் பரிசில்களும் பொற்கிழிகளும் பாராட்டுரைகளும் பெற்றவராம் கலைவாழ்விலே அவர் தோல்வி கண்டதேயில்லையாம். தலைக்கனம் கொண்டவர். வித்தியாகர்வி. தன்னிலிருந்து மற்றவர்களனைவரும் அறிவிற் குறைந்தவர்களென்பது அவரின் அசையாத நம்பிக்கை.

"யார் எதைக் கேட்டாலும் பட்டபடாரெனப் பதிலிறுத்து விடுவாராம். எத்தகைய கவிதையைக் கூறினாலும் உடனே பொருள் சொல்லிவிடுவாராம். ஆனால், மற்றவர்களை அவர் கேள்வி கேட்டால் பதில் கூற முடியாதாம். அவருடைய கவிதைகட்கு இலேசில் பொருள் கூறவும் இயலாதாம். நாளை அரச

வையில் நமது நாட்டுக் கவிஞர்களுக்கும் பாலூர்க்கவிராயருக்குமிடையில் 'கவிதைப் போட்டி ஒன்று நடைபெற ஒழுங்கு பண்ணப்பட்டுள்ளது. அரசர் சம்மதித்து விட்டார்.

''நமது கவிஞர்களின் கவிதைகளுக்கு அவர் பொருள் கூற வேண்டும். அவருடைய கவிதைகளுக்கு நம் கவிஞர்கள் பொருள் கூறவேண்டும். குறித்த போட்டிக்கு சமஸ்தானப் புலவர்கள் அனைவரும் கண்டிப்பாகப் பங்கு பற்ற வேண்டும். நாட்டிலுள்ள ஏனைய புலவர்கள் விரும்பினுற் பங்கு கொள்ளலாம். அன்றேல் நிற்கலாம். சமஸ்தானப் புலவர் குழுவின் தலைவனென்ற முறையில் நான் கண்டிப்பாகப் பங்கு பற்றியே ஆகவேண்டும்''

''நான் தோல்வியடைவது உண்மை. என் பதவி பறிபோவதும் உண்மை. பதவி இருப்பது போவதைப்பற்றிப் பரவாயில்லை. காலாகாலமாகக் கட்டிக்காத்து வந்த நம் கவித்துவப் பெருமை, புகழ், நம் நாட்டின் பெருமை. புகழ் இவைகளைப்பற்றித்தான் சிந்திக்கிறேன். எங்கிருந்தோ வந்தவொரு நாடோடி, பண்டைப் பெருமை வாய்ந்த முந்தமிழ்க் கலாக்ஷேத்திரமாகிய நம் தேவர்புரத்துக் கவிஞர்களைப் போட்டியில் வென்று விட்டால் நாம் இருப்பதும் இறப்பதும் ஒன்றுதான். நம்நாட்டின் பெருமையைக் குழிதோண்டிப் புதைத்தபின் நடைப்பிணமாக வாழ்வதிலும் சாவதே மேல்.

''ஆகவே, நான் ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். இரவோடிரவாகத் தற்கொலை பண்ணி என் தாய்நாட்டின் மானத்தைக் காப்பாற்றப்போகின்றேன். நான் இறந்தால் போட்டிநடைபெறவும் மாட்டாது. அவர் வெற்றியடையவும் மாட்டாரல்லவா? புத்திர பாக்கியமில்லாத வெனக்குப் பிள்ளைக்கலி தீர்க்கவந்த தெள்ளமுதாகவும் அன்னம், ஆவையொத்த முதற்தர மாணுக்கனுகவும் வாய்க்கப் பெற்ற நீ எனக்கு ஒரேயொரு உதவி புரியவேண்டும். அஃது உன் குருநாதருக்கு நீ செய்ய வேண்டிய கடமையுமாகும் மகனே!

''நான் கிணற்றில் விழுந்து தான் இறக்கப் போகிறேன். அகஸ்மாத்தாக நான் இறந்துவிட்டேனென்பதை நீ நிரூபித்து என் புகழை நிலைநிறுத்தி விடவேண்டும். எக்காரணங் கொண்டும் என் திட்டத்தை மாற்றப் போவதில்லை. இஃது எனக்கும் உனக்கும் மாத்திரந் தெரிந்த பரம இரகசியமாகவே உன் சீவபரியந்தம் பாதுகாக்கப்படவேண்டும். தற்கொலையென்பது வெளிப்படவே கூடாது. உன் குருநாதரின் கடைசி ஆசையைப் பூர்த்தி செய்து அவரின் புகழை நிலைநிறுத்துவது உன்மேற்சுமந்த கடமை மகனே!''

குணசிங்கப் புலவர் குண்டுமணிக்குத் தன்நெஞ்சைத்திறந்து காட்டினுர். நம்பிக்கைக்குப் பாத்திரமானவனென்றதால். குண்டு

மணியின் கமல வதனங் கூம்பியது குருபக்தி அவனைத் தகிக்க வைத்தது. நேத்திரங்கள் நீரைச் சொரிந்தன

சூரிய மதிநுட்பமும் குயுக்தியாகப் பேசும் திறனும் சமயோசித புத்தியும் வாய்க்கப் பெற்ற அவன் சிந்திக்கத் தொடங்கினான்.

வாலிப உள்ளம் வீரமுரசம் கொட்டியது பிறந்த பொன்னாட்டின் பாசம் பிய்த்துப் பிடுங்கியது. தன்னம்பிக்கை சுடர் விட்டுப் பிரகாசித்தது. ஒருசில நிமிடங்களுக்குள் அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தான்.

திடீரென்று பதினாலாம் பக்கத்துச் சந்திரனைப்போல் அவனுடைய வதனம் பிரகாசித்தது...

''குருநாதா! தங்களுடைய கடைசி ஆசையை நான் கண்டிப்பாக நிறைவேற்றி வைப்பேன்... ஆனால், நான் வெளியிற் சென்று திரும்பி வந்த பிற்பாடுதான் நீங்கள் உங்கள் திட்டத்தை நிறைவேற்றவேண்டும்.''

இவ்வாறு கேட்டுக்கொண்டு அவசர அவசரமாக வெளியில் ஓடினான், குண்டுமணி.

குண்டுமணி வெளியிற் சென்ற சிலமணி நேரத்தின் பின், அரசனின் சேவகர்கள் வந்து குணசிங்கப்புலவரை மாளிகைக்கு அழைத்துச் சென்று கடுங்காவலில் வைத்தனர்.

## 2

மறுநாள் காலை......

அரசசபை கூடியது......புலவர்குழு வந்தது. புலவர் குழுவின் தலைவனான குணசிங்கப் புலவர் காவற்கூடத்திலிருந்து ராஜாங்க மரியாதைகளுடன் சபைக்குக் கொண்டு வரப்பட்டார். அவர் காவலில் வைக்கப்பட்டது யாருமறியாத அந்தரங்க இரகசியம்.

கவிதைப் போட்டியைக் கண்டு-கேட்டு ரசிக்க ஒரு சன சமுத்திரமே திரண்டு விட்டது. தெள்ளுதமிழ்த் தீஞ்சுவை திகட்டுஞ் சுவையா? பாலூர்க் கவிராயர் அடிக்கடி மீசையை முறுக்கி விட்டுக் கொண்டார். ஆண்சிங்கத்தைப்போன்று அவையிலே அவர் கம்பீரமாக வீற்றிருந்தார்.

வீரமிக்க வேங்கையின் முன்பு கொண்டு போய்க் கட்டப்பட்ட வெள்ளாட்டுக் குட்டிகளாக தேவர்புரத்துப் பிரபல புலவர்களெல்லாரும் சோர்ந்து துவண்டு உட்கார்ந்திருந்தனர். அவர்களின் மத்தியில் பிணம்போல் இருந்தார் குணசிங்கப் புலவர். அவித்த இறாலைப்போல் அவரின் முகம் வெளிறியிருந்தது.

தன்னைத் தற்கொலை பண்ண விடாமற் தடுத்த குண்டுமணியின்மேல் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அவனை அப்படியே உயிருடன் பிடித்து விழுங்கி விட வேண்டுமென்று நினைத்தார்...... குண்டுமணியை அரச சபையிலே காணவில்லை.

கவிதைப் போட்டி தொடங்குவதற்குச் சில நிமிடங்களிலிருந்தன. அப்பொழுதுதான் குண்டுமணி அவசரஅவசரமாக சபைக்கு வந்தான்.

குண்டுமணியைக்கண்ட குண சிங்கப்புலவரின் கண்களிலிருந்து தீப்பொறி பறந்தது...என் செய் யலாம்? இடம் எக்கச்சக்கமான இடமன்றோ!

அரசன் கலையழகன் தான் போட்டிக்குத் தலைமை தாங்கி ஞன். தலைமையுரை வரவேற் புரைகளை அழகு தமிழில் நிகழ்த் தியபின் நிகழ்ச்சி நிரலைப் பின் வருமாறு கூறத்தொடங்கினுன்:

''முதலாவது தேவர் புரத்து சமஸ்தானப்புலவர் குழுவின் தலைவர் கௌரவமிக்க உயர் திரு. குணசிங்கப் புலவர்......''--இந்த இடத்தில் அரசன் சற்று நிறுத்தி ஞன். உடனே குணசிங்கப் புல வர் அவர்களின் நெஞ்சில் ஆயி ரங் குட்டிக் கழுதைகள் ஒரே தட வையில் உதைத்தாற் போன்றி ருந்தது. அரசன் விட்ட இடத் திலிருந்து தொடர்கிறுன் :-

''.........அவர்களின பிரதம மாணுக்கர் இளங்கவிஞர் குண்டு மணி அவர்கள் தனது கவிதை யைப் படிப்பார். அந்தக் கவி தைக்கு தற்பொழுது நமது அதி தியாக வந்திருக்குப் மகாமதிப் புக்குரிய ஸ்ரீலஸ்ரீ ராய ராய கவி ராயர் திலகம் பாலூர்க் கவிரா யர் அவர்கள் பொருள் கூறு நிற்குமாறு பணிவுடன் வேண்டப் படுகின்றுர்கள்.''

—அரசன் உட்கார்ந்தான்.

குண்டுமணி எழுந்தான். சம் பிரதாயப்படி கவிதையிலேயே சபை வணக்கம் கூறினுன்...

பல்லாயிரம் விழிகள் ஏகோ பித்துக் குண்டுமணியைப் பார்த் தன. நல்ல வேளையாக குண்டு மணியை எரித்துப்பஸ்மீகரமாக்கி விடுவதற்கு குணசிங்கப் புலவ ருக்கு நெற்றிக்கண் இருக்க் வில்லை... அவன் தப்பிவிட்டான்.

'' தலை கறுப்பு ; உடல் சிகப்பு.
சற்றே பொறு... ஈம்ம்!...
இனிவறு...
இடி! இடி!! இடி!!! இடி!!!!
பனையோலை சலாரிட அபயப்
பிரலாபமே!''

—ஒரு முறைக்கும் பலமுறை மிகமிகத் தெளிவாகத் தனது கவிதையைப் பாடிக்காட்டி விட்டு குண்டுமணி உட்கார்ந் தான். கரகோஷங்கள் வானைப் பிளந்தன. மேன்மை தங்கா நின்ற பாலூர்க் கவிராயர் சிந் திக்கத் தொடங்கினுர். சபை யிலே அமைதி. ஊசி விழுந்தா லும் கேட்கக்கூடிய ஒழுங்கான அமைதி .. அவர் சிந்தித்தார், சிந் சித்தார் ; சிந்தித்துக்கொண்டே யிருந்தார். சபையோர்கள் அவ ரின் திருவாய்த் திறப்பு ஒன் றையே ஆவலுடன் எதிர்பார்த் தனர். ம்ஙீம்! அது திறபடவே யில்லை. திருவாய்த் திறப்பு நிகழ்வதிற்குப் பதிலாகவோ-என் னவோ, அகம்பாவத்தின் மனித அவதாரமான அவரின் பூதவுடல் எழுந்தது. திருக் கரங்கள் அவ ரின் கோற், தலைப்பாகை, வெற் றிப்பதக்கங்கள் அத்தனையையும் களற்றி ஓர் இடத்தில் வைத் தன. ஒரு ஓலைத்துண்டில் சில எழுத்துக்களையும் எழுதி அவை கள் வைத்தன.

பாலூர்க் கவிராயர்கள் எதற் காகவோ வெளியிற் சென்றுர்கள். சென்றவர் சென்றவர்தான்.

திரும்பவேயில்லை. திரும்பவும் மாட்டார். காலங் கரைந்தது.

அரசனின் ஆக்ஞைப்படி காவலர்கள் நாலுதிசைகளிலும் தேடினார்கள், அகப்படவேயில்லை, அகப்படவும் மாட்டார். அகப்பட மாட்டாரென்பதற்கு ஆதாரம் அவர் வைத்த ஓலைத்துண்டு தான். அதில் பின்வருமாறு வரையப்பட்டிருந்தது :

''வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு.''

## 3

மறுநாள் அரசசபையிலே—முதனாள் கூறிய உறுதி மொழிப்படி இளங்கவிஞர் குண்டு மணி தன் கவிதைக்குப் பின்வருமாறு பொருள் கூறலாயினர். ரசிக மகாஜனங்கள் காதுகளைத் தீட்டிக்கொண்டனர்.

அன்பர்களே !

நேற்றையத் தினம் நான் வீட்டிலிருந்து வெளிக்கிட்டு அரச சவைக்கு வந்தேனல்லவா ! வரும் பொழுது காணும் சிலகாட்சிகளை ஒரு கவிதையாக்கி அதைப் போட்டிக் கவிதையாகப் புகல வேண்டுமென்பதுதான் அடியேனின் திட்டமாக்கும். ஒரு ஓலையையும், எழுத்தாணியையும் கையில் வைத்துக் கொண்டேன். என் மனதைக் கவரும் ஏதாவது மூன்று காட்சிகளைமட்டும் கவிச் சித்திரமாக்குவது என்றும் ஓர் எல்லை வகுத்துக் கொண்டேன்.

முதற்காட்சி : 'செம்பகம்' என்னும் ஓர் பறவை... உடனே. ''தலைகறுப்பு உடல் சிகப்பு'' என்று குறித்துக்கொண்டேன்.

இரண்டாம் காட்சி : சில பெண்கள் அவல் இடித்தார்கள். அவர்கள் ''சத்த பொறு ; ம்ம் இனி வறு ! இடி இடி இடி இடி!'' என்று பேசிப்பேசி அவல் இடித்தார்கள்.

அந்த நிகழ்ச்சியை ''சற்றே பொறு ! ஈம்ம்!... இனி வறு ! இடி இடி இடி இடி!'' என்று குறித்துக் கொண்டேன்.

மூன்றாங் காட்சி : உயர்ந்த பனையொன்றிலிருந்து சலசலத்துக் கொண்டு விழுந்தவொரு காவோலை, பனையின் கீழே படுத்திருந்தவொரு சொறிநாயின்மேல் விழுந்தது அதிர்ச்சி யடைந்த அந்த நாய் 'வாள் வாள்' என அபயக்குரல் எழுப்பிக் கொண்டோடியது.

அதை, ''பனையோலை சலாரிட அபயப்பிரலாபமே !'' என்று குறித்துக் கொண்டேன்.

இதுதான் அடியேனின் போட்டிக் கவிதை பிறந்த கதையும். கவிதையின் பொருளுமாகும்.

இளங்கவிஞர் குண்டுமணியின் சமயோசித மதிநுட்பத்தை அரசனும் புலவர்களும் ரசிகர்களும் மட்டுமல்ல அந்த நாடே பாராட்டியது, குணசிங்கப் புலவர், குண்டுமணியை அரவணைத்துத் தடவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார். குண்டுமணிக்குக் குருநாதராகியது பிறவிப் பயனென்றும் பெருமிதங் கொண்டார்.

# மோகனக் கைநீட்டு

(றசூல் தாசன்)

செந்திருவாம் நம்மிறசூல் தீவின் ஸலவாத்து—ஓதி
சேயிழையே வாழ்ந்திடலாம் ஸ்ரீதனக் கை நீட்டு

தேன் மணக்கும் மாமதினுச் செம்மல் ஸலவாத்து—ஓதி
சீர் பெறவே வாழ்ந்திடலாம் செய்யகரம் நீட்டு

ஆதி றஹ்மான் புகழும் அரிய ஸலவாத்து — ஓதி
ஆனந்தமாய் வாழ்ந்திடலாம் அன்புக்கரம் நீட்டு

வானறுஷிலேறும் நபி பேரில் ஸலவாத்து — ஓதி
மணம் முடித்து வாழ்ந்திடலாம் வலது கரம் நீட்டு

தொழுது அத்தஹிய்யாத்தினிலே சொல்லும் ஸலவாத்து — ஓதி
துன்பம் நீக்கி வாழ்ந்திடலாம் தோழியேகை நீட்டு

பாவவினை போக்கிடும் சௌபாக்யர் ஸலவாத்து — ஓதி
படைத்த பெரியோனை எண்ணிப் பணிந்துகையை நீட்டு

நாட்டம் நிறைவேறும் எந்த நாளும் ஸலவாத்து — ஓதி
நங்கையர் பூங்கற்பரசே நம்பிக்கரம் நீட்டு

முகம்மது இபுருகிம்கவி முழங்கும் ஸலவாத்து — மகு
மூதர் நபி தாள்பணிந்து மோகனக் கை நீட்டு

# விவேகி

VIVEKI — திங்கள் இதழ்

ஆண்டுமலர் 1964

- பிரபல எழுத்தாளர்களின் கதைகளும் கட்டுரைகளும் ஏராளமாக உண்டு.
- சிந்தனைக் கட்டுரைகள்,
- விஞ்ஞானக் கட்டுரைகள் பலஉண்டு

யாழ்வாணன் எழுதும்—

**'ஊனம்'**

சிறுகதை

சசிபாரதி எழுதும்—

**கண் திறக்குமா ?**

(சிறுகதை)

செம்பியன் செல்வன்

எழுதும்

**நேரங்கள்**

(குறுநாவல்)

- பாமா ராஜகோபால் எழுதும்—

**நடிகை குமாரி சச்சு**

**என் சினேகிதி !**

சுவையான கட்டுரை

படத்துடன்

இத்தனையும் உண்டு ;

அத்தனையும் ஆண்டுமலரில் !

# போட்டி விதிகள்

1. இப்போட்டியின் விடைகள் **11-1-64** சனிக்கிழமை அல்லது அதற்குமுன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக,

**'விவேகி' குறுக்கெழுத்துப் போட்டி—48**

**29, கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் அனுப்பலாம்.

3. விடைகள் எல்லாம் விவேகியில் உள்ள அச்சுக் கூப்பன்களிலேயே அனுப்பப்படவேண்டும்.

4. ஒருவர் ஒரு பரிசுக்குமாத்திரமே உரிமை உடையர்.

5. ஒவ்வொரு இரண்டு கூப்பன்களுக்கும் 10 சத முத்திரை ஒன்று கட்டணமாக அனுப்பவேண்டும். தனிக் கூப்பன் அனுப்புவதாயினும் 10 சதமே கட்டணமாகும்.

6. தை மாதம் வெளியாகும் விவேகியில் விடைகளும் பரிசு பெற்றவர்கள் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

7. சந்தா செலுத்தியவர்கள் பரிசு பெறின் உரிய பரிசு அடுத்த வருடத்தில் அவர்களுக்கு அளிக்கப்படும்.

8. சரியான விடை அனுப்பும் ஐவருக்கு பரிசுகள் வழங்கப்படும் சரியான விடை எவரும் அனுப்பாதிருப்பின் ஒரு பிழை உள்ளவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

9. ஆசீர்வாதம் அச்சகம், புத்தகசாலையில் கடமை ஆற்றுபவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளக் கூடாது.

10 போட்டிபற்றிய விடயங்கள் யாவுக்கும் போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது

## பரிசு விபரம்

**முதலாவது பரிசு :**

ஒரு வருடம் விவேகி இலவசமாக அனுப்பப்படும்.

**இரண்டாவது பரிசு :** (இருவருக்கு)

அரைவருடம் விவேகி இலவசமாக அனுப்பப்படும்.


**மூன்ருவது பரிசு :** (இருவருக்கு)

கால் வடரும் விவேகி இலவசமாக அனுப்பப்படும்.

# 'விவேகி'

# குறுக்கெழுத்துப் போட்டி—48


கூப்பன் 1




## இடமிருந்து வலம்

1. --- தின்னக் கூலி வேண்டுமா ?
4. காணிக்கைப் பொருள்.
5. சுமை மாறி.
7. திருமணப் பேச்சின் போது மணமக்களின் இது தான் முதற் கவனிக்கப்பட வேண்டும்.
9. இதற்குப் பயப்படத்தானே வேண்டும்.
10. மறைந்திருக்கும் இம் மொழிக்கு எப்போது சுபீட்சம் வருமோ ?

கூப்பன் 2




## மேலிருந்து கீழ்

1. ஒவ்வொருவனும் தன்தன் இதை உணர்ந்து நடந்தால் உலகம் ஏன் சீர்கெடவேண்டும் ?
2. நெருப்பில்லாமல் இது வருமா ?
3. இது மனிதனை நல்வழிப் படுத்தும்.
6. பாம்பினத்தில் இஃது ஒரு வகை.
7. பெண்களுக்குரிய விளையாட்டு
8. தரம் உயர்ந்திருக்கிறது.

கட்டணம் 10 சத முத்திரை ஒன்று

பெயர் : ..............................................................

விலாசம் : ..............................................................

..............................................................

# 'விவேகி' குறுக்கெழுத்துப் போட்டி—47

## சரியான விடை :

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பு | ர | ட் | சி | | ம |
| து | | | ஊ | தெ | ன் |
| மை | ஞ | | | | ன |
| | | கா | த | க | ன் |
| கொ | ப் | பு | | ட | |
| லை | | ப் | | ன் | |

நாற்பத்தேழாவது போட்டிக்கு ஏராளமானோர் சரியான விடை அனுப்பியிருந்தார்கள். அவர்களில் ஐவர் தெரிவுச்சீட்டு மூலம் முறையே முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசில்களை பெறுகின்றனர்.

முதலாம் பரிசு :

எஸ். சுகிதர்தமலர், மெதடிஸ்த மிஷன் பாடசாலை,
முருங்கன்

இரண்டாம் பரிசு :

(1) அ. மரியான் சொய்சா 'அன்பகம்' வங்காலை.

(2) திரு. நா. க. தங்கரத்தினம், ஆசிரியர்
520/44, புளுமண்டல் வீதி, முகத்துவாரம், கொழும்பு—12

மூன்றும் பரிசு :

(1) எம். எச். எல். ஏ. அப்துல் காதர்,
133, கல்பொக்கை வீதி, வெலிகாமம்

(2) ஏ. எஸ். மகுமூது, மகா வித்தியாலயம், எருக்கலம்பிட்டி

இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம், 32, கண்டி வீதியில் உள்ள ஆசீர்வாதம் அச்சகத்தில் 20-12-63 இல் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பெற்றது.

# ஆசீர்வாதம் அச்சகம்-புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி : 274

## 'ஆசீர்' வெளியீடுகள் - விலை விபரம்

### படிமுறைக் கணிதம்

| | |
|---|---|
| 2 ஆம் வகுப்புக்குரியது | 1-25 |
| 3 ,, ,, | 1-50 |
| 4 ,, ,, | 1-75 |
| 5 ,, ,, | 2-00 |
| 6 ,, ,, | 2-00 |
| 7 ,, ,, | 2-00 |
| 8 ,, ,, | 4-00 |
| 9 ,, ,, | 6-00 |

### கணிதப் பயிற்சிகள் :

| | |
|---|---|
| J. S. C. வகுப்புக்கு உரியது | 1-60 |
| G. C. E. ,, (தமிழ்) | 1-60 |
| ,, ,, (சிங்களம்) | 1-60 |
| ,, ,, (ஆங்கிலம்) | 1-60 |

### கணித மாதிரிகை வினாக்கள் :

| | |
|---|---|
| 5 ஆம் வகுப்புக்கு உரியது | -60 |
| J. S. C. | -75 |
| G. C. E. ,, | 1-00 |
| ஆசிரிய கலாசாலை பிர:பரீட். | 1-00 |

### படிமுறை அட்சரகணிதம்

| | |
|---|---|
| 6 ஆம் வகுப்புக்குரியது | 1-60 |
| 7 ,, ,, | 1-60 |
| 8 ,, ,, | 1-75 |

| | |
|---|---|
| பயிலுந்தமிழ் 1-ம் பாகம் | 2-00 |

### இலக். விளக். பயிற்சியும் :

| | |
|---|---|
| 4 ஆம் வகுப்புக்கு உரியது | -70 |
| 5 ,, ,, | -80 |

### பிற நூல்கள் :

| | |
|---|---|
| சுந்தரகாண்டம் காட்சி-நிந்தனைப்படலம் | 1-75 |
| G.C.E. பாஷை மாதி. வினா | 1-25 |
| புதுஉலக சரித்திரம் | 7-75 |
| சம்ஸ்கிருத இலக்கண பயிற்சிப்புத்தகம் | 6-00 |
| சம்ஸ்கிருத சிஷாப் பிரதம சோபானம் | 1-00 |
| பூரணன் கதை | 2-50 |
| இலங்கைப் பூமிசாத்திர வினா விடை | 1-25 |
| நாடோடிப் பாடல்கள் | 1-50 |
| சிலப்பு பிறந்தது | 1 50 |
| வன்னியின் செல்வி | 1-50 |
| எஸ்தாக்கியார் நாடகம் | 1-50 |
| தென்னவன் பிரமராயன் | 1-00 |
| 'விவேகி'' மாதஇதழ் வருடசந்தா ... | 4-00 |

**ASIRVATHAM PRESS & BOOK DEPOT**

32, KANDY ROAD, JAFFNA

T'Phone: 274